# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (இ.தொ.தொ.ஒ.ஆ)

# ஆண்டறிக்கை

# 2015 ஆம் ஆண்டு

CM - 27388 - 65 (2018/11)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

# அதிமேதகு சனாதிபதியின் வாழ்த்துச் செய்தி.



முதலாவது கேபிள் வலையமைப்பு முறைமை நிறுவப்பட்ட 1880 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை தொலைத்தொடர்பு துறையானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியை கண்டிருக்கின்றது. இன்று இத்துறை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வருவதுடன், முக்கிய தொடர்பாடல் வசதிகளையும் வழங்கி வருகின்றது. 2015ஆம் ஆண்டளவில் தொலைபேசி பயன்பாட்டு வீதம் 116% ஆக அதிகரித்திருப்பதிலிருந்து இத்துறையின் வளர்ச்சியை தெளிவாகக் காணக் கூடியதாக இருக்கின்றது.

டிஜிட்டல் தொடர்பாடலானது உலகப் பொருளாதாரம் மற்றும் மனித வாழ்வியல் ஆகியவற்றை மிகப் பரந்த அளவிலும் துரிதமாகவும் மாற்றியுள்ளது. அத்தகைய மாற்றங்களின் தாக்கத்தை நம் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் உணரக்கூடியதாக இருக்கின்றது. இலங்கையர்கள் என்ற வகையில், இத்தகைய புதிய சவால்களையும் வாய்ப்புகளையும் நாமும் அனுபவித்திருக்கின்றோம். 2015ஆம் ஆண்டில் இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தொலைத்தொடர்புத் துறையின் அபிவிருத்திக்காக பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றியிருக்கின்றது. கிராமப்புற நிலையான மற்றும் செல்லிட தொலைபேசிச் சேவைகளின் விரிவாக்கம் மற்றும் கிராமப்புற தொலைத்தொடர்பு சேவைக்கான வாய்ப்பினை கணிசமாக அதிகரித்துள்ளமை மூலம் கிராமப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உண்மையான நன்மைகளை பெற்றுக்கொடுத்து வருகின்றது. மேலும், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சிறுவர் மற்றும் வர்த்தக சமூகத்திற்கு பாதுகாப்பான, ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதில் முன்னுரிமை அளித்திருப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் தொலைத்தொடர்பு அபிவிருத்தியானது, பாராட்டத்தக்க ஒரு இடத்தைப் பெற்றிருக்கின்றது. இது தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் செயற்திறமை மூலம் அடையப்பெற்றதாகும்.

2015 ஆம் ஆண்டில் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கடப்பாடுகளை கவனத்திற் கொண்டு, அலைவரிசை

பயன்பாடுகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை வழங்கப்பட்ட தடைநீக்கச் சான்றிதழ்களின் எண்ணிக்கை, செல்லிட தொலைபேசி பாவனை, உரிமையாளர்களின் எண்ணிக்கை, கிடைக்கப்பெற்ற வருமானம், தொலைத்தொடர்பு வரிகள் மற்றும் தீர்வைகள் போன்றன விரைவான முன்னேற்றத்தை காட்டியுள்ளன. ஆணைக்குழுவின் செயற்திறனை நிரூபிக்க இதுவே போதுமான சான்றாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொலைத்தொடர்பு துறையை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட கணிசமான பங்களிப்பும் பாராட்டத்தக்கதாகும்.

தொலைத்தொடர்பு துறையின் வளர்ச்சிக்காக எமது அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்கிவருவதுடன், 2015ஆம் ஆண்டில் இலங்கையின் தொலைத்தொடர்பு அபிவிருத்தி தொடர்பில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பங்களிப்பை பாராட்டுகிறேன். அத்தோடு இலங்கையின் தொலைத்தொடர்புகள் துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான அவர்களது சகல முயற்சிகளும் வெற்றிபெற வேண்டுமென வாழ்த்துகிறேன்.



மைத்ரிபால சிறிசேன

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேன்மைதங்கிய ஜனாதிபதி

2018 ஓகத்து 16ஆந் திகதி

# தலைவரின் செய்தி

தற்பொழுது ஆட்களினால் பூகோல ரீதியாக பயன்படுத்தப்படுகின்ற தகவல் மற்றும் தொழில் தொடர்பு நுட்ப முறைமை முழுமையாக டிஜிட்டல் யுகத்திற்கு மாற்றமடைந்துள்ளது. இந்த டிஜிட்டல் உலகின் ஊடாக ஏற்படுகின்ற தொழில் நுட்பம் சகலரது வாழ்க்கை போக்கினை மாற்றி வருகின்றது. தமது இனம் நோக்கிய பொறுப்பினை வகிக்கின்ற ஒரும்புருத்துகை நிறுவனம் என்ற வகையில் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்துதல் ஆணைக்குழு, எமது நாட்டின் அபிவிருத்தியுடன் இணைந்து, தற்பொழுது தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்பத்தினை துரிதமாக மேம்படுத்துவது தொடர்பில் ஈடுப்பட்டுள்ளது. இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்துதல் ஆணைக்குழு 2015ம் ஆண்டில் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடுகின்ற இந்த ஆணைக்குழு, இந்நாட்டின் மக்களுக்கு பெறுமதி மிகு சேவையினை வழங்கி வருகின்றது என்றதாகும்.

2015ம் ஆண்டில் வாடிக்கையாளர் அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் தொலைப்பேசி செயல்படுத்தும் கம்பனிகளுக்கான அலைவரிசைகளினை ஒதுக்கீடு செய்தல் தொடர்பில், உயர் முக்கியத்துவம் வழங்கியுள்ளது. 2015ம் ஆண்டு தொடர்பாக அலைவரிசைகளினை ஒருங்கீடு செய்தல் 2014ம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது நூற்றுக்கு 44% அதிகரிப்பாகும். அதே போன்று அலைவரிசை பயன்பாடு தொடர்பாக அனுமதிபத்திரம் விநியோகித்தல், 2014ம் ஆண்டோடு ஒப்பீடு செய்யும்போது நூற்றுக்கு 141% அதிகரிப்பினை காட்டுகின்றது. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் பற்றியும், அவ்வாறான முறைப்பாடுகள் 29 தொடர்பில் விசாரணைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆணைக்குழு 2015ம் ஆண்டில் வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் 851 மற்றும் நிறுவன ஒலிபரப்பு கடிதங்கள் 3304 வழங்கி உள்ளது. அதேபோன்று குறுகிய குறியீட்டு பயன்பாடு இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவினால் மக்களுக்கு வழங்குகின்ற பெறுமதி மிக்க

பரிசொன்றாக இருப்பதுடன் இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவினால் ஆண்டின் போது குறுகிய குறியீட்டு இலக்க பயன்பாட்டினை மேலும் பிரபல்யப்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகள் எடுத்தல், பாராட்டத்தக்க சேவையொன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2015ம் ஆண்டில் மேலும் தொலைத்தொடர்புகள் சேவையினை விரிவு படுத்தும்நோக்கில், புதிய தொலைத்தொடர்பு கோபுரங்கள் 93 நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மொத்த கோபுரங்களின் எண்ணிக்கை 6564 ஆகும். தற்பொழுது தொலைப்பேசி பாவனையில் புரட்சியொன்றினை ஏற்படுத்தி வருடத்தின்போது தொலைப்பேசி பாவனை நூ ற்றுக்கு 10% னால் அதிகரித்துள்ளது. எனினும் நிலையான தொலைப்பேசி பாவனை நூற்று 4% னால் குறைவடைந்துள்ளது. இலங்கையின் தொலைத் தொடர்பு துறையின் வரலாற்றில் விசேட பாரிய நிர்மாணிப்பொன்றாக "கொழும்பு தாமரை கோபுரம்" தற்பொழுது நிறைவடையும் நிலையில் இருப்பதுடன் 2017ம் ஆண்டின் இறுதி பகுதியில் அதனை நிர்மாணித்து நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆணைக்குழுவின் நிதிச்செயலாற்றுகை தொடர்பில் கவனம் செலுத்தும் போது இலங்கைத்தொலைத் தொடர்புகள் ஒழுங்குப்படுத்துகை ஆணைக் குழுவின் வருமானம் 2014 ம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது ரூபா 650 மில்லியன்களினால் மில்லியன் அதிகரிப்பொன்றினை காட்டுகின்றது. மீளாய்வு வருடத்தில் ஆணைக்குழு ரூபா 43,652 மில்லியன் தொகையினை திரண்ட நிதியத்திற்கு பங்களிப்பு செய்துள்ளது. இந்த தொகைக்கு மேலதிகமாக ரூபா 842 மில்லியன் அளவில் வரியாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்துக்கு மீளளிப்பு செய்துள்ளது. அதேபோன்று இவ்வாணைக்குழு இலங்கையின் பொருளாதாரத்தினை வலுபடுத்தும் நோக்கில் பாரியா பங்களிப்பொன்றினை வழங்கியிருப்பது மிகத்தெளிவாகும்.

நியாயமான போட்டிச்சந்தையினூடாக செயல்படுத்தப்படுகின்றதும் மக்களினால் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் தாங்கிக்கொள்ளக் கூடியதுமான தொலைத்தொடர்பு சேவையினை வழங்குவதினை, அடைந்து கொள்ளும் நோக்கில் தொலைத் தொடர்பு ஒழுங்குப்படுத்துகை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் உள்ளடங்களாக, பதவியணி வழங்குகின்ற பெறுமதி மிக்க ஒத்துழைப்பு வெகுவாக பாராட்டப்படுகின்றது.

தலைவர்

TRCSL

# உள்ளடக்கம்


பக்கங்கள்

01 அத்தியாயம்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) தோற்றம், நோக்கு, பணி, குறிக்கோள்கள் மற்றும் பொறுப்புக்கள் 1

02 அத்தியாயம்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) பணிப்பாளர்கள் மற்றும் சிரேட்ட முகாமைத்துவம் பற்றிய குறிப்புக்கள் 11

03 அத்தியாயம்

மீளாய்வு வருடத்தின் போது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) முன்னேற்த்தை மீளாய்வு செய்தல். 15

04 ஆம் அத்தியாயம்

ஆணைக்குழுவின் பிரிவுகளின் படி செயலாற்றுகை அறிக்கை 25

05 ஆம் அத்தியாயம்

கணக்காய்வுக் குழு அறிக்கை 63

06 ஆம் அத்தியாயம்

கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 69

07 ஆம் அத்தியாயம்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 127

**குறுஞ்சொல் பயன்பாட்டு அட்டவணை**

| | |
|---|---|
| APT | Asia Pacific Telecommunity<br>ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமூகம். |
| ARPU | Average Revenue per User<br>வெளியக Gat way செயற்படுத்துனர்கள். |
| CAPC | Cabinet Appointed Procurement Committee<br>அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட செயற்திட்ட அமுலாக்கல் குழு |
| CEIEC | China National Electronic Imports and Exports Corporation<br>சீன தேசிய இலத்திரனியல் இறக்குமதி ஏற்றுமதிக் கூட்டுத்தபானம் |
| CTO | Commonwealth Telecommunication Organization<br>பொதுநலவாய தொலைத்தொடர்பு அமைப்பு |
| DOA | Department of Agriculture<br>விவசாயத் திணைக்களம் |
| EGO | External Gateway Operator<br>வெளியக Gate way செயற்படுத்துனர்கள். |
| EOT | Extension of Timing<br>நேர விரிவு |
| EPF | Employee Provident Fund<br>ஊழியர் சேமலாப நிதியம் |
| ESC | Economic Service Charge<br>பொருளாதார சேவைகள் கொடுப்பனவு |
| FAO | Food and Agriculture Organization<br>உணவு மற்றும் விவசாய நிறுவனம |
| HSPA | High Speed Packet Access<br>உயர் வேக பொதி பிரவேசம் |

ICT Information and Telecommunications Technology
தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொழில் நுட்பம்

IT Information Technology
தகவல் தொழில் நுட்பம்

ITU International Telecommunication Union
சர்வதேச தொலைத்தொடர்புகள் ஒன்றியம்

JICA Japanese International Cooperation Agency
யப்பான் சர்வதேச உத்துழைப்பு முகவரகம்

MOU Memorandum of Understanding
புரிந்துணர்வு உடன்படிக்கை

MVNO Mobile Virtual Network Operators
கையடக்க தொலைபேசி வலையமைப்புச் செயற்படுத்துனர்கள்.

OLAC Outgoing Local Access Charges
வெளிச்செல்லும் உள்நாட்டு பிரவேசக் கட்டணங்கள்

PSTN Public Switching Telephone Network
மக்கள் தொடர்புபடும் தொலைபேசி வலையமைப்புகள்.

QOS Quality of Services
சேவைத்தரம்

SAFIR South Asian Forum for Infrastructure Regulation
உட்கட்டமைப்பு ஒழுங்குபடுத்துகைக்கான தென்னாசியப் பேரவை.

SATRC South Asian Telecommunication Regulators' Council
தென்னாசிய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துனர்களின் சம்மேளனம்.

SLLRDC Sri Lanka Land Reclamation & Development Corporation
இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்.

SU Surveillance Unit
விழிப்புணர்வு அலகு.

| | | |
|---|---|---|
| TEC | Technical Evaluation Committee<br>தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு |
| TL | Telecommunication Levy<br>தொலைத்தொடர்புத் தீர்வை |
| TMC | Telecommunications Media Center<br>தொலைத்தொடர்பு ஊடக நிலையம் |
| TDC | Telecommunication Development Charges<br>தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணங்கள் |
| TRCSL | Telecommunications Regulatory Commission of Sri Lanka<br>இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு |
| TSO | Telecommunications System Operators<br>தொலைத்தொடர்புகள் முறைமைச் செயற்படுத்துனர்கள் |
| YIL | Young ITC Leaders<br>இளம் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப (ITC) தலைவர்கள் |

## அட்டவணை


| | | பக்ககங்கள் |
|---|---|---|
| 03.01 | மொத்த கையடக்க மற்றும் நிலையான செயற்படுத்துனர் கம்பனிகளின் வாடிக்கையாளர் எண்ணிக்கை. | 17 |
| 03.02 | 2014 – 2015 ஆம் ஆண்டுக்கான வலையமைப்பு பிரிவுடன் இணைந்த புள்ளிவிபரங்கள். | 17 |
| 03.03 | விநியோகிக்கப்பட்ட முறைமைச் செயற்படுத்துனர்களின் அனுமதிப் பத்திரங்கள் – 2015 | 18 |
| 03.04 | வலையமைப்பு மற்றும் இலத்திரனியல் தபால் வாடிக்கயைாளர்களின் அதிகரிப்பு 2014 – 2015 | 19 |
| 03.05 | தொலைபேசி அழைப்புக்காலம் 2011 – 2015 | 20 |
| 03.06 | கையடக்க மற்றும் நிலையான பிரவேச தொலைபேசி செயற்படுத்துனர்களின் முதலீடு – 2015 | 20 |
| 04.01 | ஒதுக்கப்பட்ட அலைவரிசைகளின் எண்ணிக்கை – 2015 | 26 |
| 04.02 | வலையமைப்பு பயன்படுத்துனர்களுக்காக வெளியிடப்பட்ட அனுமதிப் பத்தரங்களின் எண்ணிக்கை. | 27 |
| 04.03 | 2015 ஆம் ஆண்டில் கிடைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் நடாத்தப் பட்ட விசாரணைகள் | 28 |
| 04.04 | 2015 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட சட்டமுரணான பயன்படுத்து னர்களின் எண்ணிக்கை மற்றும் பாதுகாப்புச் செயற்பாடுகள் | 28 |
| 04.05 | 2015 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட ஒளிபரப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை. | 29 |
| 04.06 | 2014 - 2015 தொடர்பான வலையமைப்பு பிரிவில் இணைந்த புள்ளி விபரங்கள் | 30 |
| 04.07 | 2015 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட குறுஞ்செய்திக் குறியீட்டு இலக்கங்கள் | 31 |

| | | |
|---|---|---|
| 04.08 | கையடக்க மற்றும் நிலையான தொலைபேசி செயற்படுத்துனர் கம்பனிகளின் வருமானம் மொத்த வருமானம் (2010 – 2015) | 33 |
| 04.09 | வாடிக்கையாளர் எண்ணிக்கை மற்றும் வருடாந்த ரீதியாக சதவீதங்களின் மாற்றம் 2010 – 2015 | 34 |
| 04.10 | பயன்படுத்துனர்களின் வருமானத்தின் சராசரி (ARPU) மற்றும் வருடாந்த சதவீதங்களின் மாற்றம் (2010 – 2015) | 35 |
| 04.11 | வரியின் பின்னரான நிகர இலாபம் – (நட்டம்) (2010 – 2012) | 36 |
| 04.12 | தொலைத்தொடர்பு வரி 2012 – 2015 | 36 |
| 04.13 | சேகரிக்கப்பட்ட செஸ் வரி 2012 – 2015 | 36 |
| 04.14 | இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக் குழுவினால் விதிக்கப்பட்ட பிரதியொன்றுக்கான உள்நாட்டு பிரவேச அழைப்புக்கட்டண வரி. | 37 |
| 04.15 | கையடக்க மற்றும் நிலையான பிரவேச செயற்படுத்துனர்களின் முதலீடு | 37 |
| 04.16 | சேகரிக்கப்பட்ட தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணங்கள் (TDC) – (2012 – 2015) | 37 |
| 04.17 | சர்வதேச அமைப்புகளுக்கான வருடாந்த பங்களிப்பு தொகையினை செலுத்தல் - 2015. | 40 |
| 04.18 | வெளிநாட்டு பயிற்சிகள் - 2015 | 49 |
| 04.19 | உள்நாட்டுப் பயிற்சிகள் - 2015 | 54 |

# வரைபடங்கள்

பக்கங்கள்

| | | |
|---|---|---|
| 04 - 01 | கையடக்க மற்றும் நிலையான தொலைபேசி செயற்பாட்டு கம்பனிகளின் மொத்த வருமானம் | 33 |
| 04 - 02 | வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை மற்றும் வருடாந்த சதவீதங்களின் மாற்றம் | 34 |
| 04 - 03 | பயன்படுத்துனர்களின் வருமானங்களின் சராசரி மற்றும் வருடாந்த சதவீதத்தின் மாற்றம். | 35 |
| 04 - 04 | வரியின் பின்னரான நிகர இலாபம் – நட்டம் | 36 |

# அத்தியாயம்

# 01

## இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL)
## தோற்றம், நோக்கு, பணி, குறிக்கோள்கள் மற்றும் பொறுப்புக்கள்

### தோற்றம்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு (திருத்தச்) சடடத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்டச் நிறுவனமாகும். மேலும், ஆணைக்குழு இலங்கையில் சகல தொலைத்தொடர்பு அலுவல்களை செயற்படுத்துகின்ற ஒரே சட்டரீதியான அதிகாரத்துடன் கூடிய நிறுவனமாகும்.

### ஆணைக்குழு மற்றும் கூட்டங்கள்

ஆணைக்குழு தற்போது ஐந்து அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. அதிமேதகு சனாதிபதியின் செயலாளர், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பதவிவழித் தலைவராக விளங்குகின்றார். பணிப்பாளர் நாயகம் ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக விளங்குவதுடன் அவர் ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் உள்ளார். ஏனைய இரண்டு உறுப்பினர்களும் ஆணைக்குழுவின் நிறைவேற்றுத் தரமல்லாத அங்கத்தவர்களாவர். அவர்கள் முறையே சட்டம், முகாமைத்துவம் மற்றும் நிதித் துறைகளில் சிறப்புற்று விளங்குபவர்களாக இருத்தல் வேண்டும்.

ஆணைக்குழு 2015 ஆம் ஆண்டில் ஆணைக்குழு ஆணைக்குழுவின் வருடாந்த வரவு செலவுத் திட்டம், நிர்வாகப் பிரச்சினைகள், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் இலங்கையில் சர்வதேச ஒழுங்குபடுத்தல் மாநாடுளை நடாத்துதல் என்பன தொடர்பான

விடயங்களைக் கலந்துரையாடுவதற்காக பல கூட்டங்களை நடாத்தியுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் ஆணைக் குழுவிற்குத் தேவையான தேவையான தீர்மானங்களை எடுப்பதற்கும் கோரிக்கைகளின் பொருத்தப்பாட்டுத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு தேவையனா அங்கிகாரங்களை வழங்கு வதற்கு இயலுமை கிடைத்துள்ளது.

## தொலை நோக்கு:

விஞ்ஞானபூர்வமான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளின் ஊடாக தொடர்பாடல் கைத்தொழிலை முன்னேற்றுவதில் உலகளாவிய மட்டத்திலான ஒரு முன்னணி நிறுவனமாகத் திகழ்வதனை உறுதிப்படுத்தல்.

## எமது பணி

தேர்ச்சிபெற்ற, நெறிமுறைகளைப் பின்பற்றும் ஊழியப் படையொன்றின் ஊடாக நீதியானதும் நியாயமானதுமான ஒரு போட்டிச் சந்தையின் மூலம் ஏற்கத்தக்க தரத்தைக் கொண்ட தாங்கிக்கொள்ளக் கூடிய விலைகளில் நாடு முழுவதிலும் சேவையினை வழங்குவதனை உறுதிப்படுத்தல்.

## பணிக்கூற்று விளக்கம்

நியாயம், போட்டித் தன்மை, முதலீடுகள் என்பவற்றை ஊக்குவிக்கும் சூழலொன்றை உருவாக்கி அதன் மூலம் இலங்கையின் நீண்ட காலத் தொடர்பாடல் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அனைத்துப் பங்காளர்களுடனும் சுயாதீனமான, திறந்த, வெளிப்படைத் தன்மையுடன் கூடிய முறையொன்றில் பணியாற்றுவதன் ஊடாகப் பாவனை யளர்கள் அனைவருக்கும் நீதியானதும் நியாயமானதும் வசதிக்கு ஏற்ற விலைகளில் முன்னேற்றகரமானதும் உயர் தரத்திலானதுமான தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைகள் கிடைப்பதை தொடர்புடைய உறுதிப்படுத்துதல்.

## குறிக்கோள்கள்

தொலைத்தொடர்புச் சட்டத்திற்கு இணங்க இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அடையப்பெற வேண்டிய பொதுக் குறிக்கோள்கள் வருமாறு:

- இலங்கையில் அவசரச் சேவைகள், போது அழைப்புப் பெட்டிச் சேவைகள், விபரக்கொத்துத் தகவல் சேவைகள், கடல்சார் சேவைகள், கிராமிய சேவைகள் உள்ளிட்ட தேசத்தின் உன்னத நிலைக்கு அத்தியவசியமானதாகக் கருதப்படும் தேசிய மற்றும் சர்வதேச தொலைத்தொடர்புச் சேவைகளுக்கான நியாயமான கேள்விகளைப்

பூர்த்தி செய்வதன் மூலம் நம்பகமானதும் வினைத்திறன்மிக்கதுமான தேசிய மற்றும் சர்வதேச தொலைத்தொடர்புச் சேவைகள் வழங்கப் படுவதை உறுதிசெய்தல்

- அனுமதிப்பத்திரங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள சேவை வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு சேவை வழங்குநரும் தேவையான தொழில்நுட்ப, நிதி மற்றும் முகாமைத்துவ வளங்களைப் பயன்படுத்தை உறுதி செய்தல்

- வழங்கப்படும் தொலைத்தொடர்புச் சேவைகள், தொலைத்தொடர்பு உபகரணங்கள் என்பவற்றுக்கான கட்டணங்கள் மற்றும் தரங்கள் தொடர்பில் நுகர்வோர், கொள்வனவாளர்கள் மற்றும் ஏனைய பயனர்கள் ஆகியோரினதும் போது மக்களினதும் நலன்களைப் பாதுகாத்து ஊக்குவித்தல்.

- தொலைத்தொடர்புடன் தொடர்புடைய வர்த்தக நோக்கத்திலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆட்கள் மத்தியில் பயனுறுதி வாய்ந்த போட்டித் தன்மையைப் பேணி ஊக்குவித்தலும் அத்தகைய ஆட்களின் வினைத்திறனையும் பொருளாதாரப் பகுதியையும் ஊக்குவித்தல்

- உள்நாட்டு மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு வசதிகளின் துரிதமானதும் நிலைபேறானதுமான அபிவிருத்தியை ஊக்குவித்தல்

- பொருத்தமற்ற தாமதங்களும் தடைகளும் இன்றிய நம்பகமானதும் வினைத்திறன் மிக்கதுமான சேவையை வழங்குவதில் சேவை வழங்குநர்கள் தங்களது கடப்பாடுகளை நிறைவேற்றக்கூடியவர்களாக உள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துதல்.

- தொலைத்தொடர்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் புதிய நுட்பங்களையு உருவாக்குவதற்கும் பயன்படுத்துவதற்குமான ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்

- இலங்கைக்கு வெளியே தங்களது வியாபார நிலையங்களைக் கொண்டுள்ள தொலைத்தொடர்புச் சேவைகளின் முக்கிய பயனர் களுக்கு இலங்கையினுள் வியாபார நிலையங்களை அமைப்பதற்கு ஊக்குவிப்பு வழங்குல்.

- இலங்கையின் சர்வதேச இடைமாறல் சேவைகளின் பயன்பாட்டை ஊக்குவித்தல்

## இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பொறுப்புக்கள்

இலங்கையில் தொலைத்தொடர்புத் துறைக்கான தேசிய ஒழுங்குபடுத்தலை மேற்கொள்ளும் ஒரு பிரதான அரசாங்க நிறுவனம் என்ற வகையில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பொறுப்பு, ஒழுங்கு படுத்தல் செயன்முறையைத் தொடர்ச்சியான முறையில் மீளாய்வு செய்து மறுசீரமைப்பதன் ஊடாக போது மக்களின் அக்கறைகளைப் பாதுகாப்பதும் சவால்களுக்கு முன்னோக்கிய செயன்பாட்டின் ஊடாக முகங்கொடுப்பதுமாகும். இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தொலைத் தொடர்புச் சேவைகளை வழங்குவதில்லை. மாறாக அது சேவை வழங்கு நர்களினால் வழங்கப்படும் சேவைகளை வினைத்திறன்மிக்கதாகவும் ஒழுங்கு படுத்தப்பட்ட முறையிலும் வழங்குவதற்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதுடன் இலங்கையில் உலகளாவிய தரத்திலான தொலைத்தொடர்பு வலையமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளை தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்களுக்கு வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. பின்வருவன அதன் முக்கிய பொறுப்புக்களாகும்:

1. சட்டத்தின் ஏற்பாடுகளை அமுலாக்குவதும் சேவை வழங்குநர்களுக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை களுக்கு இணங்கச் செயற்படுவதும்

2. அனுமதிப்பத்திரம்பெற்ற சேவை வழங்குநர்கள் மத்தியில் சுதந்திரமான, நியாயமான போட்டித்தன்மையினை ஊக்குவித்தல்

- சேவை வழங்குநர்கள் பொது மக்களின் அக்கறைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் இயங்குகிறார்களா என்பதையும் அவர்கள் பாகுபாடு காட்டாத நெறிமுறைகளைப் பின்பற்றுகிறார்களா என்பதையும் தீர்மானிப்பதற்காகப் போட்டித்தன்மையை கண்காணித்தல்.

- வலையமைப்புக்கள் மற்றும் சேவைகள் மத்தியில் சுமுகமான இடைத் தொடர்பை உறுதிப்படுத்துதல்.

- திறந்ததும், சுமையாக அமையாததும், வெளிப்படைத்தன்மை கொண்ட துமான அனுமதிப்பத்திரம் வழங்கலைச் சாத்தியப்படுத்தும் போதுவான கட்டமைப்போன்றை உருவாக்குதல்.

## 3. விலையிடல்

பொது மக்களால் தாங்கிக்கொள்ள முடியுமானதாக இருக்க வேண்டும் என்பதைக் கவனத்திற் கொண்டு தொலைத்தொடர்புச் சேவைகளுக்கு நியாயமான விலைகள் குறைக்கப்படுவதை உறுதிப்படுத்துதல்.

## 4. நுகர்வோர் பாதுகாப்பு

நுகர்வோராலும் போது மக்களாலும் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை நடாத்துவதன் ஊடாக நுகர்வோர் பாதுகாப்பை உரிய முறையில நடைமுறைப்படுத்துதலும் பொது மக்களின் பங்கேற்பையும், தொடர்பாடலையும் செவிசாய்ப்பதற்கான விருப்பத்தையும் உறுதிப்படுத்துதலும்.

## 5. சமூக ஒழுங்குபடுத்தல்

i. உலகளாவிய பிரவேசம் ;/ சேவைகள்

ii. கிராமிய சமுதாயங்கள், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு உலகளாவிய அணுகல் / சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துதல்.

iii. அவசர நிலைகளுக்கு முகங்கொடுக்கத் தயார்நிலையில் இருத்தல்

iv. அங்கவீனர்களுக்கு தொலைத்தொடர்புச் சேவைகளை கிடைக்கக் கூடியதாக்குதல்.

## 6. குறைந்த வசகதிகள் மற்றும் வரையறையான வளங்களை ஒழுங்கு முறைப்படுத்தல்.

i. அலைக்கற்றை முகாமை - (Spectrum Management)

ii. இலக்கமிடல் - (Numbering)

iii. வழிமுறைக்கான உரிமை - (Right of Way)

iv. இடப் பிரிப்பு - (Space Segment)

v. இடைத் தொடர்பு - (Interconnection)

vi. சர்வதேச தரையிறங்கல் நிலையங்களுக்கான அணுகல் - (Access to International Landing Stations)

vii. அடிப்படை முறைமைக்கான அணுகல் (Access to Backbone)

## 7. உயர் தரத்திலான தொலைத்தொடர்புச் சேவைகள்

பொது மக்களால் தாங்கிக்கொள்ள முடியுமானதாக இருக்க வேண்டும் என்பதைக் கவனத்திற் கொண்டு தொலைத்தொடர்புச் சேவைகளுக்கு நியாயமான விலைகள் குறைக்கப்படுவதை உறுதிப்படுத்துதல்.

## 8. நல்லாட்சியை ஊக்குவித்தல்

வெளிப்படைத்தன்மையுடன் கூடிய தீர்மானம் எடுக்கும் செயன்முறையை உறுதிப்படுத்துதல், பொது மக்களின் பங்கேற்பை ஊக்குவித்தல், அனாவசியமான தாமதங்களின்றி தீர்மானங்களை வழங்குதல்.

9. தீர்மானங்கள் நியாயமானவையாகவும் பக்கச்சார்பற்றவையாகவும் இருப்பதை உறுதிப்படுத்துதல்

11. இந்த நவீன தகவல், தகவல் தொடர்பாடல் யுகத்தில் "அறிவுபூர்வமான" சிவில் சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு உதவுதல்.

12. அனைத்துச் சேவை வழங்குநர்களும் சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கத்தினாலும் ஏனைய தொடர்புடைய சர்வதேச நிறுவனங்களினாலும் உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத் தரநியமங்கள் தொடர்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுவதை உறுதிப்படுத்துதல்.

## இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, மேற்குறித்த குறிக்கோள்களை அடையப் பெறுவதற்காகப் பின்வரும் ஒழுங்குபடுத்தல் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்றது:

- விண்ணப்பங்களை உள்ளீடு செய்து அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல்

1.1 தொலைத்தொடர்புச் சட்டத்தின் 17 பிரிவின் கீழ் இலங்கையில் தொலைத்தொடர்பு முறைமைகளை இயக்குவதற்கான அனுமதிப் பத்திரங்கள் அச்சட்டத்தின் 17 ஆம் பிரிவிற்கு இணங்க, இவ் ஆணைக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் அமைச்சரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழ் அன்றி எந்தவோர் ஆளும் இலங்கையில் எந்தவோர் தொலைத்தொடர்பு முறைமையையும் இயக்குவது

தடைசெய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அனுமதிப்பத்திரம் வழங்கல் தேவைப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்பட்ட சில அம்சங்கள் காணப்படு கின்றன. இந்த விலக்களிப்புக்கள் இச்சட்டத்தின் 20 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ளன.

1.2 வானொலி அதிர்வெண் மற்றும் வானொலி அதிர்வெண்களை வெளியிடும் உபகரணங்கள் என்பவற்றின் பயன்பாட்டுக்கான அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்புச் சட்டத்தின் பிரிவு 22 (1) இற்கு இணங்க, எந்தவோர் ஆளும் எந்தவோர் வானொலி அதிர்வெண்ணையும் அல்லது எந்தவோர் வானொலி அதிர்வெண் வெளியீட்டுச் சாதனத்தையும் இலங்கையினுள் அல்லது இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புக்குட்பட்ட பகுதியில் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட எந்தவோர் கப்பலிலும் அல்லது வானூர்தியிலும் பயன்படுத்துவது அந்நோக்கத் திற்காக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழ் அன்றி, தடைசெய்யப்பட்டுள்ளது.

1.3 சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் விற்பனையாளர் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்

இச்சட்டத்தின் 21(1) ஆம் பிரிவிற்கு இணங்க, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் மூலமான அதிகாரமின்றி எந்தவோர் நபரும் எந்தவோர் தொலைத்தொடர்பு உபகரணத்தை விற்பனை செய்வதோ, தயாரிப்பதோ, இறக்குமதி செய்வதோ, விற்பனைக்ககா வழங்குவதோ, உரிமை மாற்றும் செய்வதோ, வாடகைக்கு வழங்குவதோ, குத்தகைக்கு வழங்குவதோ காட்சிப்படுத்துவதோ, பராமரிப்பதோ, திருத்துவதோ தடைசெய்யப்பட்டுள்ளது.

## 2. கட்டணங்களை ஒழுங்குபடுத்தல்

2.1 இச்சட்டத்தின் பிரிவு 5 (கே) இன் கீழ் ஆணைக்குழுவுக்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அமைச்சரின் ஆலோசனையுடன் அரசாங்கத்தின் கொள்கைகளையும், வழங்கும் தொலைத்தொடர்புச் சேவைகளுக்கான சேவை வழங்குநர்களின் தேவைப்பாடுகளையும் கவனத்திற் கொண்டு கட்டணங்களையும், அத்தகைய கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கான முறைகளையும் தீர்மானித்தல்

2.2 சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் படி இடைத் தொடர்புக் கட்டணங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல் / கட்டணங்களைத் தீர்மானித்தல்.

3. அனுமதிப்பத்திரம்பெற்ற சேவை வழங்குநர்கள் சட்டத்திற்கும் (அதன் கீழ் அடங்கும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும்) அனுமதிப்பத்திரங் களுக்கும் இணங்கச் செயற்படுவதை கண்காணித்து உறுதிசெய்தல்.

4. வானொலி அதிர்வெண் அலைக்கற்றைகளின் முறையான பயன்பாட்டைக் கண்காணித்து உறுதிசெய்தலும் இலங்கையில் வானொலி அதிர்வெண் அலைக்கற்றைகளை முகாமைசெய்தலும்.

5. நுகர்வோர் முறைப்பாடுகளுக்குப் பதிலளித்தலும் விசாரணைகளை/புலன் விசாரணைகளை நடாத்துதலும்

இச்சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கு இணங்க, எவரேனும் ஒரு சேவை வழங்குநரினால் வழங்கப்படும் தொலைத்தொடர்புச் சேவை தொடர்பில் பாவனையாளரினால் அல்லது போது மக்களால் முறைப்பாடுகள் செய்யப்படுமிடத்து, இவ் ஆணைக்குழு அம்முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை நடாத்தி தேவையைப் போறுத்து பரிகார நடவடிக்கைகளை எடுக்கும்.

இச்சட்டத்தின் பிரிவு 9(1) இன் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவோர விசாரணையின் போதும் அம்முறைப்பாடு செய்யப்படுவதற்கு காரணமாக அமைந்த காரணத்தை அல்லது விடயத்தைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொருத்தமானது எனக் கருதுமிடத்து நிதிரீதியான பரிகாரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சேவை வழங்குநரைப் பணிக்க முடியும் என்று இச்சட்டத்தின் பிரிவு 9 (2) கூறுகின்றது.

6. தொலைத்தொடர்புச் சேவைகளின் தரத்தையும் பல்வகைமையையும் உறுதிப்படுத்துவதற்கான தரமான சேவைத் தரநியமங்களை உருவாக்குதல்.

7. ஆணைக்குழுவின் கட்டளைகளை, வழிகாட்டல்களை மற்றும் தீர்மானங்களை வெளியிடுதல்

8. கட்டளைகளையும், வழிகாட்டல்களையும் தீர்மானங்களையும் வெளியிடு வதில் வெளிப்படைத்தன்மை கொண்ட கொள்கையொன்றை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு பின்பற்றி வருகின்றது.

பகிரங்க விசாரணைகள் மற்றும் ஏனைய மன்றங்களில் பங்குபற்றுநர்கள், நுகர்வோர் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் ஆகியோருக்குப் பங்குபற்றுவதற்கும் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதற்குமான சிறப்பான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

9. தொலைத்தொடர்புச் சாதனங்கள் மற்றும் வகை அங்கீகாரத்திற்குமான விசேட தொழில்நுட்பத் தர நியமங்களை வரையறை செய்தல்

## பிரிவுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளை பல்வேறு பிரிவுகள் மேற்கொள்கின்றன. உரிய பிரிவுகளின் பிரதான தொழிற்பாடுகள் மற்றும் செயலாற்றுகை தொடர்பான விபரங்கள் பின்னால் வரும் அத்தியாயங்களில் விபரிக்கப்பட்டுள்ளன. சில செயற்பாடுகள் குறித்தொரு பிரிவின் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அத்தகைய செயற்பாடுகள் குறித்த பிரிவின் கீழ் ஏனைய பிரிவுகளின் ஒத்துழைப்புடனேயே மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இங்கு குறிப்பாகக் கவனத்திற் கொள்வது பொருத்தமானதாகும்.

## அத்தியாயம்

## 02

# 2015 ஆம் ஆண்டில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் (TRCSL) பணிப்பாளர்கள் மற்றும் சிரேட்ட முகாமையின் உள்ளடக்கம்

**ஆணைக்குழு**

| | | |
|---|---|---|
| திரு. பீ.பி. அபேகோன் | - | தலைவர் |
| திரு. சுனில் எஸ். சிரிசேன | - | பணிப்பாளர் நாயகம், அங்கத்தவர் 2015.10.14 ஆம் திகதி முதல் முன்நோக்கி |
| திரு. லலித் சேனாநாயக்க | - | அங்கத்தவர் |
| திரு. பண்டார திசாநாயக்க | - | அங்கத்தவர்கள் |
| திரு. எம்.எம். சுஹைர் | - | அங்கத்தவர் 2015.10.12 ஆம் திகதி வரை |
| திரு. பராக்கிரம கருணாரத்ன | - | அங்கத்தவர் 2015.10.12 வரை |

**தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பிரதான பதவியணியினர்**

| | | |
|---|---|---|
| திரு. எம்.எம். சுஹைர் | - | பணிப்பாளர் நாயகம், 2015.10.12 ஆம் திகதி வரை |
| திரு. சுனில் எஸ் சிரிசேன | - | பணிப்பாளர் நாயகம், 2015.10.12 ஆம் திகதி வரை |

**ஆணைக்குழு அலுவலகம்**

| | | |
|---|---|---|
| திரு. ஆர்.எஸ். குணரத்ன | - | பதில் ஆணைக்குழுச் செயலாளர் |

**நிர்வாகம் மற்றும் நிறுவன அலுவல்கள், பொருளாதார மற்றும் சட்ட அலுவல்கள்**

| | | |
|---|---|---|
| திரு. யூ.எச்.சீ பிரியன்த | - | பிரதிப் பணிப்பாளர் நாயகம், நிர்வாகம் மற்றும் நிறுவன அலுவல்கள் |

1. பதில் கடமை பிரதிப் பணிப்பாளர் நாயகம், பொருளாதார மற்றும் சட்ட அலுவல்கள்

**நிர்வாக மற்றும் நிறுவன அலுவல்கள் பிரிவு**

| | | |
|---|---|---|
| திரு. ஈ.எல்.கே. திஸாநாயக | - | பிரதிப் பணிப்பாளர் |
| திரு. டபிள்யு.எல்.ஏ.கே.ஏ. குணதிலக | - | உதவிப் பணிப்பாளர் |

**நிதிப்பிரிவு**

| | | |
|---|---|---|
| திரு.எம்.கே. ஜயன்த | - | பணிப்பாளர் |
| திரு.ஆர்.பி. அபேயதீர | - | பிரதிப் பணிப்பாளர் |
| திரு. ஏ.எஸ். ஹபுஆரச்சி | - | பிரதிப் பணிப்பாளர் |

**இணக்கப்பாட்டுப் பிரிவு**

| | | |
|---|---|---|
| திருமதி/செல்வி ஆர்.எம்.ரீ.கே.பீ. லிவேரா | - | பிரதிப் பணிப்பாளர் |
| திருமதி/செல்வி எச்.பீ.எச்.எம். பதிரண | - | பிரதிப் பணிப்பாளர் |

**போட்டித்தன்மைப் பிரிவு**

| | | |
|---|---|---|
| திரு. எச்.டபிள்யு.கே. இந்திரஜித் | - | பிரதிப் பணிப்பாளர் |
| திரு. நிஷாந்த பலிஹகவடன | - | பிரதிப் பணிப்பாளர் |
| திருமதி/செல்வி சிரியானி மாவல்லகே | - | பிரதிப் பணிப்பாளர் |

**சட்ட அலுவல்கள்**

| | | |
|---|---|---|
| திருமதி/செல்வி ஜீ.சீ.பீ. மொரகொட | - | பிரதிப் பணிப்பாளர் |
| திருமதி/செல்வி குணரத்ன | - | பிரதிப் பணிப்பாளர் |
| திருமதி/செல்வி எல்.எஸ.பீ. ரொட்ரிகோ | - | உதவிப் பணிப்பாளர் |
| திரு. ஐ.என். மெத்தியூவ் | - | உதவிப் பணிப்பாளர் |

**அலைக்கற்றை முகாமைப் பிரிவு**

| | | |
|---|---|---|
| திரு.எச்.பீ கருணாரத்ன | - | பணிப்பாளர் |
| திரு. எல். கணேஷமூர்த்தி | - | பிரதிப் பணிப்பாளர் |
| திரு. ஈ.என்.பீ.கே. ரத்னபால | - | பிரதிப் பணிப்பாளர் |
| திரு. எம்.சீ.எம். பாஷரூக் | - | பிரதிப் பணிப்பாளர் |
| திரு.ஜே.ஏ.எஸ். குணானந்த | - | பிரதிப் பணிப்பாளர் |
| திருமதி.'.செல்வி எஸ்.ஏ.ஆர். கமலானயனா | - | பிரதிப் பணிப்பாளர் |
| எம்.பீ. குணசிங்ஹ | - | பிரதிப் பணிப்பாளர் |

**வலையமைப்புப் பிரிவு**

| | | |
|---|---|---|
| திரு.ஆர்.ஜீ.எச்.கே. ரணதுங்க | - | பணிப்பாளர் |
| திருமதி/செல்வி கே.எஸ்.எம். விசாகா | - | பிரதிப் பணிப்பாளர் |
| திரு. எஸ்.ஈ. வகிஸ்ட | - | பிரதிப் பணிப்பாளர் |
| திரு.ஐ.எம். ஜவ்சி | - | உதவிப் பணிப்பாளர் |

**கொள்கை, சர்வதேச உறவுகள் மற்றும் அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவு**

| | | |
|---|---|---|
| திரு. எம்.கே. ஜயசேகர | - | பணிப்பாளர் |
| திரு. ஆர்.எம்.ஜே.கே.பி. ரத்நாயக | - | பிரதிப் பணிப்பாளர் |

**செயற்திட்ட மற்றும் ஆய்வுப் பிரிவு**

திரு. டபிள்யு.டி.டி அல்விஸ்

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

| | | |
|---|---|---|
| திருமதி/செல்வி யு.ஏ. சமரதுங்க | - | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் |

## Organization Structure – T.R.C.S.L



# அத்தியாயம்

# 03

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (இ.தொ.தொ.ஒ.ஆ TRCSL) பணிப்பாளர் நாயகத்தினால் 2015 ஆம் ஆண்டின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புச் சட்டம் என்ற பெயரைக் கொண்ட முதன்மைச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்காகச் சட்டமாக்கப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு (திருத்தச்) சடடத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்டச் நிறுவனமாகும். இவ் அறிக்கையில் “சட்டம்” என்ற வாசகம் 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தைக் குறிக்கும் அதேவேளை “ஆணைக்குழு” என்ற வாசகம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவைக் குறிக்கின்றது.

இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவானது, 1996ம் ஆண்டின் 27ம் இலக்க தொலைத்தொடர்புகள் சட்டத்தினூடக, திருத்தப்பட்டவாறான 1991ம் ஆண்டின் 25ம் இலக்க தொலைத்தொடர்புகள் சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட இலங்கைத் தொலைத் தொடர்புகள் சேவையுடன் இணைந்த, சகல செயற்பாடுகள் தொடர்பில் செயல்படுவதற்கு அதிகாரம் பெற்ற நிறுவனமாகும். சட்டம் மட்டுமல்லாது, நாட்டின் அபிலாஷையின் பிரகாரம் ஆணைக்குழு அபிவிருத்தியடைந்த உலகில் பயன்படுத்தப்படுகின்ற நவீன தொலைத்தொடர்பு தொழில் நுட்பங்கள், மட்டும் உபகரணங்களை வழங்கி மிகவும் வினைத்திறனான மற்றும் செயற்திறனான சேவை

யொன்றினை நோக்கி, தொலைத்தொடர்பு சேவையினை செயல்படுத்துகின்றது. இது தொடர்பில் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஆணைக்குழு, மக்களுக்கு மட்டுமல்லாது இந்நாட்டிற்கு தொலைத்தொடர்பு, கைத்தொழில் துறைக்கு அதிகமாக நலன்களை வழங்கும் பெறும்பிரகாரம், போட்டித் தன்மையான சேவையினை வழங்குவதற்கு அத்தியாவசியமான மற்றும் கட்டாயமான விடயமாக, தனியார் துறையின் செயற்பாடுகள் பங்குபற்றலினை சாத்தியப் படுத்துவதற்கு மட்டுமல்லாது, ஊக்கப்படுத்துவதற்கும் முக்கியமான பணிகளினை மேற்கொண்டு வருகின்றது. தொலைத்தொடர்புகள் கைத்தொழில்கள் மற்றும் தொழில் நுட்ப உலகில் எந்தவொரு பொருளாதாரத்திற்கும், மிகவும் துரிதமாக அபிவிருத்தியடைகின்ற துறையாக இருப்பதுடன், அதன் காரணமாக மேம்படுத் தப்பட்ட தொலைத்தொடர்பு உலகம் பற்றிய பாதுகாப்பான மட்டுமல்லாது துரித அவதானத்துடன் இருத்தல், இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஆணைக் குழுவின் பிரதான பணியாகும்.

இந்த மீளாய்வு கால எல்லையினுள் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு இத்துறையில் நவீன தொழில் நுட்பங்களை இந்நாட்டிற்கு கொண்டு வரும் நோக்கில் தனியார் துறையினை ஊக்கப்படுத்துவதற்கு இயலுமை பெற்றுள்ளது. மூன்றாவது பரம்பரை மற்றும் நான்காவது பரம்பரை அதிவேக பொதி பிரவேசம் ஒலித் தொடர்பாடல் தொடர்பான பிரவேசம் வீடியோ கலந்துரையாடல்கள் வீடியோ பிரவேசம் கையடக்க தொலைப்பேசி தொலைக்காட்சி, இசை பிரவேசம் மற்றும் அதிவேக இணையத்தள வலயமைப்பின் ஊடாக செயல்படுத்தப்படுகின்ற, அதிவேக இணையத்தள சேவை தொடர்பாக காணப்படுகின்ற கேள்விகள் போன்ற சில விடய துறைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்துவதற்கு இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு இயலுமை கிடைத்துள்ளது. 2015ம் ஆண்டில் கையடக்கத் தொலைப்பேசி பயன்பாடு அதிகரித்துச் செல்லும் போக்கொன்று காணப்பட்டது. இலங்கையின் மொத்த சனத்தொகை சராசரியாக 21 மில்லியனாக இருக்கின்ற அதே வேளை, இதில் 18 மில்லியன் கையடக்கத் தொலைபேசியினை பயன்படுத்துகின்றதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இது அபிவிருத்தி அடைந்த நாடொன்றின் மட்டத்திற்கு ஒப்பீடாக 90% மாகும்.

2015ம் ஆண்டுவரை கடந்த ஆறு வருட காலத்தினுள் தொலைபேசி வாடிக்கையாளர்களின் அடிப்படை பாரிய அளவில் அதிகரிப்பு மேலும் இவ்வாறாக விளங்கப்படுத்த முடியும். 2015ம் ஆண்டு டிசம்பர் 31ந் திகதியாகும் போது கையடக்கத் தொலைபேசி வாடிக்கையாளர் அடிப்படை 24,384,544 ஆக இருப்பதுடன் நிலையான தொலைபேசி வாடிக்கையாளர் அடிப்படை

2,601,196 என்ற எண்ணிக்கையாக காணப்படுகின்றது. 2015 டிசம்பர் 31ம் திகதி ஆகும் போது கையடக்கத் தொலைபேசி செறிவு மட்டம் 116 சதவீதத்திலும் அதிகரித்துள்ளது. 2015ம் ஆண்டின்போது கடந்த வருடத்தோடு ஒப்பீடு செய்யும்போது கையடக்கத் தொலைபேசி வாடிக்கையாளர் அடிப்படையில் 10 சதவீத அதிகரிப்பொன்று காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2015ம் ஆண்டில் நிலையான தொலைபேசி பிரவேச வாடிக்கையாளர் அடிப்படை 4 சதவீத வீழ்ச்சியொன்றினை வெளிக்காட்டி உள்ளது.

**அட்டவணை – 03.01**

**நிலையான மற்றும் கையடக்க தொலைப்பேசி செயல்படுத்தும் கம்பனிகளின் மொத்த வாடிக்கயைாளர்களின் எண்ணிக்கை (2010-2015) (ரூபா மில்லியன்களில்)**

| Category | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | % மாற்றம் 2010-2011 | % மாற்றம் 2011-2012 | % மாற்றம் 2012-2013 | % மாற்றம் 2013-2014 | % மாற்றம் 2014-2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையடக் கத் தொலை பேசி | 17,267,407 | 18,319,447 | 20,324,070 | 20,447,508 | 22,123,000 | 24,384,544 | 6% | 11% | -0.04% | 8% | 10% |
| நிலை யான பிரவேசம் | 3,578,463 | 3,608,392 | 3,449,391 | 2,706,787 | 2,709,848 | 2,601,196 | 1% | -4% | -22% | 0.1% | -4% |
| மொத்தம் | 20,845,870 | 21,927,839 | 23,773,461 | 23,154,295 | 24,832848 | 26,985,740 | 5% | 8% | -3% | 7% | 9% |

வலயமைப்பு பிரிவினால் வானொலி அலைவரிசை பயன்படுத்துனர்களுக்காக விநியோகிக்கப்பட்ட அனுமதி பத்திரங்கள் மற்றும் அதன் வளர்ச்சி பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை – 03.02**

**வலையமைப்புப் பிரிவுடன் தொடர்புடைய 2014 - 2015 ஆம் ஆண்டுக்கான புள்ளி விபரங்கள்**

| விபரம் | 2014 | 2015 |
|---|---|---|
| வழங்கப்பட்ட விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை | 867 | 851 |
| நிர்மாணிக்கப்பட்டுள்ள கோபுரங்களின் திரட்டு எண்ணிக்கை | 6471 | 6564 |
| கோபுரங்கள் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாடுகள் மொத்த எண்ணிக்கை | 90 | 122 |
| கையாளப்பட்ட (கோபுரங்கள் தொடர்புடைய) புலன் விசாரணைகளின் மொத்த எண்ணிக்கை | 25 | 51 |

| விபரம் | 2014 | 2015 |
|---|---|---|
| கோபுரங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 4 | 2 |
| பொது மக்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்பு நிகழ்ச்சிகளின் மொத்த எண்ணிக்கை | 9 | 11 |
| வழங்கப்பட்ட இறக்குமதி விடுவிப்புக்களின் மொத்த எண்ணிக்கை | 46 | 20 |
| வழங்கப்பட்ட இறக்குமதி விடுவிப்புக்களின் மொத்த எண்ணிக்கை | 3884 | 3304 |
| தனிப்பட்ட விடுவிப்புக்களின மொத்த எண்ணிக்கை | 27 | 18 |
| வழங்கப்பட்ட புதிய சுருக்க இலக்கங்களின் திரட்டு எண்ணிக்கை | 44 | 52 |

இலங்கையில் தொலைத்தொடர்பு துறையின் பிரதான பணியினை மேற்கொள்கின்ற தொலைத் தொடர்புகள் கட்டமைப்பு செயல்படுத்துனர்கள். (TSO) 2015ம் ஆண்டின் போது கீழ் குறிப்பிட்ட பிரகாரம் திறமை செயல்படுத்துனர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் 28 விநியோகிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 03.03**

**விநியோகிக்கப்பட்ட முறைமை செயற்படுத்துனர்களின் அனுமதிப்பத்திரம் - 2015**

| சேவையின் வகை | அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிலையான பிரவேச தொலைபேசிச் சேவை | 03 |
| செலியுலர் கையடக்க தொலைபேசி சேவைகள் | 05 |
| தரவு தொடர்பாடல் (வசதிகளை அடிப்படையாகக் கொண்ட) சேவைகள் | 03 |
| தரவு தொடர்பாடல் (வசதிகளை அடிப்படையாகக் கொண்ட) மற்றும் இணையதள சேவைகளை வழங்குனர்கள்) | 01-09 |
| நீண்ட தூர கையடக்க வானொலி சேவைகள் | 01 |
| குத்தகைக்கு எடுக்கப்பட்ட அலைக்கற்றை வழங்குனர்கள் | 01 |
| அனுமதிப்பத்திரம் பெற்ற பேபோன் சேவை வழங்குனர்கள் | 01 |
| வெளியக பிரவேச செயற்படுத்துனர்கள் | 07 |
| நேரடி உள்நாட்டு செய்மதி ஒளிபரப்பு சேவைகள் | 04 |
| கம்பி வழி தொலைக்காட்சி பரிவர்த்தனை வலையமைப்பு சேவைகள் | 03 |

மீளாய்வு வருடத்தில் இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் வாடிக்கை யாளர்களின் எண்ணிக்கையில் கருதத்தகு அதிகரிப்பொன்று காட்டப்பட்டுள்ள துடன் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் தொலைத் தொடர்புகள் துறையின் பூகோல அபிவிருத்தியினை மேலும் மேற்கொள்ளுதல் தற்பொழுது தனியார் மற்றும் அரச துறைகளின் செயற்பாடுகளில் எண்ணியல் மற்றும், எண்ணியல் ஒரு பகுதியாக காணப்படுகின்றது. இந்த பூ கோல கிராம பிரவேசத்தின் போது இணையத்தள மற்றும் இணைய மின்னஞ்சல் விசேஷ நிதி மற்றும் வங்கித் துறையில் துரித ஊடகமாக உருவெடுத்துள்ளது.

**அட்டவணை – 03.04**

இணையத்தள மற்றும் இலத்திரனியல் தபால் வாடிக்கையாளர்களின் முன்னேற்றம் 2004 - 2015

| ஆண்டு | வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை | | | வளர்ச்சிச் சதவீதம் (%) | | |
|---|---|---|---|---|---|---|
| | நிலை யான இணை யதள சேவை கள் | கையடக்க இணையதள சேவைகள் | நிலையான மற்றும் கையடக்க அதிவேக இணைய தள சேவைகள் | நிலை யான இணைய தள சேவை கள் | கையடக்க இணையதள சேவைகள் | நிலையான மற்றும் கையடக்க அதிவேக இணையதள சேவைகள் |
| 2004 | 93444 | | 93444 | 9.3 | | 9.3 |
| 2005 | 115000 | | 115000 | 23.1 | | 23.1 |
| 2006 | 130000 | | 130000 | 13.0 | | 13.0 |
| 2007 | 202348 | | 202348 | 55.7 | | 55.7 |
| 2008 | 234000 | | 234000 | 15.6 | | 15.6 |
| 2009 | 249756 | 91359 | 341115 | 6.7 | | 45.8 |
| 2010 | 302000 | 200000 | 502000 | 20.9 | 118.9 | 47.2 |
| 2011 | 359000 | 485000 | 844000 | 18.9 | 142.5 | 68.1 |
| 2012 | 433194 | 942461 | 1365655 | 17.9 | 94.3 | 61.8 |
| 2013 | 507845 | 1664003 | 2171848 | 20.0 | 76.6 | 59.0 |
| 2014 | 606100 | 2790195 | 3396295 | 19.3 | 67.7 | 56.4 |
| 2015 | 682512 | 3408408 | 4090920 | 12.6 | 22.2 | 20.5 |



4 - CM 27388

அதே போன்று 2011 முதல் 2015 வரையான காலத்தினுள் கிடைக்கின்ற மற்றும் வெளிச் செல்கின்ற அழைப்புக்களின் மொத்த அழைப்புக் காலம் 77,603 முதல் 91,683 (இலட்சம் நிமிடங்கள்) வரை வளர்ச்சியடைந்ததுடன் அலைக் கற்றை ஆவணம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை – 03.05**

**தொலைபேசி அழைப்புக் காலம் 2011 – 2015 (மில்லியன் நிமிடங்கள்)**

| ஆண்டு | கிடைக்கின்ற அழைப்புக்கள் | | | வெளிச்செல்லும் அழைப்புக்கள் | | | கிடைக்கின்ற மற்றும் வெளிச் செல்லும் அழைப்புக் கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | உள்நாட்டு | சர்வதேச | உள்நாட்டு மற்றும் சர்வதேச | உள்நாட்டு | சர்வதேச | உள்நாட்டு மற்றும் சர்வதேச | |
| 2011 | 37684 | 1977 | 39661 | 37248 | 694 | 37942 | 77603 |
| 2012 | 41579 | 2023 | 43602 | 41425 | 711 | 42136 | 85738 |
| 2013 | 41633 | 1936 | 43569 | 41044 | 687 | 41731 | 85300 |
| 2014 | 43436 | 1934 | 45370 | 43616 | 656 | 44272 | 89642 |
| 2015 | 44757 | 1592 | 46349 | 44758 | 576 | 45334 | 91683 |

தொலைத்தொடர்பு கைத்தொழில் போட்டித்தன்மையான மற்றும் இலாபகரமான தொழில் முயற்சித் துறையாக இருப்பதனால் 2015 ஆம் ஆண்டில் கையடக்க மற்றும் நிலையான பிரவேச தொலைபேசி ஆகிய இரண்டிலுமான முதலீடுகள் 49 பில்லியன்களுக்கு அண்மித்த வளர்ச்சியை கொண்டது. விளக்கம் கீழே காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை – 03.06**

**கையடக்க மற்றும் நிலையான பிரவேச தொலைபேசி செயற்படுத்துனர் கம்பனிகளின் முதலீடுகள் - 2015 (ரூபா மில்லியன்களில்)**

| வகை | 2015 |
|---|---|
| கையடக்க தொலைபேசி | 22,703 |
| நிலையான பிரவேசம் | 26,245 |
| **மொத்தம்** | **48,948** |

சர்வதேச தொலைத்தொடர்பு சங்கம் மற்றும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு செயற்திட்டம் பாடசாலை ஒழுங்கிணைப்பினூடாக மக்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்தி யுள்ளதுடன் இந்த பாடசாலை ஒழுங்கிணைப்பு ஊடாக மக்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 8560 மாணவர்கள் மற்றும் 34 பாடசாலைகள் தொடர்பாக பயன்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் இதன் மேலதிக மேம்பாட்டுக்காக கல்வி அதிகாரிகளினை அறிவுத்துதல் செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசேட தேவைகளுடன் கூடியவர்கள் மற்றும் இத்துறையின் வகுதியினருக்கு வசதிகளினை வழங்கும் முகமாக வெளிநாட்டு அமைப்புக்கள் மட்டுமல்லாது தன்னார்வலர் அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் கூட்டங்கள் செயலமர்வுகள் மட்டுமல்லாது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. சீதுவ மற்றும் வவுனியா தொழிற்பயிற்சி நிலையங்கள் விசேட தேவையுடன் கூடியவர்களுக்கான கொரிய சர்வதேச தகவல் தொழில் நுட்ப தன்னார்வலர் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பயிற்சித்திட்டங்கள் பல நடாத்தப்பட்டுள்ளன.

அ. தென்னாசிய தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களின் சங்க நாடுகளில் வானொலி அலைவரிசைகளினை மீள தயார் செய்தல்.

ஆ. தென்னாசிய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துனர்களின் சங்க நாடுகளில் சர்வதேச கையடக்க தொலைபேசி அலைவரிசைகளுக்கான வானொலி அலைவரிசை உபகரணங்களுக்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

இ. தென்னாசிய தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களின் சங்க நாடுகளிற்காக ஒழுங்குறுத்துகை பரிமாற்றல்களைச் செய்து வலையமைப்பு பணிகளினை மேம்படுத்தல். (வலையமைப்பு நிச்சயமற்ற தொடர்புகளுக்கான செயற் பாடாத வலையமைப்புக்களினை பரிமாற்றம் செய்தல்)

ஈ. கையடக்க தொலைபேசிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற வலையமைப்பு வீச்சுகளின் கதிர்வீச்சல்லாதவற்றிலிருந்து பாதுகாப்பினை வழங்குதல்.

இந்த அத்தியாயத்தில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத் துகை ஆணைக்குழு (ERCSL) சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் (IPU) ஒத்துழைப்புடன் 2015 யூலை மாதம் 28 முதல் 30ஆந் திகதி வரை கொழும்பு (cloud computing) பற்றிய கருத்தரங்கினை நடாத்தியதுடன் இங்கு cloud computing பற்றிய எதிர்கால போக்குகள் மட்டுமல்லாது

ஒழுங்குபடுத்துகை விடயங்கள் பற்றியும் வகுதியினருக்கிடையில் விழிப் பூட்டலினை ஏற்படுத்துதல் மட்டுமல்லாது இந்த விடயம் பற்றி அவர்களுக்கு அனுபவத்தினைப் பரிமாறிக்கொள்ளும் முகமாக கவனம் செலுத்தப்பட்டது.

2015ஆம் ஆண்டில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் சர்வதேச தொலைத்தொடர்பு சங்கம் மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) அமைப்பின் ஒத்துழைப்புடன் மற்றும் விவசாயத்தினை (DOA) மற்றும் வேறு அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் “விவசாய உபாயமுறைகள்” பற்றிய செயலமர்வொன்று நடாத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தின் இறுதியில் உபாயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் விவசாய கேந்திர நிலையத்தின் தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப அபிவிருத்தி முக்கியமாக பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக இலங்கை தொடர்பாக “விவசாய உபாயங்கள்” இனை தயார்செய்தல் இதன் நோக்கமாகும்.

அதேபோன்று தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப குறிகாட்டிகளினை மதிப்பீடு செய்தல் தொடர்பாக பூகோள தகவல்களினை சேகரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல் தொடர்பாக “உலக தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப குறிகாட்டிகள்” பற்றிய மிக முக்கியமான மதிப்பீடொன்று செய்யவேண்டியேற்பட்டது. அரச நிறுவனங்கள் சர்வதேச நிறுவனங்கள் அபிவிருத்தி வங்கி மற்றும் உலகம் பூராக வேறு நிறுவனங்களினால் இந்த தகவல் மற்றும் தகவல் தொழில் நுட்ப குறிகாட்டிகள் தொடர்பில் உறுதியான நம்பிக்கை வைக்கப்பட்டுள்ளது. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு இது தொடர்பில் அடைந்து கொண்ட விடயங்கள் தொடர்பில் திருப்தியடை கின்றோம்.

மேற்படி செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு சகல வருடங்களிலும் மேமாதம் 17ஆந் திகதி “உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம்” இனை கொண்டாடி வருகின்றது.

தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் பற்றிய கவனத்தினை செலுத்துதல் மக்கள் இத்தினத்தில் இதன் முக்கியத்துவம் பற்றி அறிவுறுத்தி அதிமேதகு சனாதிபதி கௌரவ பிரதம அமைச்சர் கௌரவ தொலைத்தொடர்பு மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப

அமைச்சர் சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் செயலாளர் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவின் தலைவர் மட்டுமல்லாது பணிப்பாளர் நாயகத்தின் செய்திகள் தமது இணையத்தளத்தில் பிரபல்யப்படுத்துவதற்கு ஆணைக் குழுவிற்கு இயலுமை கிடைத்தது. இது தொடர்பில் நிச்சயமான வயது குழுக்கள் மற்றும் மாணவர்களுக்கிடையில் சுவரொட்டி போட்டிகளினை நடாத்தியதுடன் அதில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்களை வழங்கி தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் பற்றி அவர்களுக்கு ஊக்கப்படுத்துதலும் மேற்கொள்ளப்பட்டது.

கொரியாவில் நடைபெற்ற “தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் 2015 மாநாட்டிற்கு இளம் புதிய புத்தாக்குனர்களினை பங்குபற்றச் செய்வதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவிற்கு இயலுமை கிடைத்தது. இந்த மாநாட்டின் நோக்கமாக இருப்பது அடுத்த பரம்பரைக்கு தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்ப கொள்கைகளினை உருவாக்குதலினை வினைத்திறனாக்குதல் சர்வதேச மட்டத்தில் அறிவு தன்னிறைவடையச் செய்தல் மற்றும் வினைத் திறன்களினை பரிமாறிக்கொள்ளும் முகமாக இளைஞர் தொழில்முயற்சி யாளர்களின் அறிவினை மேம்பாடு செய்தல்.

மேலும் எமது நாட்டின் நிலையான மற்றும் வினைத்திறனான தொலைத் தொடர்பு துறையினை உருவாக்கும் நோக்கில் நிர்மாணிக்கப்படுகின்ற மிகப் பிரபல்யமான செயற்திட்டமொன்றான “தாமரைக் கோபுரம் மற்றும் தாமரைக்கோபுர வியாபார நிலைய கட்டட தொகுதி செயற்திட்டத்தின் முன்னேற்றம் பற்றி குறிப்பிடுவது மிகவும் பெருமையுடனாகும். தற்பொழுது இந்தச் செயற்திட்டம் நிறைவடையும் தறுவாயில் இருப்பதுடன் 2017 ஒக்டோபர் மாதத்தில் நிர்மாணிப்பு செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டின் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 88 வெற்றிடங்கள் நிலவுவதுடன் இவ்வாண்டில் எதிர்பார்த்த இலக்கினை அடைந்துகொள்ளும் முகமாக தற்பொழுது இருக்கின்ற பதவியணியினர் வழங்குகின்ற ஒத்துழைப்பு மிகவும் பாராட்டுதற்குரியதாக உள்ளது. எதிர்கால ஆண்டுகளில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவிற்கு இவ்வாறே வெற்றிகரமான நிறுவனமொன்றாக உருவாக்குவதற்கு அவர்களின் எதிர்கால ஒத்துழைப்பு தேவையாக உள்ளது.

# அத்தியாயம்

# 04

## 2015 ஆம் ஆண்டுக்கான துறைகளின் அடிப்படையில் செயலாற்றுகை அறிக்கை.

1996 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின்மூலம் திருத்தப்பட்டவாறான 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தினூடாக அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் தற்பொழுது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவின் சகல பிரிவுகளும் தமது பணிகளினை உரியபிரகாரம் வினைத்திறனாக மேற்கொள்வதுடன் இந்தப் பிரிவுகளின் பணிப்பாளர்களின் வழிகாட்டலின்கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. அதேவேளை 2015 மீளாய்வு ஆண்டுக்கான அப்பிரிவுகளின் பணிகள் மற்றும் செயலாற்றுகையினை சமர்ப்பித்தல் அத்தியாவசியமாக இருப்பதுடன் அவ்விடயங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

### அலைவரிசை முகாமைத்துவ பிரிவு

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவின் (TRCSL) அலைவரிசை முகாமைத்துவப்பிரிவு இந்த நிறுவனத்தின் பிரதான பிரிவாக இருப்பதுடன் இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 10 (ஆ) பிரிவினூடாக அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வானொலி அலைவரிசையினைப் பயன்படுத்துதல் மற்றும் செய்மதி தொழில்நுட் பத்திற்கு இதன் தொடர்புடைய விடயங்களினை முகாமைசெய்தல் மற்றும் நிர்வகிக்கின்ற சட்டரீதியான அதிகாரம்பெற்ற நிறுவனமாக இருக்கின்றது. 2015ஆம் ஆண்டின்போது இப்பிரிவு உரிய சட்டத்தின் 22ஆம் பிரிவின்பிரகாரம் தனது பணிகளினை மேற்கொள்வது தொடர்பில் கருதத்தகு முன்னேற்றமொன்றினை அடைந்துள்ளதுடன் அலைவரிசைகளினை ஒதுக்கீடு செய்தல் இந்தப்பிரிவின் பிரதான பணியாக இருப்பதுடன் 2015ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிட்ட அலைவரிசை மேற்கொள்ளப்பட்டன.

வானொலி அலைவரிசையினைப் பயன்படுத்துகின்றவர்களினால் தமது பரிவர்த்தனைகளினைப் பேணிச்செல்கின்றபோது முகங்கொடுக்கின்ற தடைகள் தொடர்பில் முறைபாடுகளினை சமர்ப்பிக்கின்றபோது அலைவரிசை முகாமைத்துவப்பிரிவு அவ்விடயங்கள் தொடர்பில் உடனடியாகச் செயற்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டுக்கான புள்ளிவிபரங்கள் கீழ்வருமாறு.

வானொலி அலைவரிசைகளினை சட்டவிரோதமாகப் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்களில் இப்பிரிவினால் சட்டவிரோதமாகப் பயன்படுத்துகின்றவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதுடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டள்ளன. கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களிலிருந்து விளக்கம் வழங்கப் படுகின்றது.

கம்பிகள் அற்ற உபகரணங்களினை இறக்குமதி செய்யும் முகமாக அறிக்கைகளினை வெளியீடு செய்தல் இப்பிரிவின் மிக முக்கியமான பணியொன்றாக இருப்பதுடன் உபகரணங்களின் தரம் மற்றும் தொடர்புத் தன்மையினையும் உறுதிப்படுத்துகின்றது. கீழ் குறிப்பிடப்பட்ட அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**அட்டவணை – 04.01**

ஒதுக்கப்பட்ட அலைக்கற்கைகளின் எண்ணிக்கை, 2015

| *சேவையின் வகை* | *ஒளிக்கற்றை எண்ணிக்கை* | |
|---|---|---|
| | 2014 | 2015 |
| *நிலையான சேவைகள்* | *1340* | 1914 |
| *ஒளிபரப்புச் சேவைகள் (தொலைக்காட்சி மற்றும் வானொலி)* | *07* | 39 |
| *செலியுலர் கையடக்க தொலைபேசிச் சேவைகள்* | *0* | 0 |
| *தரவுகள் மற்றும் வானொலி தூரச் சேவைகள்* | *03/09* | 4 |
| *வானொலி மற்றும் சமுத்திர சேவைகள்* | | |
| • *சமுத்திர கையடக்க சேவைகள்* | *0* | *0* |
| • *வானொலி கையடக்க சேவைகள்* | *0* | *0* |
| *தனிப்பட்ட கையடக்க வானொலி சேவைகள்* | *23* | 37 |

*அதே போன்று ஒளிக்கற்றை அனுமதிப்பத்திரங்களை வெளியிடல் இந்த ஆண்டில் சராசரியாக நிகழ்ந்துள்ளதுடன் அதற்கு உரிய புள்ளிவிபரங்கள் கீழ் காட்டப்பட்டுள்ளன.*

***அட்டவணை – 04.02***

*ஒளிக்கற்றைப் பயன்பாடு தொடர்பாக விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை, 2015*

| *சேவை வகைகள்* | *அனுமதிப் பத்திரங்கள்* | |
|---|---|---|
| | 2014 | 2015 |
| *நிலையான சேவைகள்* | 59 | 121 |
| *ஒளிபரப்பு சேவைகள் (தொலைக்காட்சி மற்றும் வானொலி)* | 40 | 40 |
| *செலியுலர் கையடக்க தொலைபேசிச் சேவைகள்* | 5 | 5 |
| *ட்ரன்கின் / ஜேஜின் / சிடிசன் பேண்ட்* | 9 | 4 |
| *தரவுகள் மற்றும் வானொலி தூரசேவைகள்* | 10/16 | 11/16 |
| *வானொலி மற்றும் சமுத்திர சேவைகள்* | | |
| *விமான நிலையங்கள்* | 66 | 72 |
| *கப்பல் நிலையங்கள்* | 89 | 84 |
| *சமுத்திர கையடக்க தொலைபேசி* | 265 | 1319 |
| *விமான பயண கையடக்க தொலைபேசி* | 9 | 4 |
| *தனியார் கையடக்க வானொலி சேவை (புதிய அனுமதிப்பத்திரங்கள் + அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தல் )* | 211<br>19 | 247<br>18 |
| *பயிலுனர் வானொலி* | 11 | 11 |

வானொலி அலைவரிசையினைப் பயன்படுத்துகின்றவர்களினால் தமது பரிவர்த்தனைகளினைப் பேணிச்செல்கின்றபோது முகங்கொடுக்கின்ற தடைகள் தொடர்பில் முறைபாடுகளினை சமர்ப்பிக்கின்றபோது அலைவரிசை முகாமைத் துவப்பிரிவு அவ்விடயங்கள் தொடர்பில் உடனடியாகச் செயற்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டுக்கான புள்ளிவிபரங்கள் கீழ்வருமாறு.

**அட்டவணை – 04.03**

2015 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் மற்றும் நடாத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை

| *சேவைகள்* | *கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை* | | *நடாத்திய விசாரணைகளின் எண்ணிக்கை* | |
|---|---|---|---|---|
| | *2014* | *2015* | *2014* | *2015* |
| *தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒளிபரப்பு* | *08* | 07 | *08* | 07 |
| *வேறு சேவைகள்* | *40* | 22 | *40* | 22 |

வானொலி அலைவரிசைகளினை சட்டவிரோதமாகப் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்களில் இப்பிரிவினால் சட்டவிரோதமாகப் பயன்படுத்துகின்றவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதுடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களிலிருந்து விளக்கம் வழங்கப்படுகின்றது.

**அட்டவணை – 04.04**

அலைக்கற்கைகளை சட்ட விரோதமான விதத்தில் பயன்படுத்தப்படுவதாக இனங்கண்ட பயன்படுத்துனர்களின் எண்ணிக்கை மற்றும் எடுக்கப்பட்ட நட்டயீட்டு செயன்முறை - 2015

| *வகைகள்* | *இனங்காணப்பட்ட சட்ட விரோத பயன்பாட்டின் எண்ணிக்கை* | | *கிடைக்கப் பெற்ற செயற்பாடுகள்* |
|---|---|---|---|
| | 2014 | 2015 | |
| *ஒளிபரப்புச் சேவைகள் (தொலைக்காட்சி மற்றும் வானொலி)* | 01 | 03 | *ஒளிகற்றைகளை சட்டவிரோதமாக பயன்படுத்தலை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.* |
| *வேறு சேவைகள்* | 0 | 00 | |

கம்பிகள் அற்ற உபகரணங்களினை இறக்குமதி செய்யும் முகமாக அறிக்கைகளினை வெளியீடு செய்தல் இப்பிரிவின் மிக முக்கியமான பணியொன்றாக இருப்பதுடன் உபகரணங்களின் தரம் மற்றும் தொடர்புத்தன்மையினையும் உறுதிப்படுத்துகின்றது. கீழ் குறிப்பிடப்பட்ட அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

***அட்டவணை – 04.05***

*2015 இல் வெளியிடப்பட்ட விடுவிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை*

| *சேவை வகைகள்* | *விடுவிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை* | |
|---|---|---|
| | 2014 | 2015 |
| *குறிகாட்டி பகிர்வு பிரவேசம் உள்ளடங்கலாக நிலையான சேவைகள்* | 743 | 654 |
| *ஒளிபரப்பு சேவைகள் (தொலைக்காட்சி மற்றும் வானொலி)* | 55 | 270 |
| *செலியுலர் கையடக்க தொலைபேசிச் சேவைகள்* | | |
| *(i) வர்த்தக அனுமதிப்பத்திரங்கள்* | 4657 | 5911 |
| *(ii) கையடக்க தொலைபேசி செயற்படுத்துனர்கள்* | 1117 | 1308 |
| *(iii) ட்ரன்கின் / ஜேஜின் / சிடிசன் பேண்ட்* | 29 | 47 |
| *(iv) தனியார் கையடக்க வானொலிச் சேவைகள்* | 609 | 812 |
| *வானொலி மற்றும் சமுத்திர சேவைகள்* | | |
| *(i) வானொலி நிலையம்* | 22 | 14 |
| *(ii) கப்பல் நிலையம்* | 13 | 14 |
| *(iii) சமுத்திர கையடக்க தொலைபேசி* | 250 | 90 |
| *(iv) வானொலி கையடக்க தொலைபேசி* | 02 | 7 |
| *(v) விமான பயணங்களை ஒழுங்குபடுத்தல்.* | 23 | |
| *(vi) பலதரப்பட்ட (பூகோள நிலைநிறுத்தல் முறைமை, ட்ரன்கின்)* | 623 | |
| *தரவுச் சேவைகள் / வானொலி டெலி மெட்ரி* | 110/07 | 242/20 |
| *செய்மதி சேவைகள்* | 1950 | |
| *பயிலுனர் வானொலி சேவைகள்* | 15 | 21 |
| *குறைந்த வலுவுடைய உபகரணங்கள்* | 1667 | 1900 |

**வலையமைப்பு பிரிவு**

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவின் வலையமைப்பு பிரிவிற்கு தொலைத்தொடர்புகள் சட்டத்தின் பிரகாரம் பணிகள் பலவற்றினை மேற்கொள்வதற்காக அதிகாரம் வழுங்கப்பட்டுள்ளதுடன் அப்பணிகள் கீழ்வருமாறு.

அ. இலங்கை தொலைத் தொடர்புகள் தொழில் முயற்சியின் தேசிய இலக்கமிடல் திட்டத்தினை முகாமைசெய்தல்.

ஆ. தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செய்தல் தொடர்பாக வசதியளிப்புக்களினை வழங்குதல்

இ. சட்டமுரணான பிரகாரம் நடாத்திச் செல்லப்படுகின்ற கேபிள் கம்பியூடான தொலைத்தொடர்பு சேவைகளினைக் கட்டுப்படுதல் மற்றும் முகாமை செய்தல்

ஈ. தொலைத்தொடர்பு கட்டமைப்புக்குத் தேவையான தொலைத்தொடர்பு உபகரணங்கள் தொடர்பான மாதிரி அங்கீகாரத்தினை வழங்குதல். (சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம்)

உ. தொலைத்தொடர்பு உபகரண வியாபாரிகளுக்கு வியாபார அனுமதிப் பத்திரங்களினை விநியோகித்தல். (சட்டத்தின் 21ஆம் பிரிவு)

ஊ. பொதுமக்களினை அறிவுறுத்தல் மற்றும் சட்டமுரணான வர்த்தகர் களினை விசாரணை செய்தல்.

இது தொடர்பாக வலையமைப்புப் பிரிவினை இணைந்த புள்ளிவிபரங்கள் கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை – 04.06**

2014 – 2015 தொடர்பான வலையமைப்பு பிரிவில் இணைந்த புள்ளிவிபரங்கள்

| விபரம் | 2014 | 2015 |
|---|---|---|
| வழங்கப்பட்ட விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை | 867 | 851 |
| நிர்மாணிக்கப்பட்டுள்ள கோபுரங்களின் திரட்டு எண்ணிக்கை | 6471 | 6564 |
| கோபுரங்கள் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாடுகள் மொத்த எண்ணிக்கை | 90 | 122 |
| கையாளப்பட்ட (கோபுரங்கள் தொடர்புடைய) புலன் விசாரணைகளின் மொத்த எண்ணிக்கை | 25 | 51 |

| விபரம் | 2014 | 2015 |
|---|---|---|
| கோபுரங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 4 | 2 |
| பொது மக்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்பு நிகழ்ச்சிகளின் மொத்த எண்ணிக்கை | 9 | 11 |
| வழங்கப்பட்ட இறக்குமதி விடுவிப்புக்களின் மொத்த எண்ணிக்கை | 46 | 20 |
| வழங்கப்பட்ட இறக்குமதி விடுவிப்புக்களின் மொத்த எண்ணிக்கை | 3884 | 3304 |
| தனிப்பட்ட விடுவிப்புக்களின மொத்த எண்ணிக்கை | 27 | 18 |
| வழங்கப்பட்ட புதிய சுருக்க இலக்கங்களின் திரட்டு எண்ணிக்கை | 44 | 52 |

அதேபோன்று இவ்வாண்டில் பல பணிகள் பல அரச மற்றும் தனியார் பிரிவிற்கு மிகவும் உன்னதமான சேவையினை வழங்கும் முகமாக இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் குறுஞ்செய்தி இலக்கம் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அவ்விலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

***அட்டவணை – 04.07***

*2015 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட குறுஞ் செய்தி இலக்கம்*

*அரச நிறுவனங்களுக்கானது*

| *நிறுவனம்* | *குறுஞ் செய்தி இலக்கம்* |
|---|---|
| *உள்நாட்டு இறைவரித் திணைக்களம்* | 1944 |

*தனியார் பிரவின் நிறுவனங்களுக்கானது*

| *நிறுவனம்* | *குறுஞ் செய்தி இலக்கம்* |
|---|---|
| *வரையறுத்த லாப்ஸ் ஹோல்டிங் கம்பனி* | 1311 |
| *லங்கா தொழில்முயற்சி தகவல் நிலையம்* | 1313 |
| *வரையறுத்த டிஜிடல் கம்பனி* | 1331 |
| *வரையறுத்த லங்கா ரோகல் தனியார் கம்பனி* | 1344 |
| *வரையறுத்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்* | 1357 |
| *வரையறுத்த டிஜிடல் ஹெல்த் (தனியார்) கம்பனி* | 1390 |
| *வரையறுத்த டயலொக் ஆசியாடா தனியார் கம்பனி* (Touch Card System) | 1393 |

மேலும் இவ்வாண்டில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் மொத்த தொலைத்தொடர்பு கோபுரங்களின் எண்ணிக்கை 6564 ஆக அதிகரிக்கப்பட்டு புதிய தொலைத்தொடர்பு கோபுரங்கள் 93 தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டு பொதுமக்களினை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் பயனொன்றை நடாத்தியமை உபகரண தகுதிகாண் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்ட எண்ணிக்கை 334 உடன் மாதிரி அங்கீகாரம் 21 உள்ளடங்கலாக வர்த்தக அனுமதிப்பத்திரம் 851 இனை வெளியீடு செய்வதற்கு இயலுமை கிட்டியது.

**போட்டித்தன்மை பிரிவு**

இலங்கையின் மக்களுக்கான நியாயமானதும் தாங்கிக்கொள்ளக்கூடியதும் பண்புசார் தரமான தொலைத்தொடர்பு சேவையினை உறுதிப்படுத்தும் நோக்கில் தொலைத்தொடர்புகள் துறையின் போட்டித்தன்மையினை மேம்படுத்தும் முகமாக உரிய செயற்பாடுகளை எடுத்தல் அறவீடுகளை ஒழுங்குறுத்துகை செய்தல் தொலைத்தொடர்பு சேவையினை செயற்படுத்தும் கம்பனிகளினை வழிநடாத்துதல் இடைத்தொடர்பு சேவைகளினை கட்டுப்படுத்தல் தொலைத் தொடர்பு துறையின் தகவல் முறைமையினை இற்றைப்படுத்தல் போன்ற பல பணிகள் போட்டித்தன்மைப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

போட்டித்தன்மைப் பிரிவினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற தகவல்களுக்கு ஏற்ப சட்டத்தின் 78 ஆம் பிரிவின் பிரகாரம் முறைமை அனுமதிப்பத்திரங்கள் 38 விநியோகிக்கப்பட்டுள்ளன. மீளாய்வு ஆண்டின்போது அனுமதிப்பத்திரம் பெற்றவர்களினால் உருவாக்கப்பட்ட வருமானம் ரூபா 186 பில்லியன்களாகும். முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும்போது கையடக்க மற்றும் நிலையான பிரவேச தொலைபேசி செயற்படுத்தும் கம்பனிகளின் வருமானம் அதிகரித் துள்ளது. முன்னைய வருடத்தில் புள்ளிவிபரங்களுக்கேற்ப 2015 ஆம் ஆண்டில் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துனர்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தின் சராசரி 100 இற்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் நிலையான பிரவேச பங்கில் 100 இற்கு 9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. நிலையான பிரவேச தொலைபேசி செயற்படுத்தும் கம்பனிகள் தொடர்பில் வரியின் பின்னரான நிகர லாபம் ரூபா 1.567 மில்லியன்களாக இருப்பதுடன் கையடக்கத் தொலைபேசி செயற்படுத்தும் கம்பனிகள் தொடர்பிலான நட்டம் ரூபா 729 மில்லியனாக அறிக்கையிடப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில் கையடக்க மற்றும் நிலையான பிரவேச தொலைபேசி செயற்படுத்தும் கம்பனிகளினால் முறையே ரூபா 23 மில்லியன் மற்றும் ரூபா 26 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளன. மீளாய்வு ஆண்டின் போது தொலைத்தொடர்பு

வரி மட்டுமல்லாது செஸ்வரி ஆகிய இரண்டு வகையான வரிகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட வரியின் போக்கு அபிவிருத்திப் போக்கினைக் காட்டுவதுடன் மேலும் கிடைக்கப்பெறுகின்ற சர்வதேச அழைப்புக்கள் தொடர்பாக வரியொன்றினை இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

***அட்டவணை – 04.08***

*நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி செயற்படுத்துனர் கம்பனிகளின் மொத்த வருமானம் (2010 – 2015) (ரூபா மில்லியன்கள்)*

| *வகைகள்* | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | *மாற்றம்* % 2010-2011 | *மாற்றம்* % 2011-2012 | *மாற்றம்* % 2012-2013 | *மாற்றம்* % 2013-2014 | *மாற்றம்* % 2014-2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *கையடக்க* | 72,160 | 83,530 | 101,704 | 111,586 | 119,144 | 125,120 | 16% | 22% | 10% | 7% | 5% |
| *நிலையான பிரவேசகம்* | 45,300 | 43,660 | 43,403 | 46,318 | 48,652 | 51,138 | -4% | -1% | 7% | 5% | 5% |
| *மொத்தம்* | 117,460 | 127,190 | 145,107 | 157,904 | 167,796 | 176,258 | 8% | 14% | 9% | 6% | 5% |

***வரைபடம் – 04.01***




வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை மற்றும் வருடாந்த சதவீதங்களின் மாற்றம் (2010 – 2011)

இருந்ததுடன் நிலையான பிரவேச வாடிக்கையாளர்களின் அடிப்படை 2,601,196 ஆகும். 2015 டிசம்பர் 31ஆந் திகதியில் கையடக்கத் தொலைபேசி செறிவு மட்டம் 100 இற்கு 116 சதவீதமாக அதிகரித்தது. கடந்த வருடத்துடன் ஒப்பீடு செய்யும்போது 2015 ஆம் ஆண்டின் கையடக்கத் தொலைபேசி வாடிக்கையாளர் அடிப்படையில் 100 இற்கு 10 சதவீத அதிகரிப்பொன்று

காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2015ஆம் ஆண்டு நிலையான பிரவேச தொலைபேசி செயற்படுத்தும் கம்பனிகளின் வாடிக்கையாளர்களின் அடிப்படை 100 இற்கு 4 சதவீத வீழ்ச்சியொன்றினைக் காட்டியுள்ளது.

***அட்டவணை – 04.09***

*நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி செயற்பாட்டுக் கம்பனிகளில் மொத்த வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை மற்றும் வருடாந்த ரீதியாக சதவீதங்களின் மாற்றம் (2010 - 2015)*

| *வகைகள்* | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | % *மாற்றம்* **2010-2011** | % *மாற்றம்* **2011-2012** | % *மாற்றம்* **2012-2013** | % *மாற்றம்* **2013-2014** | % *மாற்றம்* **2014-2015** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *கையடக்க* | 17,267,407 | 18,319,447 | 20,324,070 | 20,447,508 | 22,123,000 | 24,384,544 | 6% | 11% | -0.04% | 8% | 10% |
| *நிலையான பிரவேசகம்* | 3,578,463 | 3,608,392 | 3,449,391 | 2,706,787 | 2,709,848 | 2,601,196 | 1% | -4% | -22% | 0.1% | -4% |
| *மொத்தம்* | 20,845,870 | 21,927,839 | 23,773,461 | 23,154,295 | 24,832848 | 26,985,740 | 5% | 8% | -3% | 7% | 9% |

***வரைபடம் – 04.02***




பயன்படுத்துனர்களிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற வருமானத்தின் சராசரி மற்றும் சதவீதங்களின் மாற்றம் (2010 – 2015)

2015 டிசம்பர் 31 ஆந் திகதியாகும் போது கையடக்கத் தொலைபேசி மற்றும் நிலையான பிரவேச பிரிவுகளின் பயன்படுத்துனர்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற வருமானங்களின் சராசரி (வருடாந்தம் முறையே ரூபா 5,131 மற்றும் 19,659 ஆகும். முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும்போது கையடக்கத் தொலைபேசிப் பிரிவின் பயன்படுத்துனர்களிலிருந்து கிடைக்கப்பெற்ற

வருமானத்தின் சராசரி 100 இற்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் நிலையான பிரவேச பிரிவின் அதிகரிப்பு 100 இற்கு 9 சதவீதமாகும். 2013 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர் அடிப்படைகளில் வரைவிலக்கணத்தில் மாற்றத் திற்கான பெறுபேறொன்றாக நிலையான பிரவேசப் பிரிவின் பயன்பாடு பயன்படுத்துனர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தின் சராசரி 100 இற்கு 36 சதவீதம் அதிகரித்துள்ளது.

***அட்டவணை - 04.10***

*(வருடாந்தம் ரூபாக்களில்)*

| *வகைகள்* | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | % *மாற்றம்* 2010-2011 | % *மாற்றம்* 2011-2012 | % *மாற்றம்* 2012-2013 | % *மாற்றம்* 2013-2014 | % *மாற்றம்* 2014-2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *கையடக்க* | 4179 | 4560 | 5004 | 5,457 | 5,386 | 5,131 | 9% | 10% | 9% | -1% | -5% |
| *நிலையான பிரவேசம்* | 12,659 | 12,100 | 12,583 | 17,112 | 17,954 | 19,659 | -4% | 4% | 36% | 5% | 9% |

***வரைபடம் – 04.03***




வரியின் பின்னரான நிகரலாபம் - நட்டம். (2010 – 2015)

2015 ஆம் ஆண்டுக்கான நிலையான பிரவேச தொலைபேசி செயற்படுத்தும் கம்பனிகளின் அறிக்கையிடப்பட்ட நிகர இலாபம் ரூபா 1,576 மில்லியன் களாகும். எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டில் கையடக்க தொலைபேசி செயற்படுத்தும் கம்பனிகள் ரூபா 750 மில்லியன் நிகர நட்டத்தினை அறிக்கையிட்டுள்ளது.

**அட்டவணை – 04.11**

*(ரூபா மில்லியன்கள்)*

| வகைகள் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|
| கையடக்க | -3,652 | -1,017 | -1,970 | -143 | 2,947 | -729 |
| நிலையானது | 180 | 1,285 | 3,304 | 2,964 | 1,723 | 1,567 |
| **முழு மொத்தம்** | **-3,472** | **268** | **1,334** | **2,821** | **4,670** | **838** |

**வரைபடம் – 04.04**




**அட்டவணை – 04.12**

*தொலைத்தொடர்பு வரி (2012 -2015)*

*ரூபா மில்லியன்களில்*

| வகைகள் | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| மொத்த தொலைத்தொடர்பு வரி | 19,746 | 20,026 | 26,055 | 27,859 |

**அட்டவணை – 04.13**

*சேகரிக்கப்பட்ட செஸ் வரி* (2012-2015)

*ரூபா மில்லியன்களில்*

| ஆண்டு | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| **மொத்த செஸ் வரிகள்** | **3,152** | **3,455** | **3,652** | **3,840** |

### *அட்டவணை – 04.14*

*இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட வெளிச் செல்லும் உள்நாட்டு கட்டணங்களின் (OLAC) வரிகள்.*

| *ஆண்டு* | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| *வெளிச் செல்லும் உள்நாட்டு பிரவேச கட்டணங்கள் (ரூபா மில்லியன்களில்)* | 1,977 | 1,994 | 1,894 | 1,592 |

### *அட்டவணை – 04.15*

*கையடக்க மற்றும் நிலையான பிரவேச தொலைபேசி செயற்பாட்டு கம்பனிகளில் முதலீடு (2010-2015) ரூபா மில்லியன்களில்*

| *வகைகள்* | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|
| *கையடக்க* | 24,387 | 41,999 | 29,508 | 49,509 | 23,444 | 22,703 |
| *நிலையான பிரவேசம்* | 9,646 | 14,055 | 20,610 | 19,052 | 21,640 | 26,245 |
| ***மொத்தம்*** | **34,033** | **56,054** | **50,118** | **68,561** | **45,085** | **48,948** |

2015 ஆம் ஆண்டின் போது கையடக்க மற்றும் நிலையான பிரவேச தொலைத் தொடர்பு செயற்படுத்தும் கம்பனிகளிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட முதலீடு ரூபா 49 மில்லியன்களுக்கு அண்மியதாக இருந்ததுடன் கையடக்க தொலை பேசி செயற்படுத்தும் கம்பனிகள் அண்ணளவாக 23 மில்லியன் தொகை யினை முதலீடு செய்துள்ளதுடன் நிலையான பிரவேச தொலைபேசி செயற்படுத்தும் கம்பனிகளின் முதலீடு 26 மில்லியன்களிலும் அதிகமாகும்.

### *அட்டவணை – 04.16*

*சேகரிக்கப்பட்ட தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணங்கள் (TDC) (2012-2015)*

| *ஆண்டு* | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| *சேகரிக்கப்பட்ட தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணங்கள் (ரூபா மில்லியன்கள்)* | 7,242 | 7,239 | 6,756 | 5,861 |

நீண்டகால அடிப்படைகள் மற்றும் மேம்பாட்டு அடிப்படை ஆகிய அடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் அறவீட்டு அங்கீகார வகைகள் இரண்டு பேணப்பட்டுள்ளதுடன் மொத்த அறவீட்டு முறைமைகளின் எண்ணிக்கை 208 மாத்திரமாகும். தொலைபேசி சேவை செயற்படுத்தும் கம்பனிகளின் வலை யமைப்புக்களினை இற்றைப்படுத்தும் முகமாக தொலைத்தொடர்புத்துறை பற்றிய வெளிநாட்டு தொழில் தேர்ச்சியாளர்களின் தேவைப்பாடு கவனத்திற் கொள்ளப்பட்டதுடன் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு அது தொடர்பாக 2015 ஆம் ஆண்டில் துறைசார் தேர்ச்சியாளர் களின் வீசா அனுமதிப்பத்திரங்கள் 397 இனை கவனத்திற் கொண்டுள்ளதுடன் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கின்றது.

**கொள்கைகள் சர்வதேச தொடர்புகள் மற்றும் அனுமதிப்பத்திர நிர்வாகப்பிரிவு**

இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு (TRCSL) சட்டரீதியான ஒழுங்குபடுத்துகை அதிகார நிறுவனம் என்ற வகையில் இப்பிரிவினால் தொலைத்தொடர்பு துறைக்கான கொள்கைகளினை உருவாக்கு வதுடன் பலதரப்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது பலதரப்பட்ட வகையில் ஆணைக்குழு ஒத்துழைப்பு வழங்குகின்றது. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக் குழுவின் குறிக்கோள் ஒன்றான தொலைத்தொடர்புத் துறையில் நாம் புதிய தொழில்நுட்பங்களினை பயன்படுத்துதல் மட்டுமல்லாது அபிவிருத்தி ஆராச்சி களினை மேற்கொள்ளுதல் தொடர்புடைய பல்கலைக்கழக ஒத்துழைப்புடன் இப்பிரிவினால் செயற்பாடுகள் பலவற்றினை திட்டமிடுதல் மட்டுமல்லாது அபிவிருத்தி செய்தலும் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று சர்வதேச தொலைத்தொடர்பு சங்கங்களின் ஒத்துழைப்புடன் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு தொலைத்தொடர்பு பிரிவின் அபிவிருத்திச் செயற்திட்டங்களை ஆணைக்குழு நடைமுறைப்படுத்தியுள்ளன.

2015 ஆம் ஆண்டின் போது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்கு படுத்துகை ஆணைக்குழு வேறு அபிவிருத்தியடைந்த நாடுகளின் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கங்களினை அறிமுகம் செய்வதற்கு அதிக கவனம் செலுத்தியுள்ளது. சர்வதேச தொலைத்தொடர்பு சங்கம் மற்றும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு செயற்திட்டம் பாடசாலை ஒழுங்கிணைப்பினூடாக மக்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்தியுள்ளதுடன் இந்த பாடசாலை ஒழுங்கிணைப்பு ஊடாக மக்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்

8560 மாணவர்கள் மற்றும் 34 பாடசாலைகள் தொடர்பாக பயன்கள் வழங்கப் பட்டுள்ளதுடன் இதன் மேலதிக மேம்பாட்டுக்காக கல்வி அதிகாரிகளினை அறிவுத்துதல் செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசேட தேவைகளுடன் கூடியவர்கள் மற்றும் இத்துறையின் வகுதியினருக்கு வசதிகளினை வழங்கும் முகமாக வெளிநாட்டு அமைப்புக்கள் மட்டுமல்லாது தன்னார்வலர் அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் கூட்டங்கள் செயலமர்வுகள் மட்டுமல்லாது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. சீதுவ மற்றும் வவுனியா தொழிற்பயிற்சி நிலையங்கள் விசேட தேவையுடன் கூடியவர்களுக்கான கொரிய சர்வதேச தகவல் தொழில் நுட்ப தன்னார்வலர் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் பயிற்சித் திட்டங்கள் பல நடாத்தப்பட்டுள்ளன. மீளாய்வு ஆண்டின்போது சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம் அரச நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் “இலத்திரனியல் விவசாய உபாயங்கள்” பற்றிய கருத்தரங்கொன்றினையும் நடாத்தியுள்ளது.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட “உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப குறிகாட்டிகள்” பற்றிய வினாக்கொத்து ஆய்வினூடாக 2015ஆம் ஆண்டில் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப குறிகாட்டிகளினை மதிப்பீடு செய்யும் முகமாக உரிய துறைகள் மட்டுமல்லாது பூகோள தகவல் களினை வழங்குதல் மற்றும் இற்றைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டன. அதே போன்று இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வினால் நவீனத்துவத்தின் உருவாக்குனர்களான தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்ற தலைப்பினை முதன்நிலைப்படுத்தி 2015 சர்வதேச தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தொழில் நுட்ப தினம் (WTISD) என்ற பிரிவினரின் பங்களிப்புடன் கொண்டாடப்பட்டதுடன் இதனூ டாக இத்தினம் பற்றி பொதுமக்களினை அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டது. இத்துறையின் புதிய புத்தாக்கங்களினை மேம்படுத்தும் முகமாக இவ்வாண்டில் கொரியாவில் நடைபெற்ற “இளம் தகவல் தொழில்நுட்ப புத்தாக்குனர்களின் மாநாடு” இனை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக பிரதிநிதிகளை அனுப்பு வதற்கு இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக் குழுவிற்கு இயலுமை கிடைத்தது. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்துதல் ஆணைக்குழு சர்வதேச அமைப்புகளுக்கான வருடாந்த பங்களிப்பு தொகை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரகாரம் துரிதமாகச் செலுத்தி அந்நிறுவனங்களுடன் நெருக்கமான தொடர்பினை பேணிச்சென்றுள்ளதுடன் அதனூடாக இலங்கைக்கு பயன்களினை அடைந்து கொள்வதற்கு இயலுமை கிடைக்கப்பெற்றது.

### *அட்டவணை – 04.17*

*சர்வதேச அமைப்புக்கான வருடாந்த அங்கத்துவ பங்களிப்பு தொகையினை வழங்குதல் - 2015*

| *நிறுவனத்தின் பெயர்* | *பங்களிப்பு தொகை (இலங்கை ரூபாவில்)* |
|---|---|
| *சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம்* (ITU) | 22,317,680.62 |
| *ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சங்கம்* (APT) | 2,080,912.20 |
| *பொதுநலவாய தொலைத்தொடர்புச் சங்கம்* (CTO) | 4,228,300.30 |
| *உட்கட்டமைப்பு வசதிகள் ஒழுங்குபடுத்தல் பற்றிய மாநாடு* (SAFIR) | 545,610.71 |
| ***மொத்தம்*** | **29,172,503.83** |

அதேபோன்று இப்பிரிவின் பிரதான பணியொன்றாக இவ்வாண்டில் கீழ்க் குறிப்பிடப்பட்ட புதிய அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டன.

**அனுமதிப்பத்திரங்களினைப் புதுப்பித்தல்**

வரையறுத்த கட்சிசன் ரெலிக்கொம் மிமிக்கேசன் தனியார் கம்பனியின் வெளியக பிரவேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டது. கீழ்க்குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திர புதுப்பித்தல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வரையறுத்த டயலக் புறோட்பான்ட் தனியார் வலையமைப்பு – மேம்படுத்தப்பட்ட அலைவரிசை நுண் அலைவரிசை தொடர்பு பரிவர்த்தனை வலையமைப்புக்கள் மற்றும் ஒளிபரப்பு கம்பிவளி அனுமதிப்பத்திரம்.

வரையறுத்த டயலொக் புறோட் வான் தனியார் வலையமைப்பு – நிலையான கம்பிகளற்ற அனுமதிப்பத்திரம்.

வரையறுத்த லங்காபெல் கம்பனி – மேம்படுத்தப்பட்ட கையடக்க வானொலி ஒலிபரப்பு அனுமதிப்பத்திரம்.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் இலங்கைக்கு கையடக்க தொலைபேசி அத்தியாவசியமான வலையமைப்பு செயற்படுத்தும் கம்பனிகளினை அறிமுகம் செய்யும் முகமாக ஆலோசனை பத்திரமொன்று அவ் ஆலோசனைப் பத்திரத்தில் எழுந்துள்ள பிரச்சினைகள்

பற்றி கருத்துக்களினை வகுதியினருக்கிடையில் வழங்கும் முகமாக வெளியிடப்பட்டது. இப்பத்திரத்தினை WW.TRC.LK இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**இணக்கப்பாட்டுப் பிரிவு**

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவின் (TRCSL) இணக்கப்பாட்டு பிரிவு உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக மிகவும் உன்னதமான தொலைத்தொடர்பு சேவையினை வழங்குவதில் ஆணைக்குழு அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன் தொலைத்தொடர்புகள் சேவை வழங்குனர் களுடன் பணியாற்றும்போது புதிய நடவடிக்கைகளினை மேற்கொள்கின்றது. இணக்கப்பாட்டு பிரிவுடன் இணைந்த பணிகளின் முக்கியத்துவத்தினை கவனத்திற் கொள்ளும்போது கையளிக்கப்படுகின்ற அலுவல்களினை மேற்கொள்வதற்காக இப்பிரிவு இரண்டு அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது சேவைத்தரம் மற்றும் விழிப்புணர்வு அலகுகள் என்ற வகையிலாகும்.

மேற்படி அலகுகளின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் கீழ்வருமாறு.

சேவைத்தரம் (QOS) அலகு.

**பணிகள்**

- அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சேவையின் தரம் மற்றும் பொது தொலைபேசி வலையமைப்பு செற்படுத்துனர் களின் (PSTN) இடைத்தொடர்பான உடன்படிக்கைகளுக்கு இணங்க பணியாற்றுகின்றார்களா என அவதானித்தல்.

- பொது தொலைபேசி வலையமைப்பு செயற்படுத்துனர்களின் (PSTN) வலையமைப்பு செயலாற்றுகை தொடர்பாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் தயார் செய்யப்பட்டுள்ள சேவை நிலைமை தரங்க ளுக்கு இலக்கிடப்பட்ட பெறுமதிகள் அடையப்பெற்றுள்ளதா? என அவதானித்தல்.

- ஒளிச்சேவை தொடர்பாக பொதுத்தொலைபேசி வலையமைப்பு செயற்பாட்டுனர்களினால் அளவிடப்பட்ட சேவை நிலைமைகளின் தரங்களின் பெறுமதிகள் மற்றும் இலங்கை தொலைத் தொடர் புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் கணக்காய்வு செய்யப்பட்ட பெறுமதிகளுக்கிடையிலான ஒப்பீட்டு ரீதியிலான அறிக்கையொன்றினை தயார் செய்தல்.

- செயலாற்றுகைகளின் அளவீடுகளின் உண்மைத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் அறிந்து கொள்ளும் முகமாக பொது தொலைபேசி வலையமைப்பு கம்பனிகளுக்கிடையிலான ஒப்பீட்டு ரீதியான அறிக்கையினைப் பகிர்ந்தளித்தல்.

- கிரமமான கணக்காய்வினை மேற்கொள்வதன் ஊடாக பொது தொலைபேசி வலையமைப்பு செயற்படுத்துகை கம்பனிகளினால் தயார் செய்யப்படுகின்ற சேவை நிலைமைகளின் செயலாற்றுகை அளவீடுகளின் உண்மைத் தன்மையினை மதிப்பீடு செய்தல்.

- இந்தப் பிரிவினால் 2015 ஆம் ஆண்டின் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பணிகளுக்கிடையில் பொது தொலைபேசி வலை யமைப்பு செயற்படுத்துனர் கம்பனிகளினால் கிடைக்கப்பெறுகின்ற மாதாந்த சேவைகளின் தர அறிக்கைகளினை கவனத்திற் கொண்டு பகுப்பாய்வு செய்து 2015 ஆம் ஆண்டில் 3ஆவது காலாண்டுக்குத் தேவையான ஒப்பீட்டு ரீதியான அறிக்கை யொன்றினை தயார் செய்யும்போது சேவைத் தரங்களினை மேம்படுத்துவதற்காக அவர்களுடன் கலந்துரையாடல்களை மேற் கொள்ளுதல் மட்டுமல்லாது செயலாற்றுகை அளவீடுகளின் உண்மைத்தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் தெரிந்து கொள்வதற்குமாக அறிக்கைகளினை பொது தொலைபேசி வலையமைப்பு நிறுவனங்களுக்கிடையில் பகிர்ந்தளித்தல். பொது தொலைபேசி வலையமைப்பு செயற்படுத்துனர் நிறுவனங்களின் செயலாற்றுகைகளின் அளவீட்டுத்தரவு கருமபீடத்தினூடாக பெற்றுக் கொள்ளப்படுவதுடன் இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற பிரமாணங்களின் பிரகாரம் கணிப்பீடுகளினை மேற்கொண்டு சேவைத்தரங்களின் பிரகாரம் மீள அறிக்கைகள் வழங்கப்படும்.

**விழிப்புணர்வு அலகு**

**பணிகள்**

பொது தொலைபேசி வலையமைப்பு செயற்படுத்துனர் கம்பனி களினால் 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தினூடாக திருத்தப்பட்டவாறான சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கு இணங்க செயற்படுவதினை உறுதிப்படுத்தல்.

அனுமதிப்பத்திரம் பெற்ற பொது தொலைபேசி வலையமைப்பு செயற்படுத்தும் கம்பனிகளினால் அங்கீகரிக்கப்படாத அறவீட்டு பொதிகளினை வழங்குவதனைக் கட்டுப்படுத்தல் பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளினை அங்கீகரித்தல்.

அனுமதிப்பத்திரம் பெற்ற தொலைபேசி செயற்படுத்தும் கம்பனிகளினால் சட்டமுரணாக தொலைபேசி அழைப்புக்களினை நிறைவு செய்தல் பற்றி முறைப்பாடுகளினை புலனாய்வு செய்தல் பற்றிய தேவையானபோது தேவையெனக் கருதும் பிரகாரம் பொருத்தமான ஒழுங்குபடுத்துதல் பணிகளினை மேற்கொள்ளல்.

அனுமதிப் பத்திரம் பெற்ற வர்த்தகரினால் அங்கீகரிக்கப்படாத தொலைத்தொடர்பு உபகரண விற்பனை பற்றிய ஆய்வுகளினை நடாத்துதல் மற்றும் அனுமதிப்பத்திரத்தின் பிரமாணங்கள் மற்றும் நிபந்தனைகள் மீறப்படுகின்றமை தொடர்பாக தெரியவரின் அது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளினை மேற்கொள்ளல்.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக் குழுவினால் விநியோகிக்கப்பட்ட வர்த்தக அனுமதிப்பத்திரங் களின்றி வர்த்தகரினால் தொலைத்தெடர்பு உபகரணங்கள் விற்பனை செய்யப்படுதல் மற்றும் விசாரணைகளினை மேற் கொள்ளல் மட்டுமல்லாது ஏதேனும் சட்டமுரணான செயற் பாடுகளின் பிரகாரம் தேவையானதெனக் கருதும் பட்சத்தில் பொருத்தமான ஒழுங்குறுத்துகை மேற்கொள்ளுதல்.

**2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பணிகள்**

அனுமதிப்பத்திரம் பெற்ற தொலைபேசி செயற்படுத்தும் கம்பனி களினால் சட்டமுரணான விதத்தில் அழைப்புக்களினை நிறைவு செய்தல் பற்றிய முறைப்பாடுகள் 118 தொடர்பில் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

வர்த்தகரினால் மாதிரிகள் அதிகரிக்கப்படாத தொலைத்தொடர்பு உபகரண விற்பனை சந்தர்ப்பங்கள் 8 பற்றி விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தொலைபேசி செயற்படுத்தும் கம்பனிகளினால் அங்கீகரிக்கப்படாத அறவீட்டுப் பொதிகளினை வழங்குகின்ற சந்தர்ப்பங்கள் 14 தொடர்பாக விசாரணைகளை நடாத்தியமை.

## நுகர்வோர் முறைப்பாடுகள் மற்றும் பொதுமக்கள் விழிப்பூட்டல் அலகு

### நுகர்வோர் முறைப்பாடுகள்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டத்தின் 09 பிரிவின் பிரகாரம், தொலைபேசிச் சேவை வழங்குனர் ஒருவர் தொடர்பில் தொலைத்தொடர்புச் சேவை வாடிக்கையாளர் ஒருவர் அல்லது பொது மகன் ஒருவர் ஆணையாளருக்கு முறைப்பாடொன்றைச் செய்யும் பட்சத்தில், அவ்விடயம் தொடர்பாக புலனாய்வொன்றைச் செய்தல் பொருத்தமானது என ஆணையாளர் கருதும் பட்சத்தில் வாடிக்கையாளருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என ஆராய்ந்து பார்த்த பின்னர் வாடிக்கையாளருக்கு அவ்வாறாக ஏதும் சேதங்கள் அல்லது நட்டங்கள் ஏற்பட்டிருப்பின் பொருத்தமான விதத்தில் வாடிக்கையாளரின் இழப்பினை ஈடுசெய்யும் முகமாக பண நட்டயீட்டையோ அல்லது பொருத்தமான நிவாரணத்தையோ குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட வாடிக்கையாளருக்கு வழங்குமாறு ஆணையாளர் குறிப்பிட்ட மொலைத் தொடர்புச் சேவை வழங்குனரைப் பணிக்கலாம்.

கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தேவையான நடவடிக்கைகளுக்காக உரிய சேவை வழங்குனருக்கு முன்வைக்கப்படும். சேவை வழங்குனர் மேற்கொள்வதைப் போன்று வாடிக்கையாளர் உறவுகள் பிரிவும் இவ் விடயம் தொடர்பாக கவனம் செலுத்தும் அத்தோடு முறைப்பாட்டாளருக்கு நியாயமான நிவாரணத்தை வழங்கும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளையும் எடுக்கும்.

சேவை வழங்குனரினால் வழங்கப்பட்ட நிவாரணத்தின் மூலம் முறைப்பாட்டாளர் திருப்தியடையாது விடின், வாடிக்கையாளர் உறவுகள் பிரிவின் பிரதிப் பணிப்பாளரின் பங்கேற்புடன் குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு இரு சாராருக்கிடையேயான கூட்டமொன்று நடாத்தப்படும்.

மேலே குறிப்பிட்ட சேவைக்கு மேலதிகமாக, சமூக கடப்பாடு என்ற வகையில் தொலைந்து போன கையடக்க தொலைபேசிகளை தேடிக் கொடுப்பதற்கு மேற்படி அலகு ஈடுபடுகின்றது. முறைபாட்டுப் பிரிவு சராசரியாக நாளாந்தம் 250 முறைப்பாடுகளை பெறுவதுடன் இற்றை வரை 115000 விண்ணப்பங்கள் தொலைந்து போன கையடக்க தொலைபேசிகள் தொடர்பில் இலங்கை தொலைத்தொடர்புகள்

ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் கடந்த சில வருடங்களாக தொலைந்து போன கையடக்க தொலை பேசிகளை தேடிக் கொடுப்பதற்கு பொலிஸின் உதவியை பெற்றுக் கொண்டு வருகின்றோம்.

**பொது மக்கள் விழிப்பூட்டல்**

வாடிக்கையாளர்களின் முறைபாடுகளைப் பற்றி பகுப்பாய்வு செய்து பார்க்கின்ற போது, பரந்த அளவான விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் ஊடாக சமூகத்திற்கு வினைத்திறனான சேவையை வழங்க முடியும் என இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு புரிந்துள்ளது. எவ்வாறு தொலைத்தொடர்புச் செயற்பாடுகள் ஒழுக்க விழுமிய ரீதியாக பயன்படுத்தப்படுதல் வேண்டும் என பொதுமக்கள் அறிவுறுத்தப்படுதல் வேண்டும் என இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நம்புகின்றது.

எனவே, தொலைத்தொடர்பு தொடர்பான குற்றங்கள் தொடர்பாக நேரடியாக பொலீஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுவதனால் ஒரு செயலமர்வு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், தொலைத்தொடர்புச் சேவைவழங்கும் சிரேட்ட அலுவலர்கள் மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சிரேட்ட அலுவலர்களுக்கும் 2015 ஆம் ஆண்டில் 12 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

மேலும், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கொழும்பில் உள்ள பிரதான பாடசாலைகளில் 06 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நாடாத்தியிருப்பதுடன் ஒரு நிகழ்ச்சித்திட்டம் மேல் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு நடாத்தப்பட்டது.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 2015 ஆம் ஆண்டில் சுமார் 100 பத்திரிகை ஆக்கங்களை வெளியிட்டுள்ளதுடன் சில வானொலி / தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் ஒலி ஒளிபரப்புச் செய்துள்ளது.

**செயற்திட்டங்கள் மற்றும் ஆராச்சிப்பிரிவு.**

இந்நாட்டின் நிலையான மற்றும் வினைத்திறனான தொலைத்தொடர்பு சேவை யினை அபிவிருத்தி செய்யும் முகமாக வசதிகளினை வழங்குதல் மற்றும் நிச்சயமான உறுதிப்படுத்தும் முகமாக 2013 ஆம் ஆண்டில் செயற்திட்ட மற்றும்

ஆராச்சிப்பிரிவு உருவாக்கப்பட்டது. இலங்கையின் முதன்முறையாக அதி விசாலமான செயற்திட்டமொன்றாக கொழும்பு தாமரை கோபுர செயற்திட்டம் மற்றும் தாமரை கோபுர வர்த்தக நிலைய கட்டடதொகுதி செயற்திட்டத்தின் நிர்மாணம் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு தனது சகல செயற்பாடுகளுடன் உரிய அத்தியாயத்தில் இந்த தாமரைக் கோபுர செயற்திட்டத்தின் சகல பிரிவுகளின் முன்னேற்றங்களினை அடைந்து கொள்ளும் முகமாக செயலாற்றி வருகின்றது.



## சட்டப் பிரிவு

தொலைத் தொடர்பு துறையில் துரிதமாக மாற்றமடைகின்ற புதிய தொலை நுட்பங்கள் உள் தாக்கங்கள் மற்றும் புதிய போக்குகள் பற்றி உரிய கவனம் செலுத்தி சட்ட கொள்கைகள் மற்றும் சட்டத்தின் தன்மை ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப சகல சட்டங்கள் மற்றும் ஒழும்புருத்துகை விடயங்கள் தொடர்பில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவின் நிதிப்பிரிவு பிரதான சேவைகளினை மேற்கொள்கின்றன. இது தொடர்பில் 2015ம் ஆண்டில் இப்பிரிவினால் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2015 ஆம் ஆண்டில் நிதிப்பிரிவினால் அலைவரிசைகள் தொடர்பாக, அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்குதல், அறவீடு செய்தல் இணக்கப்பாட்டு பிரச்சனைகள், வாடிக்கையாளர்கள் பற்றிய ஒழுங்குருப்படுத்துகை விடயம் மட்டுமல்லாது, நிர்வாக மற்றும் மனித வள தொடர்பில் உள்ள சட்டரீதியான நடவடிக்கைகளின் போது, ஆணைக்குழுவிற்கு மற்றும் ஆணைக்குழுவின் ஏனைய பிரிவுகள் அலகுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இப்பிரிவின் அதிகாரிகளினால் வழக்குகளின்போது இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவின் சார்பில் நீதிமன்றத்தில் அதிகாரிகள் ஆஜராகி உள்ளனர். சில நீதிமன்ற வழக்குகளின் போது இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு சட்டமா அதிபர் திணைக்களத்தின் மற்றும் பிற சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பினை பெற்றுள்ளது.

## வழக்குச் செயன் முறைக்கு உட்படல்

உயர் நீதிமன்றம் - மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்.

உயர் நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் பல விசாரிக்கப்பட்டு வருகின்றன. தொலைத் தொடர்புகள் அலைவரிசை (ஒலிபரப்பு) அனுமதிப் பத்திரங்களினை உறுதிப் படுத்தல், அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றுமல்லாது சட்டதிட்டங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு இணங்க செயல்படாமை போன்ற ஒழும்புருத் தல்கள் பல தொடர்பில் ஆணைக்குழுவிற்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## நீதிமன்ற – நியாயாதிக்க சபை மற்றும் நீதிச்சட்ட ஒழும்புருத்துகை செயற்பாடுகள்

2015ம் ஆண்டில் சட்டப் பிரிவினால் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் மாவட்ட நீதிமன்றம் வர்த்தக உயர் நீதிமன்றத்தில் நிதி அறவீடு செய்தல் பற்றிய விடயங்கள் மற்றும் தொழிலாளர் நியாயாதிக்க சபை மற்றும் கைத்தொழில் நீதிமன்றம் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு முன்னிலையில் மனித வளங்களுடன் இணைந்த பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முன்னைய வருடங்களில் எதிர்வரும் வருடங்களில் முன்கொணர் செல்லப்பட்ட வழக்குகள் காணப்படுகின்றன.
சட்டப்பிரிவினை வலுப்படுத்தும் பகுதியொன்றாக இலங்கைத் தொலைத் தொடர்புகள் சட்டத்தினை மீறி மேற்கொள்ளப்பட்ட தவறுகள் தொடர்பாக உரிய நபர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஏனைய விடயங்கள்

அதே போன்று இவ்வாண்டில் சட்டப்பிரிவினால் கையடக்க – நிலையான தொலைபேசி தொடர்பாக தகவல்கள் பெற்றுக்கொள்ளும் கோரிக்கைகள் தொடர்பில் நீதிமன்ற கட்டளைகள் பல நடவடிக்கை எடுப்பதில் அதிகரிப்பொன்று காணக்கூடியதாக உள்ளது.

## நிருவாகப் பிரிவு

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவின் பணிகள் உன்னத விதத்தில் வினைத்திறனாக நடாத்தி செல்வதற்கு வழிநடத்து முகமாக நிருவாகம் மற்றும் அலுவலக செயல்பாடுகளின் பிரிவு நிறுவனத் தினுள் பிரதானமாக மிக முக்கியமான பணிகளினை மேற்கொள்கின்றன. நிறுவன திட்டமிடல் ஒழுங்கமைப்பு நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் நிறுவனத்தினுள் மட்டுமல்லாது நிறுவனத்திற்கு வெளியில் வேறு நிறுவனங் களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளினை மேற்கொள்ளுதல் நிறுவன ரீதியான மற்றும் ஒழுக்க செயற்பாடுகள், மதிப்பீடுகள், பயிற்சியளித்தல், கொடுப்பனவுகள், சிபாரிசு செய்தல், அங்கிகரித்தல், பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு செயற்பாடுகள், போக்குவரத்து வசதிகளினை வழங்குதல், பதவியணியின் நலன்புரி செயல்பாடுகளை ஆராய்ந்தறிதல் மற்றுமல்லாது, பணிகளினை மேம்படுத்துமுகமாக பௌதீக ரீதியான சுற்றாடலினை நடாத்தி செல்லல், தகவல் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் நூல் நிலைய வசதிகளினை வழங்குதல், நிறுவன ரீதியான திட்டங்கள் மற்றும்

வருடாந்த அறிக்கையினை தயார் செய்தல், சட்டம் மற்றும் திட்டங்களினை ஏற்பாடு செய்தல் மற்றுமல்லாது நிறுவனத்தின் மிக முக்கியமான சந்தர்ப் பங்கள் தொடர்பாக ஊடக வசதிகளினை வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றன.

## மீளாய்வு ஆண்டின் போது செயலாற்றுகை கீழ்குறிப்பிடப்படுகின்றன.

1. இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம், 2015ம் ஆண்டில் நிலையான பதவியணியினர் 193 பேர், ஒப்பந்த பகுதியணியினர் 22 பேர், சேவை வகைப்படுத்தல் 12ல் உள்ளடக்கிய பதவிகள் தொடர்பாக வெற்றிடங்கள் 88, காணப்படுகின்றன. இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்கு படுத்துகை ஆணைக்குழுவிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை 300 ஆகும்.

**அட்டவணை – 04.18**

**வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2015**

| நிகழ்ச்சித்திட்டம் | நாடு | இருந்து | வரை | நிதி உதவி வழங்கு கின்ற நிறுவனம் |
|---|---|---|---|---|
| தென்னாசிய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தனர்களின் சங்கம் - 16 கூட்டங்கள் / தேசஎல்லை வகுதியினர்கள். | புதுடில்லி | 2015.08.18 | 2015.08.28 | APT/TRC |
| போட்டித்தன்மை சந்ததிகள் மற்றும் எதிர்கால சந்ததியின ருக்கான கையடக்கத் தொலை பேசியின் எதிர்காலம் மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் 2015 மற்றும் 2015ஆம் அமர்வு வாரம். | துர்க்கி, ஜெனீவா | 2015.05.05 | 2015.05.13 | TRC |
| அமைச்சரவை நிகழ்ச்சித்திட்டங்கள் பூகோள முறைமை கையடக்கத் தொலைபேசி மாநாடு. | சிங்கப்பூர் | 2015.05.01 | 2015.05.07 | TRC |
| ஆசிய பசுபிக் தொலைத்தொடர்பு சங்கத்தின் 15ஆவது கொள்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்துகை மாநாடு. | சிங்கப்பூர் | 2015.08.02 | 2015.08.06 | APT |
| ITU-D கற்கை குழுக்களின் கூட்டம் | | 2015.09.13 | 2015.09.20 | TRC |

| நிகழ்ச்சித்திட்டம் | நாடு | இருந்து | வரை | நிதி உதவி வழங்கு கின்ற நிறுவனம் |
|---|---|---|---|---|
| IPV6 உட்கட்டமைப்பு வசதிகள் பாதுகாப்பு | பெங்கொக் | 2015.06.22 | 2015.06.26 | TRC |
| ITU-T கற்கை குழுக்கள் | ஜெனீவா | 2015.12.03 | 2015.12.11 | TRC |
| ITU-R பதவியணிக்குழுக்கள் 6A ஆய்வு குழு ஒலிபரப்புச் சேவை பற்றிய 6ஆவது கூட்டம். | ஜெனீவா | 2015.07.13 | 2015.07.23 | TRC |
| தொலைத்தொடர்பு மற்றும் (Cloud) சேவை பரந்த தரவுகள். (Big Data பற்றிய பயிற்சிப் பாடநெறி) | தாய்லாந்து | 2015.11.14 | 2015.11.14 | APT |
| வானொலி அலைக்கற்கை போட்டித் தன்மையினை முகாமை செய்தல் மற்றும் கம்பிகளற்ற அதிவேக இணை யத்தள சேவையினைத் தயார் செய்தல். | யப்பான் | 2015.11.09 | 2015.11.19 | APT |
| அபிவிருத்திக்கான டிஜிற்றல் முறைமை பற்றிய மாநாடு. | பிலிபைன் | 2015.09.21 | 2015.09.25 | APT |
| கிராமிய பிரதேசங்களுக்கான சிறிய அளவிலான தொலைத்தொடர்பு பற்றிய பிரயோக தொழில்நுட்ப மற்றும் அவற்றின் செயற் படுத்துகை. | யப்பான் | 2015.12.01 | 2015.12.12 | APT |
| வானொலி அலைக்கற்கை முகாமைத்துவ பாடநெறிகள். | கொரியா | 2015.04.11 | 2015.04.19 | APT |
| தொலைக்காட்டி தொலைதூர ஒளி பரப்பினை பயன்படுத்தி கிராமிய பிரதேசங்களுக்கு தொலை பேசி யினைப் பரவலடையச் செய்வ தற்கான தீர்வைகளினை வழங்குதல். | யப்பான் | 2015.11.08 | 2015.11.20 | APT |
| கொள்கை உருவாக்கம் மற்றும் சேவைகள் பற்றிய தென்னாசிய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்து னர்கள் சங்கத்தின் பதவியணி குழு. | நேபாளம் | 2015.02.24 | 2015.02.27 | APT |
| தேசிய இலத்திரனியல் கைத் தொழில் உபாயத்தினை மேம்பாடு செய்தல். | தாய்லாந்து | 2015.03.02 | 2015.03.06 | ITU |
| தேசிய இலத்திரனியல் விவசாய முறைமையை மேம்படுத்தல். | தாய்லாந்து | 2015.03.03 | 2015.05.03 | ITU |

| நிகழ்ச்சித்திட்டம் | நாடு | இருந்து | வரை | நிதி உதவி வழங்கு கின்ற நிறுவனம் |
|---|---|---|---|---|
| தொலைத்தொடர்பு – தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத் தற்கான டிஜிற்றல் அடிப்படை பற்றிய ஆசிய பசுபிக் மாநாடு. | மலேசியா | 2015.08.26 | 2015.08.29 | ITU |
| ஆசிய பசுபிக் தொலைத்தொடர்பு சங்கத்தில் 6 ஆவது சைபர் பாது காப்பு மாநாடு. | தாய்லாந்து | 2015.10.19 | 2015.10.23 | APT |
| அதிவேக இணையத்தள பிரவேசத் தினை வினைத்திறனாக்குவது பற்றிய சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் ஆசிய பசுபிக் வலய மாநாடு. | இந்தோனே சியா | 2015.09.07 | 2015.09.11 | ITU |
| தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப குறிகாட்டிகள் மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய நிபுணர் களின் குழு. | ஜெனீவா | 2015.09.20 | 2015.09.28 | TRC |
| கைத்தொழிற்சாலை கண்காணிப்பு – கொழும்பு தாமரைக் கோபுர செயற்திட்டம். | சீனா | 2015.11.13 | 2015.11.19 | CEIEC |
| சர்வதேச சைபர் பாதுகாப்பு மாநாடு. | இந்தியா | 2015.08.19 | 2015.08.22 | ITU |
| ஒளிபரப்பு சேவை பற்றிய Out – 6 கற்கை குழு 6 (SD6) கூட்டம். | ஜெனீவா | 2015.07.12 | 2015.07.26 | TRC |
| ITU-T SG15 வலையமைப்புக்கள் தொழில்நுட்பம் மற்றும் போக்கு வரத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகள். | ஜெனீவா | 2015.06.22 | 2015.07.05 | TRC |
| ITU-T உலக தொலைத்தொடர்பு விஞ்ஞாபனம் - 2015 | ஹங்கேரி | 2015.10.11 | 2015.10.16 | ITU |
| தொலைத்தொடர்பு அலைக் கற்கை ஒழுங்குபடுத்துதல் பற்றிய சர்வதேச மாநாடு. | இஸ்தன்புள் | 2015.09.13 | 2015.09.19 | ITU |
| தகவல் தொடர்பு தொழில்நுட்ப கைத்தொழிலின் பயன்பாடு மற்றும் பரந்த தரவு (Big Deta) பகுப்பாய்வு பற்றிய பயிற்சிப் பாடநெறி. | சீனா | 2015.10.18 | 2015.10.31 | APT |

| நிகழ்ச்சித்திட்டம் | நாடு | இருந்து | வரை | நிதி உதவி வழங்கு கின்ற நிறுவனம் |
|---|---|---|---|---|
| ஆசிய பசுபிக் தொலைத்தொடர்பு சங்கம் - சர்வதேச தொலைத் தொடர்பு சங்கத்தின் இணக்கப்பாடு மற்றும் இடைச்செயற்பாடுகள் பற்றிய நிகழ்ச்சித் திட்டம் 2015. | தாய்லாந்து | 2015.09.06 | 2015.09.13 | APT/ITU |
| ஆசிய பசுபிக் வலயத்திற்கான சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் வலைய நியமப்படுத்தல் மாநாடு. | இஸ்தன்புள் | 2015.10.26 | 2015.10.29 | ITU |
| WTSA – 16, ற்கான ஆசிய பசுப்பிக் தொலைத்தொடர்பு சங்கத்தின் ஆரம்ப குழுவின் 2ஆவது கூட்டம். | தாய்லாந்து | 2015.10.14 | 2015.10.18 | APT |
| பகிர்ந்தளித்தல் (Delivery) பற்றிய NBTC/ITU வலய மாநாடு. | தாய்லாந்து | 2015.08.05 | 2015.08.10 | ITU |
| 2015ஆம் ஆண்டின் 2ஆம் அமர்வு வாரம் ஆரம்ப கூட்டங்களின் மாநாடு. | ஜெனீவா | 2015.03.22 | 2015.04.04 | TRC |
| ITU/NBTC ADB ஆசிய பசுபிக் வலைய மாநாடு. | தாய்லாந்து | 2015.03.25 | 2015.03.27 | ITU |
| இடர் தொடர்பாடல் முகாமைத்துவம் பற்றிய ஆசிய பசுபிக் தொலைத் தொடர்பு சங்கத்தின் 6ஆவது மாநாடு | பிஜி | 2015.07.07 | 2015.07.09 | APT |
| அலைக்கற்கை முகாமைத்துவ முறைமைகள் மற்றும் ஆய்வுக் குழுவின் 1 ஆவது கூட்டம் | ஜெனீவா | 2015.06.02 | 2015.06.15 | TRC |
| இடர்களுக்கு தயாராவதனை வலுப்படுத்துவதற்கான பயிற்சிப் பாடநெறி | யப்பான் | 2015.12.07 | 2015.12.19 | APT |
| விசேட பிரவேசம் பற்றிய அதிவேக இணையத்தள சேவைக் | இந்தியா | 2015.09.06 | 2015.09.12 | APT |
| வலிமுகப்படுத்தப்பட்ட நிலைமகள் பற்றிய அதிவேக இணையத்தள சேவை கொள்கைகள் | தாய்லாந்து | 2015.12.13 | 2015.12.20 | APT |
| கொள்கைகள் மற்றும் ஒழுங்கு படுத்துகை பற்றிய தென்னாசிய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் சங்கத்தின் மாநாடு | நேபாளம் | 2015.12.19 | 2015.12.26 | APT |

| நிகழ்ச்சித்திட்டம் | நாடு | இருந்து | வரை | நிதி உதவி வழங்கு கின்ற நிறுவனம் |
|---|---|---|---|---|
| எழிலற்ற நகரங்கள் பற்றிய பயிற்சி பாடநெறி | சீனா | 2015.09.03 | 2015.09.13 | APT |
| ஈ அரசாங்கம் எழிலற்ற நகரங்கள் மற்றும் டிஜிற்றல் சமூகம். | தாய்லாந்து | 2015.08.18 | 2015.08.23 | ITU |
| தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி ஆசிய பசுபிக் வலய இடர்களுக்கு தயாராவதனை வலுப்படுத்தல் பற்றிய பயிற்சிப் பாடநெறி | யப்பான் | 2015.01.26 | 2015.02.06 | APT |
| சைபர் பாதுகாப்பு பற்றிய பயிற்சி பாடநெறி | யப்பான் | 2015.10.26 | 2015.10.30 | APT |
| 55 ஆவது பொதுக்கூட்டம் மற்றும் வருடாந்த மாநாடு | கென்யா | 2015.09.13 | 2015.09.19 | TRC |
| அதிவேக இணையத்தள சேவை தொடர்பாடலுக்கான கொள்கை ரீதியான தொழில்நுட்பம் | யப்பான் | 2015.11.04 | 2015.11.12 | APT |
| அதிவேக இணையத்தள சேவை களுக்கான சைபர் பாதுகாப்பு | யப்பான் | 2015.11.03 | 2015.11.14 | APT |
| ஆசிய பசுபிக் தொலைத்தொடர்பு சங்கத்தின் வட்டமேசை கலந்துரை யாடல் தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்பம் மற்றும் நிதி ஒழுங்குபடுத்துகை | மலேசியா | 2015.08.23 | 2015.08.27 | TRC |
| நான்காவது மற்றும் எதிர்கால சந்த தியினருக்கான கையடக்க தொலை பேசி எதிர்காலம் மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் 2015 ஆம் ஆண்டின் பொதுச்சபை வாரம் | துர்க்கி, ஜெனீவா | 2015.05.05 | 2015.05.13 | TRC |
| இளைஞர் தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்ப ஒழுங்கு படுத்துனர்களின் மாநாடு 2015. | தென் கொரியா | 2015.12.06 | 2015.12.13 | ITU |
| தகவல் தொழில் நுட்பம் மற்றும் கணணி தொடர்பாடல் பற்றிய பயிற்சி பாடநெறி | சீனா | 2015.05.03 | 2015.05.13 | APT |
| சைபர் பாதுகாப்புப் பற்றிய Talinn கையேடு 2.0 மற்றும் பூகோள மாநாடு மற்றும் கூட்டங்கள் 2015. | நெதர்லாந்து | 2015.03.15 | 2015.03.17 | TRC |
| SAARC சார்க் வலயங்களுக்கான செய்மதி தொழில்நுட்பம் மற்றும் ஒலிபரப்பு தொழில்நுட்ப பயன்பாடு பற்றிய மாநாடு. | இந்தியா | 2015.06.21 | 2015.06.23 | APT |

**அட்டவணை – *04.19***

**உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2015**

| |
|---|
| 1. பட்டய வரி ஆலோசனைகளின் இறுதிமட்ட பாடநெறி. இலங்கை பட்டயக்கணக்காளர்களின் நிறுவனம்.<br><br>தகவல் தொழில்நுட்பம் பற்றிய பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி 18 மாதங்கள். இந்திய முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப நிறுவனம். |
| 2. தகவல் தொழில்நுட்பம் பற்றிய பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி<br>18 மாதம்<br><br>இந்திய முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் |
| 3. ISO தரநியம நிகழ்ச்சித்திட்டம்<br><br>1 நாள்<br><br>தேசிய நூல்நிலைய மற்றும் கையேட்டுச் சேவைகள் |
| 4. வினைத்திறனான விதத்தில் கொள்கைகள் மற்றும் நடவடிமுறை எழுதுனர்களின் நிபந்தனைகள் யாவை ?<br><br>• Cinnomon Grand Hotel கொழும்பு. |

2. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையின் பிரகாரம் வெளியக விண்ணப்பதாரிகளுக்கூடாக விண்ணப்பங்கள் அழைக்குமுகமாக, பத்திரிகை அறிவித்தல்கள் ஊடாக வெளியிடப்பட்டு 70 பதவிகள் தொடர்பாக அனுமதிப்பத்திரங்கள் அழைக்கப்பட்டுள்ளதுடன், வெளியக விண்ணப்ப தாரிகள் ஊடாக 7 பதவிகள் தொடர்பாக அனுமதிப்பத்திரங்கள் அழைக்கப்பட்டுள்ளன.

3. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி பிரிவின் ஒத்துழைப்புடன் 2014 - 2016 இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவின் நிறுவன திட்டம் மற்றும் 2014ம் ஆண்டுக்கான செயல்பாட்டுத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

4. நிருவாக பிரிவின் பதவியணியினரின் தனிப்பட்ட கோரிக்கைகளினை பேணுதல், ஆட்சேர்ப்பு செய்தல், நிரந்தரப்படுத்தல், பதவி உயர்வு வழங்குதல், ஊழி யர்களின் செயலாற்றுகையினை மதிப்பீடு செய்தல், ஒழுக்காற்று விசாரணைகள், நிறுவன ரீதியான திட்டங்கள் மற்றும் புதிய வருடாந்த அறிக்கை திட்டங்களினை தயார் செய்தல், கொள்வனவு

ஏற்பாட்டு செயற்பாடுகளினை முகாமை செய்தல், சட்டதிட்டங்கள் ஒழுங்கு விதிகள் மற்றும் பிரமாணங்களை தயாா் செய்தல் மனிதவள அபிவிருத்தி வரவு செலவு திட்டம் மற்றும் தயார் செய்தல் கண்காட்சிகள் போன்ற இணைந்த செயற்பாடுகளில் ஈடுபடல் போன்ற ஊழியர்களின் முகாமைத்துவத்துடன் இணைந்த அலுவலக செயற்பாடுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

5. இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குப்படுத்துகை ஆணைக்குழுவின் உதவி ஊழியர்களின் தொழில்சார் அபிவிருத்தியினை மேம்படுத்துமுகமாக, 2015ம் ஆண்டில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி சந்தர்ப்பங்களினை வழங்கி உள்ளதுடன், அவ்வாறான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி சந்தர்ப்பங்கள் பற்றிய பட்டியலொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை *– 04.18***

6. விசேட நிர்வாக மற்றும் மனிதவள அலுவல்களினை மீள் கட்டமைப்பு செய்தல் மற்றும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துகை சங்கத்தின் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைமைகளின் பிரகாரம் 2014.மே.14 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தற்பொழுது சேவையாற்றுகின்ற பதவியணியினருடன் தொடர்புடைய பதவிகளுக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கான அனுமதியினை வழங்கியுள்ளது. மேற்படி ஆட்சேர்ப்பு நடபடி முறைகளின் பிரகாரம் இந்த 2012 மே மாதம் 01ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் புதிய பதவிகளுக்குரிய சம்பள அளவுத்திட்டத்தில் உரிய சம்பள மட்டத்தில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் பெறுமதிசேர் வரி சேவைகளினை மேம்படுத்தும் முகமாக உள்ளகக் கணக்காய்வு பிரிவு வினைத்திறனான செயற்பாடுகள் நம்பிக்கையான நிதி அறிக்கைகள் மற்றும் மோசடிகள் ஊழல்களினை தவிர்த்தல் மற்றும் புலனாய்வு செய்வதற்கு வழிவகை செய்யும் வகையில் தமது பணிகளினை சுயாதீனமாக மேற்கொள்கின்றது.

2015 ஆம் ஆண்டில் கணக்காய்வு குழு கூட்டங்கள் 4 நடாத்தப்பட்டுள்ளதுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் 8 அளவில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

உள்ளகக்கணக்காய்வு அறிக்கையின் ஊடாக உள்ளடக்கப்பட்ட விடய பரப்பு – 2015

| அறிக்கை இலக்கம் | அறிக்கைத் தினம் | விடயத் துறை |
|---|---|---|
| CIA/15/01 | 2015/01/28 | முகாமைத்துவ தகவல் (2014 சனவரி 1ஆம் திகதியில் ஆரம்பமாகி டிசம்பர் 31ஆந் திகதியுடன் நிறைவடைகின்ற கால எல்லைக்கான நிதி அறிக்கை) |
| CIA/15/02 | 2015/02/19 | ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஆயுள் செலவீன கொடுப்பனவுக்காக பங்களிப்புச் செய்வதனை கணக்கிடல். |
| CIA/15/03 | 2015/03/13 | தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணத்தில் 2/3 பகுதியினை பகிர்ந்தளித்தல். |
| CIA/15/04 | 2015/04/02 | அலுவலக நேரங்கள் மற்றும் விடுமுறை அறிக்கை |
| CIA/15/05 | 2015/04/21 | கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் |
| CIA/15/06 | 2015/06/23 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களினைப் பரீட்சித்தல் |
| CIA/11/07 | 2015/08/19 | கடன் மற்றும் பிணையாளர்கள் பற்றிய பதிவேட்டினை இற்றைப்படுத்தல் |
| CIA/11/08 | 2015/11/26 | கையடக்கத் தொலைபேசி செயற்படுத்துனர்களின் வரி. |

## நிதிப் பிரிவு

**மீளாய்வு**

ஆணைக்குழுவின் அனைத்து நாணயக் கொள்கையுடன் தொடர்புடைய அனைத்து தீர்மானங்களும் உள்ளிட்ட நிதிசார் முகாமையை மேற்கொள்வது நிதிப் பிரிவின் முக்கிய கடமையாக உள்ளது. வருமானங்களைச் சேகரித்து பொருத்தமான முதலீடுகளின் ஊடாக அவற்றை உச்சளவில் பயன்படுத்துவது இப்பிரிவின் ஏனைய தொழிற்பாடுகளில் அடங்கும். கட்டுப்பாடு மற்றும் செலவிடுதல் போன்ற நிதிப் பிரிவின் தொழிற்பாடுகள் தொடர்புடைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்ற நியதிச்சட்டக் கட்டமைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணம் நிதிப் பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஆணைக்குழுவின் தீர்மானங்கள்.

ஆணைக்குழு முக்கியமான தீர்மானங்களை நிதிப் பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்வதனால் நிதிப் பதிவுகளைத் துல்லியமான முறையில் பேணி வருவது நிதிப் பிரிவின் பிரதான பொறுப்புக்களில் ஒன்றாகும். கொடுக்கல் வாங்கல்களின் துல்லியத்தன்மையையும் முழுமையான தன்மை யையும் உறுதிப்படுத்துவதற்காகவும் அவை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கும் இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கும்

இணங்கியதாக உள்ளமையை உறுதிப்படுத்துவதற்காகவும் அனைத்து அரசாங்க நிறுவனங்களும் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கும் கடப்பாட்டைக் கொண்டுள்ளன. மீளாய்வாண்டில் நாம் எமது நிதிக் கூற்றுக்களை உரிய திகதிகளில் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்துள்ளோம். நிதிப் பிரிவின் தொழிற்பாடுகளில் நிதிக் கூற்றுக்களில் வரலாற்று ரீதியான தரவுகளைப் பதிவுவது மாத்திரமன்றி, நிதி நிர்வாகம், செலவுக் கட்டுப்பாடு, செயற்திட்ட மதிப்பீடு, அபிவிருத்தித் திட்டமிடல், உபாயமுறை தீர்மானங்களை மேற்கொள்வதில் பயனறுறுதி வாய்ந்த முறையிலும் வினைத்திறன்மிக்க முறையிலும் பங்கேற்றல் என்பன போன்ற விடயங்களும் நிதிப் பிரிவின் தொழிற்பாடுகளில் அடங்கும்.

## தொழிற்பாடுகள்

- நிதிப் பெறுபேறுகள், வரவு செலவுத் திட்டத்துடனான / எதிர்வு கூறலுடனான வேறுபாடுகள், என்பவற்றை அறிக்கைப்படுத்தலும் அவற்றுக்கான காரணங்களை முனைவைத்தலும்.
- வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை/எதிர்வுகூறலைத் தயாரித்தல்.
- உள்ளகக் கட்டுப்பாடு முறைமையை உருவாக்கிப் பராமரித்தல்.
- அனைத்து நிலையான சொத்துக்களினதும் பதிவுகளைப் பேணி வருதலும் அவற்றின் பாதுகாப்பு, உச்ச பயன்பாடு என்பவற்றை உறுதிசெய்தலும்.
- மூலதனம் மற்றும் மீளெழும் செலவின நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது உயர் முகாமைத்துவத்திற்கு வழிகாட்டல்களையும் உதவிகளையும் வழங்குதல்.
- வரி தொடர்பான திட்டமிடல் மற்றும் உரிய நியதிச்சட்ட நிறுவனங் களுடனான இணக்கப்பாடு.
- கணக்காய்வாளர் அறிக்கைகள், கணக்காய்வுக் குழு அறிக்கைகள் என்பன போன்ற பருவகால தொழிற்பாட்டு மற்றும் நிதி அறிக்கைகளை மீளாய்வு செய்து பகுப்பாய்வு செய்தலும் ஏதேனும் குறைபாடுகள் மற்றும் விலகல்கள் காணப்படுமாயின் அவற்றைத் திருத்துவதற்கான / பொருத் தமான நடவடிக்கைகளை எடுத்தலும்.
- அரசாங்கத்தினாலும் பாராளுமன்றச் சட்டத்தினாலும் விதிக்கப்படும் பல்வேறு மட்டங்களினாலான தீர்வைகள் உரியமுறையில் சேகரிக்கப் படுவதை உறுதிசெய்தல்.

- சேகரிக்கப்படும் நிதிகள் உடனடியாகவும் உரியவாறும் திறைசேரிக்கு அனுப்பப்படுவதை உறுதிசெய்தல்.
- ஏதேனும் மேலதிக நிதிகள் இருப்பின், அவற்றை அபாயம் குறைந்ததும் இத்துறையின் அபிவிருத்திக்கான அதிக பயன்தரக் கூடியதுமான முதலீடு செய்வதன் மூலம் அவற்றின் உச்ச பயன்பாட்டை உறுதிசெய்தல்.
- ஆணைக்குழு காலாண்டு மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.
- வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பான புள்ளிவிபரப் பதிவுகளைப் பேணி வருதலும் உயர் முகாமைத்துவம் கோருகின்ற போது தகவல்களை வழங்குதலும்.

## செயலாற்றுகை.

### வருமானம்

வருமானங்களை விதித்து அறவிடுவதற்கான நியதிச்சட்ட அதிகாரம் 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு திருத்தச் சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இவ் ஆணைக்குழு, வானொலி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், செஸ் வரி, முறை மைச் சேவை வழங்குநர் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், விற்பனையாளர் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் PSTN சேவை வழங்குநர்கள் மற்றும் வானொலி அதிர்வெண் பாவனையாளர்களுடன் தொடர்புடைய ஏனைய கட்டணங்களை விதித்து அறவீடுகின்றது.

**2013 - 2015 காலப் பகுதியில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் வருமானம்**

| வருமான மூலம் | **2015** (ரூபா. '000) | **2014** (ரூபா. '000) | **2013** (ரூபா. '000) |
|---|---|---|---|
| முறையை இயக்குநர் அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 107,708 | 261,816 | 2,060,743 |
| செஸ் கட்டணங்கள் | 3,840,742 | 3,651,983 | 3,500,556 |
| வானொலி அலைவரிசை அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 6,756,145 | 8,672,210 | 8,226,963 |
| அலைவரிசை முன்னோக்கிய கட்டணங்கள் | 0 | 0 | 5,661,039 |
| விற்பனையாளர் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 13,086 | 12,337 | 12,464 |
| பயிலுநர் வானொலி அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 55 | 95 | 91 |

| வருமான மூலம் | **2015** | **2014** | **2013** |
|---|---|---|---|
| | (ரூபா. ‘000) | (ரூபா. ‘000) | (ரூபா. ‘000) |
| கப்பல் நிலைய அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 764 | 798 | 696 |
| விமான அனுமதிப்பத்திரக் கட்ட ணங்கள் | 940 | 1,048 | 170 |
| கம்பியில்லா தொலைபேசி விற்பனை யாளர் அறவீடுகள் | 66,757 | 51,506 | 24,911 |
| பரீட்சைக் கட்டணங்கள் | 393 | 374 | .4 |
| விண்ணப்பச் செயன்முறைக் கட்ட ணங்கள் | 6,531 | 1,020 | 1,633 |
| குறுகிய குறியீட்டுக் கட்டணங்கள் | 14,795 | 8,418 | 8,163 |
| நானாவித வருமானம் (நிலையான வைப்புக்கள், ஊழியர் கடன்கள் போன்றவை மூலமான வட்டி வருமானம்) | 1,117,143 | 1,711,196 | 1,991,029 |
| **மொத்தம்** | **11,925,066** | **14,372,803** | **21,448,458** |

## தொலைத் தொடர்புத் தீர்வை

சேவை வழங்குநர்களால் வழங்கப்படும் இணையச் சேவைகள் தவிர்ந்த ஏனைய தொலைத்தொடர்புச் சேவைகளுக்கான தற்போதைய தொலைத் தொடர்புத் தீர்வை 25% ஆகும். இணையச் சேவை வழங்கலின் பெறுமதியின் மீது தற்போது 10% தீர்வை விதிக்கப்படுகின்றது.



மேலும், அரசினால் முறைமை அனுமதிப் பத்திர செயற்படுத்தும் கட்டணம் மற்றும் செஸ் கொடுப்பனவுக்கு பதிலாக தொலைபேசி செயற்படுத்தும் கம்பனிகளின் வருடாந்த மொத்த கிரயத்தின் படி நூற்றுக்கு 2 சதவீத செஸ் வரி அறிமுகம் செய்யப்பட்டது.

## சர்வதேச தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர் தீர்வை

மேற்குறித்த வருமானங்களுக்கு மேலதிகமாக 2009 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு இணங்க, இவ் ஆணைக்குழு, சர்வதேச தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்களிடமிருந்து உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் அழைப்புக்களுக்கான தீர்வையாக ஒரு நிமிடத்திற்கு முறையே 0.30 ஐ.அ. டொலரையும் தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணமாக (TDC) 2.00 ரூபாவும் அறவிடுகின்றது.

கடந்த மூன்று வருடங்களுக்கான வருமானங்கள் வருடாந்த அடிப்படையில் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன:



**1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்பு திருத்தச்சட்டத்தின் பிரகாரம் சேகரிக்கப்பட்ட வருமானம்.**

அதேபோன்று இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக் குழுவின் மொத்தவருமானம் குறிப்பிடப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட முடியும்.




## திரண்ட நிதியத்திற்கான மீளளிப்பு

2015 ஆம் ஆண்டில் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவினால் அரச வருமானத்தினை வலுப்படுத்தி பொது திறை சேரிக்கு ரூபா 43.6 மில்லியன்கள் மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் இது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது 100 இற்கு 7 சதவீத அதிகரிப்பாகும்.

## சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

2015 ஆம் ஆண்டில் ஆதனம் பொறி மற்றும் உபகரண கொள்வனவிற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 207.6 மில்லியன்களில் ரூபா 53.7 மில்லியன்கள் மற்றும் ரூபா 104.4 மில்லியன்கள் முறையே தொலைத்தொடர்பு அலைக் கற்கை முகாமைத்துவ முறைமைக்காக உபகரணங்கள் மற்றும் மேற்பார்வை வாகனங்களினை கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்டுள்ளதுடன் மோட்டார்வாகன கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூபா 21.7 மில்லியன்களாகும்.

## முதலீடு

கணக்கீட்டு குறிப்புக்கள் - 2015.12.31

*( இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)*

*(எஞ்சியது.......)*

| | | |
|---|---|---|
| **முற் கொடுப்பனவுகள் மற்றும் முற்பணம்** | | |
| முற்செலுத்தல்கள் | 0 | 1,930,000 |
| விசேட முற்பணங்கள் | 575 | 575 |
| விழா முற்பணங்கள் | 272,000 | 195,758 |
| கொள்வனவு முற்பணங்கள் | 151,640 | 247,640 |
| நிலையான சொத்துக்களின் அசைவு | 4,900,075 | 0 |
| | 5,324,290 | 2,373,973 |
| | - | |
| **கடன் மற்றும் வேறு கிடைப்பனவுகள்** | | |
| இடர் கடன் | 25,890,225 | 32,923,417 |
| மோட்டார் வாகன கடன்கள் | 105,620,762 | 89,560,302 |
| ஆதன கடன்கள் | 3,114,049 | 3,695,023 |
| மோட்டார் சைக்கிள் கடன்கள் | 359,331 | 703,294 |
| அறவிடப்பட வேண்டிய சம்பள குறைப்புக்கள் | 27,655 | 12,987 |
| வேறு கிடைப்பனவுகள் | 2,556,326 | 640,000 |
| பெறுமதி சேர் வரி | 141,450,189 | 141,398,308 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் (WHT) | 0 | 259,023,878 |
| உரித்துக்கான பொருளாதார சேவைகள் கட்டணங்கள் | 0 | 20,771,817 |
| | 279,018,537 | 548,729,026 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானது | | |
| வங்கியில் உள்ள காசு | 641,035,061 | 783,438,832 |
| கையில் உள்ள காசு | 237,503 | 100,849 |
| பங்குச் சந்தை சேமிப்புக் கணக்கு | 275,396,397 | 4,896,916,886 |
| | 916,668,961 | 5,680,456,567 |

| | | |
|---|---|---|
| <u>வங்கியில் உள்ள காசு</u> | | |
| மக்கள் வங்கி – நாராஹேன்பிட்டி கிளை (சேமிப்புக் கணக்கு) | | |
| கணக்கு இலக்கம் - 119/RFC/SA/USD/0032 | 80,133,171 | 71,953,150 |
| மக்கள் வங்கி – நாராஹென்பிட்டி கிளை (ஒன்று சேர்க்கும் கணக்கு) | | |
| நடைமுறைக் கணக்கு இல 119-1-001-4-3693169 | 318,598,221 | 711,182,057 |
| மக்கள் வங்கி – நாராஹென்பிட்டி கிளை (சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் வரி) நடைமுறைக் கணக்கு இல 119-1-001-3-3693264 | 232,768,161 | 225,296 |
| இலங்கை வங்கி – நாராஹென்பிட்டி கிளை | | |
| நடைமுறைக் கணக்கு இல 2323167 | 9,535,509 | 78,329 |
| | **641,035,061** | **783,438,832** |
| **கையில் உள்ள காசு** | | |
| சில்லறைக் காசு – பிரதான அலுவலகம் | 10,000 | 10,000 |
| சில்லறைக் காசு – நிருவாக மற்றும் மனித வளப் பிரிவு | 5,000 | 5,000 |
| சில்லறைக் காசு – கொகாவில் | 10,000 | 10,000 |
| சில்லறைக் காசு – தாமரைக் கோபுரம் | 25,000 | 25,000 |
| சில்லறைக் காசு – பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம் | 15,000 | 15,000 |
| சில்லறைக் காசு -- இணக்கப்பாடுகள் | 5,000 | 5,000 |
| சில்லறைக் காசு – புலனாய்வுகள் | 0 | 25,000 |
| கையில் உள்ள காசு (திரட்டும் கணக்கு) | 167,503 | 5,849 |
| | **237,503** | **100,849** |
| <u>அரச பங்களிப்பு</u> | | |
| உலக வங்கி கடன் உடன்படிக்கைகள் | 298,572,434 | 298,572,434 |
| ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 19,533,906 | 19,533,906 |
| வேறு அரச பங்களிப்புக்கள் | 208,108,404 | 208,108,404 |
| | **526,214,744** | **526,214,744** |

## இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

கணக்கீட்டு குறிப்புக்கள் - 2015.12.31

*( இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)*

*(எஞ்சியது.......)*

| | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|
| **நிறுத்தி வைத்தவை** | | |
| நிறுத்தி வைத்தல் - தாமரைக் கோபுரம் | 742,909,015 | 611,198,130 |
| நிறுத்தி வைத்தல்கள் - தகவல் தொழில்நுட்பப் பூங்கா | 63,909,914 | 4,024,107 |
| | **806,818,929** | **615,222,237** |
| **பணிக்கொடை நன்மைகள்** | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கம் | 40,942,627 | 36,686,637 |
| நிலையான வைப்புக்கள் (பணிக்கொடை) | (36,700,000) | (21,835,000) |
| நிகர நலன் பொறுப்புக்கள் | **4,242,627** | **14,851,637** |
| | - | |
| **கிடைக்க வேண்டிய கணக்குகள்** | | |
| அட்டுறு செலவீனங்கள் | | |
| தொலைபேசி – அலுவலகம் | 578,063 | 390,303 |
| - வீடு | 225,472 | 0 |
| சம்பள கட்டுப்பாடு (ஒப்பந்த ஊழியர்கள்) | 2,113,111 | 2,054,051 |
| செலுத்த வேண்டிய சம்பளங்கள் | 118,134 | 112,884 |
| செலுத்த வேண்டிய விதவை மற்றும் அனாதைகள் | 72,678 | 115,625 |
| மின்சாரம் | 2,640,460 | 2,625,748 |
| நீர் | 31,573 | 83,658 |
| சட்ட பரிசோதகர் சேவைகள் | 414,824 | 290,773 |
| பாதுகாப்புச் சேவைகள் | 1,252,200 | 475,487 |
| மேலதிக நேர வேலை | 735,994 | 906,324 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 2,855,772 | 492,214 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 340,354 | 59,065 |
| இணையதளம் | 261,993 | 1,109 |
| மருத்துவ காப்புறுதி உரித்துக்கள் | 250,995 | 250,995 |
| பதவியணி நலன்புரி | 175,830 | 802,939 |
| பத்திரிகைகள் மற்றும் அறிவித்தல்கள் | 72,055 | 154,210 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 1,267,520 | 1,198,520 |
| குத்தகை வாடகை | 455,810 | 182,324 |
| உபகாரக் கொடுப்பனவுகள் | 18,319,345 | 23,425,346 |
| நிறுத்தி வைத்தல்கள் | 60,595 | 460,489 |
| 2/3 வட்டி – மீளளிப்புச் செய்தல் | 200,962 | 0 |

| | | |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் (பொருளாதார சேவைகள் கட்டணம், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, முத்திரை வரி) | 0 | 34,495,266 |
| சம்பளத்தை குறைத்தல் | 87,292 | 87,792 |
| திருத்தம் மற்றும் பராமரிப்பு | 295,104 | 58,366 |
| செலுத்த வேண்டிய விமான பயணச் சீட்டு | 134,500 | 0 |
| செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் | 853,310 | 707,458 |
| செலுத்த வேண்டிய உழைக்கும் போது செலுத்தும் வரி (ஆணைக்குழு மற்றும் அங்கத்துவக் கொடுப்பனவுகள்) | 77,905 | 60,639 |
| இதர | 69,901,484 | 80,257,764 |
| வருமான வரிக்கான ஒதுக்கங்கள் | 119,077,278 | 425,404,724 |
| | **222,870,612** | **575,154,075** |
| <u>முற்பணம், வைப்பு மற்றும் செலுத்த வேண்டிய விடயங்கள்</u> | | |
| முற்பணமாக கிடைத்த வருமானங்கள் | 4,821,396,341 | 2,436,074,897 |
| விலைமனு தொடர்பாக செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 1,686,667 | 1,574,667 |
| மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் - ஊழியர் | 2,086,843 | 2,086,843 |
| மெகாவோட்ஸ் 1800 எல்லை தொடர்பாக கிடைத்த வருமானம் | 57,500,000 | 57,500,000 |
| தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பம் பற்றிய வினைதிறனான இடர் முகாமைத்துவ மாநாடு | 34,210 | 34,210 |
| சேதமடைந்த என்டனாக்களுக்கான காப்புறுதி உரிமைகள் | 25 | 25 |
| அலைக்கற்றை அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அதிகமாக அறிவிட்டுக் கொள்ளல் | 1,730,776 | 0 |
| C.T.O தொலைத்தொடர்பு நிலைய செயற்திட்டம் | 924,492 | 924,492 |
| நிர்மாணிப்பு கடன்பட்டோர் | 751,650 | 751,650 |
| | **4,886,111,003** | **2,498,946,784** |

## இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

கணக்கீட்டு குறிப்புக்கள் - 2015.12.31

*( இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)*

(எஞ்சியது.......)

| | | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|---|
| திறைசேரிக்குச் செலுத்த வேண்டியவை | | | |
| திறைசேரிக்கு செலுத்த வேண்டிய தொலைத்தொடர்பு அபிவிருத்தி நிதியம் 50% | | 443,810,750 | 533,089,818 |
| திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய வெளிச் செல்லும் உள்நாட்டு பிரவேச கட்டண வரி | | 119,437,954 | 152,120,503 |
| திறைசேரிக்கு செலுத்த வேண்டிய தொலைத்தொடர்பு வரி | | 1,915,632,763 | 1,749,649,913 |
| கையடக்க தொலைபேசி செயற்படுத்துனர் வரிகள் | | 250,000,000 | 0 |
| | | **2,728,881,467** | **2,434,860,234** |
| **வருமானம்** | | | |
| வருமானங்கள் - அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 18 அ | 11,654,266,334 | 14,136,865,663 |
| தொலைத்தொடர்பு வரிகள் | | 27,859,339,451 | 26,055,119,580 |
| தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணங்கள் | 18 ஆ | 5,865,810,050 | 5,493,314,001 |
| வெளிச் செல்லும் உள்நாட்டு பிரவேசக் கட்டணங்கள் | | 1,605,715,317 | 1,894,515,739 |
| கையடக்க தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களின் வரி | | 1,250,000,000 | 0 |
| | | 48,235,131,152 | **47,579,814,983** |
| வருமானம் - அனுமதிப்பத்திர கட்டணங்கள் | | | |
| முறைமை செயற்படுத்துனர் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | | 107,708,483 | 261,816,469 |
| செஸ் கட்டணங்கள் | | 3,840,742,141 | 3,651,983,268 |
| தொலைத்தொடர்பு அலைக்கற்றை கட்டணங்கள் | | 6,756,145,435 | 8,672,210,063 |
| வர்த்தக அனுமதிப்பத்திரம் | | 13,086,877 | 12,336,975 |
| பயிலுனர் வானொலி அனுமதிப்பத்திரம் | | 55,738 | 95,025 |
| கப்பல் நிலைய அனுமதிப்பத்திர கட்டணம் | | 764,455 | 797,624 |
| விமான நிலைய அனுமதிப்பத்திரம் | | 940,818 | 1,047,703 |
| கம்பிகள் இல்லாத தொலைபேசிகளை பகிர்ந்தளிக்கும் கட்டணங்கள் | | 66,757,611 | 51,506,290 |
| பரீட்சைக் கட்டணம் | | 393,858 | 374,130 |
| விண்ணப்பப் படிவம் தயார் செய்யும் கட்டணம் | | 6,531,511 | 1,020,408 |
| குறுஞ் செய்தி இலக்க கட்டணங்கள் | | 14,795,918 | 8,418,367 |
| மிக வருமானங்கள் - 18 அ (1) | | 1,117,143,155 | 1,711,196,261 |
| | | **11,925,066,000** | **14,372,802,583** |
| கழி: தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | | (270,799,666) | (235,936,920) |
| | | 11,654,266,334 | **14,136,865,663** |

| | | |
|---|---|---|
| ஏனைய வருமானங்கள் | | |
| பதவியணி கடன்களிலிருந்து பெற்ற வட்டி வருமானம் | 5,479,557 | 4,602,837 |
| நிலையான வைப்புக்களின் படி வட்டி வருமானம் | 365,370,996 | 1,430,589,214 |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் படி வட்டி வருமானம் | 602,626,438 | 41,692,802 |
| பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கலின் படி வட்டி வருமானம் | 127,419,331 | 218,023,382 |
| வேறு வருமானங்கள் (நன்கொடைகள்) | 0 | 55,541 |
| நிலையான சொத்துக்களை நீக்கியமையின் படி இலாபம் / நட்டம் | 12,807,094 | 15,358,408 |
| நீதிமன்ற வழக்குகளிலிருந்து அறவிட்டுக் கொள்ளல் | 3,286,623 | 0 |
| நானாவித | 153,116 | 874,077 |
| | 1,117,143,155 | 1,711,196,261 |



9 - CM 27388

## இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

கணக்கீட்டு குறிப்புக்கள் - 31.12.2015

*( இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)*

*(எஞ்சியது.......)*

| | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|
| தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டணங்கள் (TDC) | | |
| தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டண வருமானம் | 5,865,810,050 | 6,756,857,862 |
| கழி: | | |
| தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டண கடன்களை விடுவித்தல் | 0 | (1,263,543,860) |
| | 5,865,810,050 | 5,493,314,001 |
| **ஒழுங்குபடுத்தல் செலவீனங்கள்** | | |
| ITU வருடாந்த அங்கத்துவ நிதி | 22,317,681 | 23,969,738 |
| APT வருடாந்த அங்கத்துவ நிதி | 2,080,912 | 1,811,413 |
| SAFIR வருடாந்த அங்கத்துவ நிதி | 545,611 | 532,529 |
| SATRC ஆன பங்களிப்பு | 348,618 | 2,001,806 |
| வருடாந்த நூல்நிலை அங்கத்துவ நிதி | 94,914 | 39,866 |
| வருடாந்த அங்கத்துவ நிதி | 4,228,300 | 0 |
| ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளுக்காக பங்கபற்றல் | 15,006,042 | 44,975,546 |
| வழக்குகளை கோவை செய்தல், ஆஜராகும் நீதிமன்ற செயற்பாடுகள் | 4,913,866 | 1,321,127 |
| தொலைத்தொடர்பு அபிவிருத்தி பற்றி பொதுமக்களை அறிவுறுத்தல் | 751,617 | 114,246 |
| வலையமைப்பு அபிவிருத்தியை மேற் பார்வை செய்தல் | 56,333 | 289,816 |
| ஆராய்ச்சிக் கற்கைகளை நடாத்துதல் | 0 | 80,000 |
| பாடசாலை மற்றும் சமூக ஒருங் கிணைப்புச் செய்தல் | 248,500 | 9,982 |
| கூட்டம் | 0 | 4,468,610 |
| பலதரப்பட்ட ஒழுங்குபடுத்தல் செலவீனங்கள் | 1,916,907 | 1,321,727 |
| விசேட தேவையுடன் கூடியவர்கள் தொடர்பாக தொலைத்தொடர்பு வசதி களை வழங்குதல் | 0 | 81,783 |
| பொருளாதார சமூக பொறுப்புக்கள் | 12,913,925 | 930,837,289 |
| சேவை நிலைமை பற்றிய மதிப்பீடு | 560,000 | 4,628 |
| வெளிநாட்டு பிரதிநிதிகளின் வருகை | 139,847 | 1,109,497 |
| ஒழுங்குறுத்துவர்களுக்கான பூகோள மாநாடு | 30,523,871 | 0 |
| தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப அபிவிருத்தி செய்தல் | 0 | 1,228,622 |
| சஞ்சிகை மற்றும் வெளியீடுகள் | 3,885 | 0 |
| தாமரைக் கோபுர செயற்திட்டம் | 310,042 | 696,615 |
| சர்வதேச மாநாட்டு ஒத்துழைப்புக்கள் | 882,992 | 0 |
| | 97,843,863 | 1,014,894,840 |

## இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

கணக்கீட்டு குறிப்புக்கள் - 2015.12.31

***( இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)***

(எஞ்சியது.......)

| | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|
| **அலுவலக மற்றும் நிருவாக செலவீனங்கள்** | | |
| சம்பளங்கள் | 136,997,048 | 132,702,773 |
| ஊ.சே.நி. ( 15 சதவீத பங்களிப்பு) | 32,730,228 | 18,011,093 |
| ஊ.ந.நி ( 3 சதவீத பங்களிப்பு) | 5,481,100 | 3,599,540 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் | 0 | 6,600 |
| போக்குவரத்துக் கொடுப்பனவுகள் | 18,784,215 | 17,165,125 |
| வீட்டு வாடகைக் கொடுப்பனவுகள் | 11,536,561 | 10,514,537 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 3,475,727 | 1,765,965 |
| செயலாற்றுகை ஊக்கப்படிகள் | 28,975,290 | 26,410,448 |
| விசேட ஊக்கக் கொடுப்பனவுகள் | 290,667 | 116,500 |
| மேலதிக கொடுப்பனவுகள் | 23,210,352 | 0 |
| உபகாரக் கொடுப்பனவுகள் | 12,392,498 | 15,551,938 |
| மேலதிக நேர வேலைகள் | 7,074,216 | 7,673,050 |
| தலைவரின் சம்பளங்கள் | 798,362 | 450,000 |
| பயன்படுத்தாத மருத்துவ விடுமுறை | 9,303,758 | 7,957,286 |
| ஓய்வூதியத்திற்கான ஆணைக்குழுவின் பங்களிப்பு | 855,998 | 1,394,820 |
| பங்களா தொலைபேசி | 2,693,413 | 2,727,617 |
| சீருடைகள் | 473,350 | 438,464 |
| பதவியணி நலன்புரி | 7,229,695 | 9,549,773 |
| விளையாட்டு செயற்பாடுகள் அபிவிருத்தி | 1,193,361 | 1,001,412 |
| பதவியணி தொழில்சார் அங்கத்துவ கட்டணம் | 444,977 | 355,799 |
| உள்நாட்டுப் பயிற்சிகள் | 244,750 | 1,519,112 |
| ஆணைக்குழு அங்கத்தவர் கொடுப்பனவுகள் | 111,500 | 82,500 |
| கணக்காய்வுக் குழு கொடுப்பனவுகள் | 73,500 | 81,000 |
| 2/3 வீட்டுக் கடன் வட்டி மீளளிப்புச் செய்தல் | 4,321,359 | 4,185,803 |
| பிரயாணம் மற்றும் உதவுதொகைகள் | 20,577 | 27,377 |
| பணிக்கொடை | 3,194,029 | 2,828,898 |
| மின்சாரம் | 12,825,132 | 13,701,743 |
| நீர் | 888,964 | 1,082,441 |
| துப்பரவு ஏற்பாட்டுச் சேவைகள் | 4,767,049 | 5,554,128 |
| பாதுகாப்பு சேவைகள் | 5,003,893 | 5,421,718 |
| தீர்வை மற்றும் வரிகள் | 917,093 | 44,417 |

| | | |
|---|---|---|
| நூல்நிலையப் புத்தகங்கள் | 124,100 | 146,240 |
| அச்சடித்தல் மற்றும் எழுதுகருவிகள் | 8,464,273 | 7,730,624 |
| எரிபொருள் | 2,457,155 | 4,968,382 |
| மின்சாரப் பொருட்கள் | 843,153 | 487,153 |
| தபால் கட்டணங்கள் | 1,052,542 | 1,092,259 |
| தொலைபேசி, பெக்ஸ் மற்றும் பீஏபிக்ஸ் | 6,794,017 | 5,563,593 |
| காப்புறுதி (ஆதனம் மற்றும் மருத்துவ) | 47,619,530 | 43,613,393 |
| இணையதளக் கட்டணங்கள் | 1,128,031 | 309,298 |
| வாகன வாடகைக் கட்டணங்கள் | 180,000 | 1,665,790 |
| செய்திப் பத்திரிகைகள் மற்றும் அறிவித்தல்கள் | 6,447,935 | 5,815,827 |
| ஆலோசனைக் கட்டணங்கள் | 188,752 | 1,164,950 |

## இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

கணக்கீட்டு குறிப்புக்கள் - 2015.12.31

*( இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)*

(எஞ்சியது.......)

| | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|
| மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் | 28,595 | 1,030,442 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 600,000 | 600,000 |
| சட்டச் செலவீனங்கள் | 476,228 | 146,935 |
| குத்தகை ஆதனம் தொடர்பான வாடகை | 1,714,648 | 2,602,634 |
| போக்குவரத்துக் கட்டணங்கள் | 67,760 | 50,010 |
| குத்தகை இணையதள வாடகைகள் | 3,543,909 | 3,889,020 |
| தேய்வுகள் | 83,706,446 | 83,523,009 |
| பலதரப்பட்ட நிருவாகச் செலவீனங்கள் | 1,678,746 | 1,682,681 |
| பலதரப்பட்ட கொள்வனவுகள் மற்றும விநி-யோகங்கள் | 552,078 | 415,459 |
| பலதரப்பட்ட செயற்பாடுகள் | 141,148 | 107,135 |
| அலுவலக பராமரிப்பு கட்டணங்கள் | 4,063,125 | 3,708,038 |
| மின் உயர்த்தி பராமரிப்பு செலவீனங்கள் | 0 | 1,070,000 |
| வாகன பராமரிப்பு செலவீனங்கள் | 4,589,946 | 4,035,878 |
| கட்டட பராமரிப்பு செலவீனங்கள் | 1,739,715 | 4,594,268 |
| தொழில்நுட்ப உபகரண பராமரிப்புக்கள் | 1,451,096 | 2,587,143 |
| மென்பொருள் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி செலவீனங்கள் | 13,302,086 | 25,811,767 |
| மேம்படுத்தப்பட்ட Lotus Dominion சேர்வர் | 0 | 239,400 |
| மேம்படுத்தப்பட்ட தயாரிப்பு கட்டமைப்பு | 0 | 2,054,023 |
| மேம்படுத்தப்பட்ட தயாரிப்பு கட்டமைப்பு | 567,196 | 341,705 |
| கோபுர பராமரிப்பு செலவீனங்கள் | 38,960 | 0 |
| | **529,869,832** | **502,968,933** |
| <u>நிதி மற்றும் பிற செலவீனங்கள்</u> | | |
| வங்கிக் கட்டணங்கள் | 312,251 | 350,959 |
| முத்திரை வரி | 132,875 | 22,575 |
| பணிக்கொடை நிதி ஒதுக்கத்தின் படி வட்டி | 2,440,993 | 1,508,664 |
| | **2,886,118** | **1,882,198** |

| | | |
|---|---|---|
| <u>**திரண்ட நிதியத்திற்கான பங்களிப்புச் செய்தல்**</u> | | |
| **தொலைத்தொடர்புச் சட்டத்தின் கீழ் பங்களிப்பு செய்தல்** | 10,000,000,000 | 10,000,000,000 |
| <u>நிதிச் சட்டத்தின் கீழ் பங்களிப்புக்கள்</u> | | |
| செலுத்தப்பட்ட தொலைத்தொடர்புக் கட்டணங்கள் | 27,861,285,917 | 26,055,119,580 |
| தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணங்கள் 50% | 2,935,118,252 | 3,378,428,931 |
| செலுத்தப்பட்ட வெளிச் செல்லும் உள்நாட்டு பிரவேசக் கட்டணத்தின் படி வரி | 1,605,715,317 | 1,894,515,739 |
| கையடக்க தொலைபேசி செயற்படுத்துனர்களின் வரி (விசேட முழுமையாக ஒரே முறையில் செலுத்தும் வரி) | 1,250,000,000 | 0 |
| | **43,652,119,486** | **41,328,064,251** |

| | | |
|---|---|---|
| <u>**செயற்பாட்டின் ஊடாக உருவாக்கப்பட்ட நிதி**</u> | | |
| வரிக்கு முந்திய நிகர இலாபம் | **47,593,376,236** | **46,266,149,704** |
| சீராக்கம் தொடர்பாக | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண பெறுமானத் தேய்வு | 83,706,446 | 83,523,009 |
| அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக் கடன் மற்றும் கடன்பட்டோருக்கான ஒதுக்கங்கள் | 17,705,645 | (10,326,247) |
| ஓய்வூதிய நலன் பகிர்வு | 3,194,029 | 2,828,898 |
| நிலையான வைப்புக்கள் மற்றும் மீள் கொள்வனவு உடன்படிக்கையின் மூலம் வட்டி வருமானம் | (967,997,435) | (41,692,802) |
| பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல் வட்டி வருமானம் | (127,419,331) | (218,023,382) |
| ஓய்வூதிய நலன் பகிர்வுக்கான வட்டி கிரயம் | 2,440,993 | 1,508,664 |
| விசேட நிதிக் கொடுக்கல் வாங்கலின் படி இலாபம் | (6,550,542) | (726,181) |
| நிலையான சொத்துக்களை நீக்கியமையின் படி இலாபம் | (12,807,094) | (15,358,408) |

## இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

கணக்கீட்டு குறிப்புக்கள் - 2015.12.31

*( இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன)*

*(எஞ்சியது.......)*

| | | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|---|
| தொழிற்படு மூலதன மாற்றம் | | | |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | 23-1 | (2,283,493,981) | 774,421,863 |
| ஆரம்ப கொடுப்பனவு மற்றும் முற்பணம் | | (2,950,317) | (155,007,041) |
| கடன் மற்றும் வேறு கிடைப்பனவுகள் | | 269,710,489 | (58,141,423) |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | 23-2 | (45,956,017) | (63,779,401) |
| முற்பணங்கள், வைப்புக்கள் மற்றும் வேறு கொடுப்பனவுகள் | | 2,316,352,449 | (945,597,352) |
| திறைசேரிக்கு செலுத்த வேண்டியவை | | 0 | (23,021,130) |
| **செயற்பாட்டின் ஊடாக உருவாக்கப்பட்ட நிதி** | | **46,839,311,572** | **45,596,758,711** |

**கிடைக்க வேண்டிய கணக்குகள்**

| | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|
| செலுத்த வேண்டிய கட்டணங்கள் | 339,219,175 | 327,304,503 |
| செலுத்த வேண்டிய தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டணங்கள் | 887,621,501 | 1,066,179,638 |
| செலுத்த வேண்டிய வெளிச்செல்லும் உள்நாட்டு பிரவேச கட்டணத்தின் படி வரி | 119,437,954 | 152,120,503 |
| கிடைக்க வேண்டிய தொலைத்தொடர்பு வரி | 1,913,596,295 | 1,749,243,261 |
| அறவிடப்பட வேண்டிய கொக்காவில் கோபுரம் | 83,477,886 | 71,647,827 |
| பற்றாக்குறை பதவியணி கடன் அறவிட்டமை | 2,552,169 | 2,663,325 |
| செலுத்த வேண்டிய விமான பயணச்சீட்டு | 0.00 | 279,271 |
| தொலைத்தொடர்பு அலைக்கற்றை கட்டணங்கள் | 2,597,816,315 | 540,796,923 |
| பயிலுனர் வானொலி அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 30,411 | 22,474 |
| கையடக்க செயற்படுத்துனர் வரி | 250,000,000 | 0 |
| | 6,193,751,706 | 3,910,257,725 |
| | (2,283,493,981) | |

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|
| நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் | 222,870,612 | 575,154,075 |
| கழி: வருமான வரிக்கான ஒதுக்கங்கள் | (119,077,278) | (425,404,724) |
| | 103,793,334 | 149,749,351 |
| | (45,956,017) | |

CMU/A/TRC/1/15/19 16 ஆகஸ்ட் 2016

தலைவர்,
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

**1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2)(சீ) பிரிவின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.**

---

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டத்தின் 22 (ஏ) (2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத் துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற் கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடை முறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத் திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கை களின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை யினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங் களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

---

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமைகள் கணக் காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13**

---

ஆணைக்குழுவினால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கிரயமான ரூபா 13,025,534,171 தொகையில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததெனினும், அதன் நியாயப் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01**

---

செலவினங்களின் தன்மையின் படி அல்லது நிறுவனத்தின் செயற்பாடு களுக்குரிய வகையில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் செலவினங்களை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவின் பணிகளுக்குப் புறம்பான செயற்பாடுகளுக்காக

செலவிடப்பட்ட ரூபா 44,636,888 தொகை ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் செலவினமாக (Regulatory Expenses) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஆணைக்குழுவிற்குச் சொந்தமாகக் காணப்பட்ட 112 ஏக்கர் 01 ரூட் 10.5 பேர்ச் அளவிலான காணியிலிருந்து ஏறத்தாழ 50 சதவீதமான அளவு கட்டான பிரதேச செயலகத்தால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அம் முழுக் காணியின் பெறுமதி ரூபா 45 மில்லியனும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. சொத்துக்கள் மீள்கணிப்பீடு செய்து நியாயப் பெறுமதியின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் கடந்த 13 ஆண்டு காலப்பகுதியில் இது கணக்குக் குறிப்பொன்றின் மூலம் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்றாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட எனினும், செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட் டிருந்த ரூபா 465,580,673 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 18**

---------------------------------------------------------

செயற்பாட்டு நடத்துனர் அனுமதிப்பத்திரம் 10 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் ஒரு தடவை வழங்கப்பட வேண்டியமையினால் அனுமதிப் பத்திரக் கட்டணத்தை புதுப்பிக்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணம் புதுப்பிக்கப்பட்ட ஆண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. எனினும் இதற்குரிய கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட் டிருக்கவில்லை. அதன் படி முன்னைய ஆண்டில் ரூபா 261,816,469 தொகை யான செயற்பாட்டு நடத்துனர் அனுமதிப்பத்திரக் கட்டணம் மீளாய்வாண்டின் போது ரூபா 107,708,483 வரை விலகல்களுக்குள்ளாகியிருந்தது.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 18**

----------------------------------------------------------

தாமரைக் கோபுர நிர்மாண நடவடிக்கைகளுக்காக அ.ஐ.டொலர் 88.655 மில்லியன் கடன் பணம் 2012 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன்

மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் அ.ஐ.டொலர் 38.28 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த கடன் பணத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,664 மில்லியன் கடன் பெறல் கிரயமாகச் செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த நியமத்தின் படி மூலதனமாக்கப்பட்ட தகைமை பெற்ற கடன் பெறல் கிரயத்தின் அளவும் அதில் மூலதனமாக்கும் விகிதமும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய வருடத்திற்குரிய எனினும் மீளாய்வாண்டில் விலைப்பட்டிய லிடப்பட்ட ரூபா 14,886,858 தொகையான அலைவரிசை அனுமதிப் பத்திர வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கிடப்பட்டமையால் மீளாய் வாண்டின் அலைவரிசை அனுமதிப்பத்திர வருமானம் அந்த பெறுமதி யால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணிப்பீட்டு வழுவின் காரணமாக மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ரூபா 782,882 தொகை குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் 07 வாகனங்கள் விற்கப்பட்டிருந்ததுடன், அந்த வாகன விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபத்தினை கணிப்பிடுவதிலான வழுவின் காரணமாக ரூபா 335,428 கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வாகனமொன்றின் கிரயத்திற்குப் பதிலாக, அதன் சந்தை விலையான ரூபா 3,500,000 பெறுமதி கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டி ருந்ததுடன், அந்த வாகனத்தின் கிரயம் ஆணைக்குழுவிற்கு இனங் காணப்பட முடியாதிருந்தது. இதனால் அந்த வாகனத்தின் அகற்றல் இலாபம் அல்லது நட்டத்தினை இனங்காண முடியாதிருந்தது.

(ஈ) 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செலுத்தப்பட்ட சிறப்பு நலன் வரி (Super Gain Tax) மீளாய்வாண்டின் உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றின் ஆரம்ப நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டப்பட்ட மீதிக்கு சீராக்கப்பட வேண்டுமெனினும், ஆணைக்குழுவினால் ரூபா 464,030,556 தொகையான வரித் தொகை நடப்பாண்டில் வரிக்கு முன்னரான இலாபத்திலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் வரிக்குப்

பின்னரான இலாபம் 464,030,556 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே சிறப்பு நலன் வரி தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆண்டிற்கான வருமான வரிப் பொறுப்பு கணிப்பீட்டின் போது வதிவுடை-யோர் வெளிநாட்டு நாணயக் கணக்கின் (சுகுஊ) வட்டி வருமானமான ரூபா 1,622,984 தொகைக்குப் பதிலாக அந்தக்கணக்கின் மீதியான ரூபா 80,133,171 தொகையான பணம் வரி விடுப்பு வருமானமாக காட்டப்பட்டமையால் வரி அறவிடக்கூடிய வருமானம் ரூபா 78,510,187 தொகை குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் வருமான வரி செலவினம் ரூபா 21,982,852 தொகையினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) தாமரைக் கோபுர செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்கு மதியுரைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான செலவினம் உள்ள டங்கலாக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 7,268,291 தொகையான செலவினம் அட்டுறு செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிராததுடன், 2016 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் பெறவுள்ள உத்தியோகத்தரொருவருக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடைக் கொடுப்பனவான ரூபா 444,812 தொகை நடைமுறை பொறுப் பொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(எ) இராணுவ நலன்புரி நிதியத்திற்கு முன்னைய ஆண்டில் செலுத்தப் பட்டிருந்த ரூபா 50 மில்லியன் தொகையில் மீளாய்வாண்டில் ஆணைக் குழுவிற்கு மீள கிடைத்த ரூபா 27,722,963 பொருளியல் மற்றும் சமூ கப்பொறுப்பு செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் பொருளியல் மற்றும் சமூகப்பொறுப்பு செலவினம் அந்த தொகையினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் மூவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,305,544,313 தொகையான செயற்பாட்டு நடத்துனர் அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்படாதிருந்ததுடன், ஒரு செயற்படுத் துனரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி கணிப்பிடப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய செயற்பாட்டு நடத்துனர் அனுமதிப்பத்திர கட்டணங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

--------------------------------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெறவேண்டிய கணக்குகளினுள் பெறுமதி சேர் வரியாக ரூபா 141,398,308 காண்பிக்கப்பட்டிருந்ததெனினும், அந்த மீதியினை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் வியாபாரக் கடன்பட்டோராக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலவிய தொகையில் ரூபா 371,620,005 தொகை 02 ஆண்டுகளுக்கு மேலான கடன் மீதியாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த மீதியில் 20 ஆண்டுகளுக்கு மேலான காலம் முதல் நிலவிவரும் கடன் மீதிகளும் அடங்கியிருந்தது.

(ஆ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய அலைவரி சைகளுக்காக 1981 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 119,920,691 தொகை யான கட்டணமொன்று அறவிடப்படவேண்டியதாக இருந்ததுடன், 1998 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையிலும் விலைப்பட்டிய லிடப்படாத அலைவரிசைகளும் காணப்பட்டன. மீளாய்வாண்டில் 10 அலைவரிசைகளுக்காக விலைப்பட்டியலிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற ஊழியர் கடன் மீதி ரூபா 2,663,325 ஆகும்.

(ஈ) அலைவரிசைகளை பயன்படுத்தும் நிறுவனம் அல்லது நபர்களை பதிவுசெய்வதற்கான பொது உசாத்துணைகளின் பிரகாரம் கம்பனி யொன்றின் அகவிதியையும் புறவிதியையும் உறுதிப்படுத்திய பிரதியொன் றினைப் 5 பெற்றுக்கொண்டிராமையால் அந்தக் கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,889,143 தொகையான கட்டணத்தினை அறவிட முடியாது போயிருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை கொக்குவில் அன்ரனா மற்றும் நிலைமாற்றல் கோபுரங்களை பயன்படுத்தும் செயற்பாட்டாளர்களிடமிருந்து ரூபா 83,477,885 தொகை யினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கடன்பட்டோர் மீதிப் பட்டியலின் பிரகாரம் ரூபா 1,730,775 தொகையான மறைப்பெறுமதியுடன் கூடிய கடன்பட்டோரின் எண்ணிக்கை 462 ஆக இருந்ததுடன், இந்த மறைப் பெறுமதியுடைய மீதியை தீர்ப்பனவு செய்வதற்கோ பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்காது நீண்டகாலமாக தொடர்ச்சியாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(எ) ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய மீதியில் ரூபா 1 மில்லியனை விட கூடிய ரூபா 2,024,252,991 கூட்டுத்தொகையான 16 கடன்பட்டோருக்கான மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள அனுப்பப்பட்டிருந்ததெனினும், ரூபா 336,260,623 கூட்டுத்தொகையான 11 கடன்பட்டோரின் மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் IV ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் நவம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய கையடக்கத்தொலைபேசி இயக்குபவர்களின் வரித் தொகையான ரூபா 250,000,000 தொகையினை இயக்குபவரொருவர் ஆணைக்குழுவிற்கு செலுத்தியிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு** | | **இணங்காமைகள்** |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2000 யூன் 27 ஆம் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டினுள் ஆணைக்குழுவால் ரூபா 21,900,000,000 தொகை வங்கியில் நிலையான வைப்புகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் V மற்றும் VII பிரிவுகள் | உரிய இயக்குநர்களிடமிருந்து அறவிடப்பட்டு ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய செய்மதி நிலைய வரி (Satellite Location Tax) மற்றும் விளையாட்டுக்காக ஒதுக்கப்பட்ட அலைவரிசை வரியினை (Dedicated Sports Channel Tax) அறவிடுவதற்கான பொறுப்பு ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்ததெனினும், அந்த தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2011 சனவரி 27 ஆந் திகதிய பீஈ 56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் | நிறுவனத்தில் 06 மாதத்திற்கான தொழிற்படு மூலதன தேவையினை விஞ்சியுள்ள நிதியங்கள் ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் அதன் பிரகாரம் நடவக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2015 யூன் 17 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணைக் குழுவின் தலைவருக்கு படிகளாக நிர்ணயிக்கப்பட்ட படியில் 50 சதவீதம் செலுத்த வேண்டுமெனினும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் யூலை மாதத்திலிருந்து ரூபா 100,000 வீதம் முழுப் படியும் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி உப பாகங்களுக்காக தனியான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 1990 பெப்ரவரி 19 ஆந் திகதிய கொள்கைத் திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சுச் செயலாளரின் கடிதம் | அரச கூட்டுத்தாபனங்கள், அரச நிறுவனங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் பொதுக்கம்பனிகளின் அனைத்து நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பிலும் சேவைகள் சட்டமா அதிபரால் நிறைவேற்றப்பட வேண்டுமென அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டிருந்ததெனினும், அதற்கு முரணாக ஆணைக்குழு சட்டரீதியான சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நபர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 4,105,707 செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஏ) | 2007 யூன் 12 ஆம் திகதிய 15/2007 ஆம் இலக்க பொது நிர்வாக, உள் நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 7.4.1 ஆம் உப பிரிவு | (i) வாகனக் கடன் செலுத்துதல் வர்த்தக வங்கிகளின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமென காண்பிக் கப்பட்டிருந்த போதும் 2013 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய TRC/04/12 ஆம் இலக்க ஆணைக்குழுவின் உள்ளக சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது 11 உத்தியோகத்தர் களுக்கு ரூபா 18,195,250 கூட்டுத்தொகையான வாகனக் கடன் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | | வாகனக் கடன் வழங்கப்படுகையில் அறவிடப்பட வேண்டிய வட்டி தொடர்பாக பொதுத் திறைசேரியிலிருந்து ஆராயாது மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 4.2 சதவீத வருடாந்த வட்டி மாத்திரம் ஆணைக்குழுவால் அறவிடப்பட்டிருந்தது. |
| 7(ஐ) | 2005 சனவரி 27 ஆம் திகதிய PED/27 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆந் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14.2 ஆம் பிரிவு | ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழி யர்களை ஆட்சேர்ப்பதற்காக தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தினூடாக திறைசேரி செயலாளரின் உடன்பாட்டினைப் பெற்றுக்கொள்ளாமல் ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றிருந்தன. |
| (ஓ) | 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய BD/CPB/1/1/ 2012 ஆம் இலக்க நிதி மற்றும் திட்ட மிடல் அமைச் சின் சுற்றறிக் கையின் 04 ஆம் பந்தி | ஊழியர் ஒருவருக்காகச் செலுத்தக்கூடிய ஒட்டு மொத்த இடர் கடனின் அளவு ரூபா 250,000 ஆகக்கூடிய எல்லையாக இருந்த போதிலும் TRC/04/2012 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் படி அந்த எல்லையினை விஞ்சி 10 சந்தர்ப்பங்களில் ரூபா 997,437 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. |



10 - CM 27388

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரி அங்கீகாரமின்றி ஆணைக்குழுவின் தீர்மானத்தினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு வருகைப் படி, மிகையூதியப் படி, தொலைத் தொடர்புப் படி மற்றும் வீட்டு வாடகைப் படியாக ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 35,926,229 கூட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரி உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டினுள் ரூபா 9,039,777 கூட்டுத்தொகை ஆணைக் குழுவின் நிதியத்திலிருந்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 47,593,376,236 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 46,266,149,704 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய் வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,327,226,532 தொகையான அதிகரிப் பொன்றினைக் காணக்கூடியதாக இருந்தது. அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 2,482,599,329 இனால் குறைவடைந்திருந்ததெனினும் தொலைத்தொடர்புகள் வரி வருமானம் மற்றும் கையடக்கத் தொலைபேசி இயக்குநர்களின் வரி வருமானம் ரூபா 3,054,219,871 இனால் அதிகரித்தமை 2.5 போதியளவான அதிகாரத்துடன் ஒத்துழைப்பு வழங்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் செலவினம் ரூபா 917,050,977 இனால் குறைவடைந்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பங்களிப்பு

-----------------

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பங்களிப்பிலான அதிகரிப்பு ரூபா 1,388,735,990 தொகையினைக் காட்டியதெனினும், 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,250,000,000 தொகையான கையடக்கத் தொலைபேசி இயக்குநர் வரியின் தாக்கம் நீக்கப்பட்டதன் பின்னர், மீளாய்வாண்டின் பங்களிப்பிலான அதிகரிப்பு ரூபா 138,735,990 ஆகும். அவ்வாறே முன்னைய ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு உரித்தற்ற ரூபா 716,224,838 தொகையான செலவின மொன்று மீளாய்வாண்டில் இடம்பெறாமையால் ஏற்பட்ட தாக்கங்களை நீக்கிய பின்னர் மீளாய்வாண்டின் பங்களிப்பு ரூபா 577,488,848 இனால் குறைவடை கின்றமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

### 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------------

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே கருத்திற்கொள்ள கூடிய முரண்கள் காணப்பட்ட துடன், அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட நிலையான வைப்பு முதலீடு ரூபா 74,106,362,761 இலிருந்து ரூபா 33,250,000,000 வரை குறைவடைந் தமை மற்றும் நிலையான வைப்பு வட்டி விகிதம் வீழ்ச்சியடைந்தமையின் காரணத்தால் வைப்புக்களின் அடிப்படையிலான வட்டி வருமானம் 74 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கையடக்கத் தொலைபேசி இயக்குநர்களிடம் புதியதொரு வரியினை அறவிட்டமையால் மீளாய்வாண்டினுள் ரூபா 1,250,000,000 வருமானம் பெறப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுகளில் ஆணைக்குழுவின் நோக்கங்களுக்கு முரணான செலவினங்களை ஏற்று அந்த செலவினங்கள் ஆணைக்குழுவின் பொருளாதார மற்றும் சமூகப்பொறுப்பு செலவினங்களாக காண்பிக்கப்பட் டிருந்ததெனினும், அவ்வாறான செலவினங்கள் மீளாய்வாண்டினள் 90 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 3.4 ஆணைக்குழுவிற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------

வெளி நிறுவனங்கள், வெளி நபர்கள் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்களினால் ஆணைக்குழுவிற்கு எதிராக நீதிமன்றங்களில் 15 வழக்குகள் தொடரப்பட்டிருந் ததுடன் அவற்றுள் 02 வெளி நிறுவனங்களினால் அலைவரிசை செயற் திட்டத்தை அமுல்படுத்தாமை மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையை மீறியமையின் அடிப்படையில் ஆணைக்குழுவிடம் ரூபா 47,346 மில்லியன் கூட்டுத்தொகை நட்டஈடாகக் கோரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 4.1 செயலாற்றல்

----------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் பிரதான நோக்கமானது கண்காணிப்பு நடைமுறையை பலப்படுத்தல், மக்களின் நலனைப் பாதுகாத்தல் மற்றும் அதிகரித்துவரும் போட்டி வாய்ந்த சந்தை சவால்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் தொலைத்தொடர்புகள் துறையில் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்தலாகும். இந்த நோக்கங்களை எய்துவதற்கு தேவையான பணிகளை உறுதிப்படுத்தி காட்டும் மீளாய்வாண்டிற்கான 9 செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நிறுவனத்தின் இலக்கிடப்பட்ட பணிகளை திட்டமிடல் மற்றும் அந்த பணிகளை நிறைவேற்றுவதிலான செயன்முன்னேற்றத்தினை பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

(ஆ) இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தொலைத்தொடர்பு அலைவரிசை வலைப்பின்னல் உரியமுறையில் செயற்படுத்துவதை உறுதிப்படுத்துதல் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒரு நோக்கமாக இருந்த போதிலும் அலைவரிசை பயன்படுத்தும் போது பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. ஆணைக்குழுவின் தகவல்களின் பிரகாரம், தற்போது காணப்படும் காணப்படும் சமிக்ஞைகள் அவதானிப்பு கட்டமைப்பு 17 வருடங்களை விட பழமை வாய்ந்ததால், பழைய முறைமைக்குப் பதிலாக புதிய முறைமையொன்றை நிறுவும் நடவடிக்கைகள மீளாய்வாண்டினுள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனியொன்றினால் பயன்படுத்தப்பட்டவாறிருந்த 2430 - 2483.5 ஆர்ண பொது அலைவரிசை வீச்சு பயன்படுத்தப்படாதிருந்தமை 2014 ஆகஸ்ட் 13 ஆம் திகதிய கடிதத்தில் அந்த கம்பனி அறிவித்திருந்ததெனினும், ஆணைக்குழுவினால் அந்த கம்பனிக்கு இந்த அலைவரிசையின் பாவனையை இரத்துச்செய்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆணைக்குழுவினால் நிலையான மற்றும் நடமாடும் மேவுகை நிலையங்கள் (Fixed and mobile Monitoring Stations) தாபிக்கப்பட்டிருந்ததெனினும், அலைவரிசைகளை பாவிக்கும் தரப்பினரால் அலைவரிசை கட்டணங்கள் செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் அந்த தரப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட அலைவரிசைகளை பயன்படுத்துவதா இல்லையா என்பது தொடர்பில் கண்காணித்தல் முறையாக இடம்பெற்றிருக்கவில்லை. அலைவரிசை பரீட்சிப்பு நடவடிக்கைகளுக்காக இரு உத்தியோகத்தர்கள் மாத்திரம் உள்ளமையால் நாடு முழுவதும் பரீட்சிப்பினை மேற்கொள்ள எதுவித இயலுமையும் இல்லையென்பது பணிப்பாளர் நாயகத்தினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்தின் 22 (எ) பிரிவின் கீழான ஒழுங்குபடுத்தலின் பிரகாரம் மற்றும் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய 1686/4 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், நிறுவனமொன்று மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை செஸ் வரிக்கட்டணம் செலுத்தியிருக்கவில்லை. எவ்வாறெனினும், தவறவிட்ட வரியினை அறவிடுவதற்கான சட்டரீதியான ஏற்பாடு அதிகாரச்சட்டத்தில் இல்லாதிருந்தமையால் தவறவிட்ட வரியினை அறவிடுவதற்கு முடியாது போயிருந்தது. செஸ் வரி செலுத்தாமை அல்லது தாமதித்து செலுத்துகின்ற செயற்படுத்துனர்களுக்காக தண்டப்பணமொன்றை அறவிடுவதற்காக சட்டரீதியான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்திற்கு பகுதிகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பணிப்பாளர் நாயகத்தால் 2011 ஆம் ஆண்டிலிருந்து அவ்வப்போது எனக்கு அறிவிக்கப்பட்டிருந்ததெனினும், இதுவரையில் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அலைவரிசை கட்டணங்களுக்காக விலைப்பட்டியல் வழங்கி 02 வாரங்களுக்குள் செயற்படுத்துனர்களால் உரிய பணம் செலுத்தப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டினுள் வழங்கப்பட்ட ரூபா 1,048,313,680 கூட்டுத்தொகையான 12 விலைப்பட்டியல்களுக்காக 07 நாட்களிலிருந்து 04 மாதங்கள் வரையான கால தாமதத்துடன் பணம் செலுத்தப்பட்டிருந்தது. அலைவரிசை வருமானத்தை10 அறவிடுவதற்காக முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிராமையின் காரணத்தால் கொடுப்பனவு தாமதப்படுத்தப்படும் மற்றும் தவறவிடப்படும் கட்டணங்களை அறவிடமுடியாதிருந்தது.

(இ) 2006 பெப்ரவரி மாதம் முதல் 2013 பெப்ரவரி மாதம் வரை வாழ்க்கைச் செலவுப்படி கொடுப்பனவின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட செலுத்தப் படாத ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக ரூபா 14,909,235 செலுத்தும் போது ஊழியர்களின் பங்காக செலுத்த வேண்டிய ரூபா 5,324,727 தொகையான பணம் ஆணைக்குழுவிற்கு செலுத்த நேர்ந்திருந்தது.

(ஈ) 2011 இன் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு வரி அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் வரி செலுத்த வேண்டிய 03 நிறுவனங்களினால் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் வரி செலுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் இவற்றுள் 02 நிறுவனங்கள் தொடர்பில் அதிகாரச் சட்டத்தின் 6(3),(4),(5),(6) ஆம் பிரிவுகளின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) செயற்படுத்துனர்களின் மாதாந்த அறிக்கைகளின் பிரகாரம் தொலைத் தொடர்பு வரி மற்றும் செஸ் வரி என்பன மாதாந்தம் அறவிடப்படுவதுடன், நிதியாண்டு முடிவடைந்ததன் பின்னர் பட்டயக் கணக்காளரால் இந்த இரண்டு வரிகளுக்காக முன்வைக்கப்படுகின்ற இணக்கக்கூற்றின் மூலம் ஆண்டிற்குரிய வரியின் அளவினை உறுதிப்படுத்தும் முறையொன்று ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2014 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்காக முறையே 06 நிறுவனங்களாலும் 14 நிறுவனங்களாலும் 2016 யூன் 06 ஆந் திகதி வரையிலும் அந்த இணக்கக்கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் லொண்டன் பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டிடமொன்றுக்கு மாதாந்தம் ரூபா 300,000 படி வாடகை செலுத்தும் அடிப்படையில் கூறுவிலை கோரப்படாமலும் நிதிப்பிரமாணம் 835(2)(இ) ஆம் பிரிவு மற்றும் 2010 மே 04 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாகவும் 2014 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்திலிருந்து ஓராண்டு காலத்திற்காக வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. கட்டிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் பயன்பாடற்றுக் காணப்பட்டதுடன், வாடகைக்கு எடுத்து 07 மாதங்களின் பின்னர் இந்தக் கட்டிடம் மீண்டும் கையளிக்கப்பட்டிருந்தது. பிடி காசாக ரூபா 1,800,000 மற்றும் 2014 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்திலிருந்து 2015 இன் ஏப்ரல் மாதம் வரை மாதமொன்றிற்கு ரூபா 225,000 வீதம் ரூபா 1,350,000 வீதம் ரூபா 3,150,000 கூட்டுத்தொகை கட்டிட உரிமையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்தக்காலப்பகுதியினுள் நீர்/மின்சார பட்டியல்கள், பாதுகாப்பு செலவினம், பழுதுபார்த்தல் செலவினம் மற்றும் ஏனைய நானாவித செலவினங்களுக்காக ரூபா 3,701,942 தொகையும் கணினி மற்றும் காற்று சீராக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 8,426,486 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. குத்தகைக் காலத்தினுள் வாடகையாக செலுத்தப்பட்ட ரூபா 1,350,000 தொகை சிக்கனமற்ற செலவினமானதுடன் பிடி காசாக செலுத்தப்பட்ட ரூபா 1.8 மில்லியன் தொகையினை 2016 யூன் 27 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்கு உரியதென கருத்திற்கொள்ள முடியாத திரைப்படமொன்றினையும் தொலைக்காட்சி நாடகமொன்றினையும் தயாரிப்பதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் முறையே ரூபா 64,383,813 மற்றும் ரூபா 7,956,000 செலுத்துவதற்கு இணங்கியிருந்ததுடன், திரைப்படம் மற்றும் தொலைக் காட்சி நாடகத்தின் தயாரிப்பிற்கென முறையே ரூபா 1,132,191,906 தொகையும் ரூபா 7,160,400 தொகையும் சமூகப்பொறுப்பு செலவினமாகக் கருதி தயாரிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------

2015 ஆம் ஆண்டின் பதவியணி உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்கான பரஸ்பர சந்திப்பு மற்றும் சுற்றுலாக்களுக்காக தங்குமிடமளித்தல், உணவு மற்றும் குடிபானம் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக ரூபா 4,045,841 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.5 ஒப்பந்த நடைமுறை**

---------------------------------

**4.5.1 தாமரைக் கோபுர நிர்மாணம்**

------------------------------------------

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) நிர்மாண செயன்முன்னேற்றம்:

மேற்படி நிர்மாணத்திற்குரிய ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், நிர்மாண நடவடிக்கைகள் 2012 நவம்பர் 12 ஆந் ஆரம்பிக்கப்பட்டு 2015 மே 12 ஆந் திகதி வரையிலும், அதாவது 912 தினங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அந்த திகதி வரையிலும் கொங்கிறீட் கூடு மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2015 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பந்தக்காலம் 2017 ஒக்தோபர் மாதம் வரை நீடிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததெனினும், அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன் செயற்திட்ட அமுலாக்கல் குழு 2015 சனவரி 02 ஆந் திகதியின் பின்னர் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கூட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்தூக்கி மற்றும் மின்நகர்படிகளை பொருத்துதல்:

(i) ஒப்பந்த உடன்படிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட சிக்கலான பாதையின் (Critical Path) பிரகாரம் 2014 யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 08 மாதங்களினுள் அதாவது 2015 மார்ச் மாதமளவில் இயந்திர மின்சாரம் மற்றும் விசேட உபகரணங்களைப் பொருத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும், எந்தவொரு உபகரணத்தையும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மின்தூக்கி மற்றும் மின்நகர் படிகளை பொருத்துவதற்காக செயற் திட்டத்தின் மதியுரை அலகினால் (PCU) தொழில்நுட்ப மற்றும் நிதிசார் கணிப்பீட்டு அறிக்கை ஆணைக்குழுவின் அங்கீகாரத் திற்காக 2014 ஒக்தோபர் 13 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த தெனினும், அங்கீகாரமானது 2016 மார்ச் 29 ஆந் திகதியே வழங்கப்பட்டிருந்தது. அதன்போது ஐக்கிய அமெரிக்க டொலர் 1,757,898 தொகையான மேலதிக செலவினமும் அங்கீகரிக்கப்பட் டிருந்தது.

(iii) மின்தூக்கிகளை பொருத்தும் கொள்வனவு தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளமையால் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கணக்காய்விற்கு அறிவித்திருந்த தெனினும், உரிய குழுவின் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமல் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் மாத்திரம் கணக்காய்விற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்ட சாத்தியவள ஆய்வு:

2012 செம்தம்பர் 17 ஆந் திகதி சீன அரசின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி (The Export – Import Bank of China) மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் 12 ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுடன் ஏற்படுத் திக்கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் லண்டன் வங்கி களுக்கிடையேயான வட்டி விகிதத்திற்கு (LIBOR) 4 சதவீத நிலையான வட்டி மாற்று வீதமொன்றினை சேர்த்து கடன் வட்டி விகிதம் உருவாக் கப்பட வேண்டும். எவ்வாறெனினும், சாத்தியவள ஆய்வு அறிக்கையில் கடன் பெறுகைக் கிரய கணிப்பீட்டின் போது நிலையான வட்டி மாற்று வீதம் 3.5 சதவீதமாக கருதப்பட்டிருந்தமையால், செயற்திட்டத்தின் கடன் பெறுகைக் கிரயம் ரூபா 265 மில்லியனால் குறைத்து காட்டப்படு கின்றமை, செயற்திட்டத்தின் காப்புறுதிக்கிரயம் ரூபா 682 மில்லியன் குறைத்து காட்டப்பட்டிருந்தமை மற்றும் செயற்திட்டத்தின் பாதிடப்பட்ட வருமானத்தின் இற்றைப்பெறுமதியை (Present Value) கணிப்பிடுவதற்கான மூலதன கிரய விகிதமான (கழிவு விகிதம்) 4.32 சதவீதத்திற்குப் பதிலாக 4 சதவீதமான கழிவு விகிதத்தினைப் பயன்படுத்தல் போன்ற பொருண் மையான விலகல்களின் காரணமாக மதிப்பிடப்பட்டிருந்த செயற் திட்டத்தின் அடைவுக் காலம் வேறுபடக்கூடுமென அவதானிக்கப்பட்டது.

### 4.5.2 அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்காவின் தொலைத்தொடர்பு ஊடக நிலையத்தின் நிர்மாணம்

நிர்மாண ஒப்பந்தப் பெறுமதி ரூபா 2,663 மில்லியனான தொலைத்தொடர்பு ஊடக நிலையத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் ஒப்பந்த உடன் படிக்கையின் பிரகாரம் 2014 ஆகஸ்ட் 10 ஆந் திகதி ஆரம்பிக்கப் பட்டு 2016 யூலை மாதமளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இந்த செயற்திட்டத்திற்கென செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 508 மில்லியன் ஆனமையால், அது ஒப்பந்தப்பெறுமதியில் 19 சதவீதமாகும். இந்த செயற்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவில் காணப்படாமையால் விடயப்பரப்பினை மட்டுப்படுத்த நேர்ந்திருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்ததெனினும் 2016 யூன் 23 ஆந் திகதியளவில் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆணைக் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 291 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 218 ஆகும். இதன்போது வெற்றிடங்களின் எண்ணிக்கை 89 மற்றும் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 16 ஆகும்.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாமல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குப் புறம்பாக 06 பதவிகளுக்காக 16 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(இ) அமைச்சரவையின் அங்கீகாரமின்றி 05 மதியுரையாளர்கள் நியமிக்கப் பட்டு ரூபா 719,000 கூட்டுத்தொகையான மாதாந்த சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன், இரண்டு மதியுரையாளர்களுக்கு கடமைப் பட்டியல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆணைக்குழுவில் நிலவும் ஊழியப் பற்றாக்குறை கீழ்வரும் விடயங் களுக்கு தாக்கமேற்படுத்தியுள்ளமை பணிப்பாளர் நாயகத்தால் குறிப்பிடப் பட்டிருந்தது.

(i) அலைவரிசை முகாமைத்துவம் தொடர்பில் செயற்படுகின்ற பயிலுனர் உத்தியோகத்தர்களுக்காக நிலவும் பற்றாக்குறை காரணமாக அலை-வரிசைக் கட்டணங்களை அறவிடும் பிரமாணங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியாமை,

(ii) அலைவரிசைப் பரிசோதனைகளுக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் நாடு முழுவதும் அலைவரிசை பரிசோதனை செய்வதற்கான இயலுமை இல்லாதிருந்தமை, மற்றும் 13 (iii) வானொலி தொழில்நுட்ப பரிசீலனை நடவடிக்கைகளுக்காக நிபுணத்துவ அறிவினைக் கொண்ட உத்தியோகத்தர்களின் பற்றாக் குறையால் 17 வருடங்கள் பழமையான அலைவரிசைப் பரிசோதனை கட்டமைப்பொன்றிற்கு பதிலாக புதிய கட்டமைப்பொன்றினைப் பெற்றுக்கொள்ளும் கொள்வனவு நடவடிக்கை மேற்கொள்ள முடியாமை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 5.1 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

---

2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2016 மே 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்காக தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் 03 உதவி கணக்காய்வு உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததெனினும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஒரு பெண் உதவிக் கணக்காய்வு உத்தியோகத்தர் மாத்திரம் நியமிக்கப்பட் டிருந்தனர்.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் போதியளவான துறைகள் கணக் காய்விற்கு உட்படுத்தப்பட்டிராததுடன், ஆணைக்குழுவின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட தாமரைக் கோபுரத்தின் நிர்மாணச் செயற்திட்டம் மற்றும் ஹம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் தொலைத் தொடர்புகள் ஊடக நிலையங்களை நிர்மாணித்தல் தொடர்பில் கணக் காய்வு பரிசோதனைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

ஆணைக்குழுவால் 2015 மார்ச் 10 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட பெறுமதிக்கும் உள்ளபடியான பெறுமதிக்கு மிடையே 10 முதல் 46 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் பாதீட்டில் உள்ளடக்கப்படாத 10 செலவின

விடயங்களுக்காக ரூபா 9,309,870,507 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் படி பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி யொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறை பாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிக்கையிடப்பட்டி ருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகிறது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | <u>அவதானிப்புக்கள்</u> |
|---|---|---|
| (அ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத் தப்பட்டிருக்காமை. |
| (ஆ) | கடன் கட்டுப்பாடு | நீண்ட காலமாக நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் காணப்படுகின்றமையும் கடனை அறவிடுவதில் நலிவான நிலை காணப்படு கின்றமையும். |
| (இ) | வருமானக் கட்டுப்பாடு | வருமானச் சேகரிப்பிற்காக போதியளவான சட்ட ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிராமை. |
| (ஈ) | முதலீடு | திறைசேரியின் அங்கீகாரமின்றி நிலையான வைப்புக்களிலும் திறைசேரி உண்டியல் களிலும் முதலீடு செய்தல். |
| (உ) | படிகளைச் செலுத்துதல் | திறைசேரியின் அங்கீகாரமின்றி ஆணைக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் படிகள், மிகையூதிய படிகள், தொடர்பாடல் படிகள் மற்றும் வீட்டு வாடகைப் படிகளை செலுத்துதல். |
| (ஊ) | ஒப்பந்த நிர்வாகம் | தாமரைக் கோபுர நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைதல். அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்காவின் தொலைத்தொடர் புகள் ஊடக நிலையத்தினை நிர்மா ணிக்கும் செயற்திட்டத்தைக் கைவிடல். |

எச்.எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் நாயகம்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } சிஎம்யூ/ஏ/ரீஆர்சீ/1/15/19    මබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2016 ஆகஸ்ட் 16

தலைவர்,

இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு.

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 22(ஏ)(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதொரு அறிக்கை ஆணைக்குழுவின் தலைவருக்கு 2016 யூலை 21 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13

ஆணைக்குழுவினால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கிரயமான ரூபா 13,025,534,171 தொகையில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததெனினும், அதன் நியாயப் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01

செலவினங்களின் தன்மையின் படி அல்லது நிறுவனத்தின் செயற்பாடுகளுக்குரிய வகையில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் செலவினங்களை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவின் பணிகளுக்குப் புறம்பான செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 44,636,888 தொகை ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் செலவினமாக (Regulatory Expenses) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஆணைக்குழுவிற்குச் சொந்தமாகக் காணப்பட்ட 112 ஏக்கர் 01 ரூட் 10.5 பேர்ச் அளவிலான காணியிலிருந்து ஏறத்தாழ 50 சதவீதமான அளவு கட்டான பிரதேச செயலகத்தால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அம் முழுக் காணியின் பெறுமதி ரூபா 45 மில்லியனும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. சொத்துக்கள் மீள்கணிப்பீடு செய்து நியாயப் பெறுமதியின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் கடந்த 13 ஆண்டு காலப்பகுதியில் இது கணக்குக் குறிப்பொன்றின் மூலம் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட எனினும், செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த ரூபா 465,580,673 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 18

செயற்பாட்டு நடத்துனர் அனுமதிப்பத்திரம் 10 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் ஒரு தடவை வழங்கப்பட வேண்டியமையினால் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை புதுப்பிக்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணம் புதுப்பிக்கப்பட்ட ஆண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. எனினும் இதற்குரிய கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் படி முன்னைய ஆண்டில் ரூபா 261,816,469 தொகையான செயற்பாட்டு நடத்துனர் அனுமதிப்பத்திரக் கட்டணம் மீளாய்வாண்டின் போது ரூபா 107,708,483 வரை விலகல்களுக்குள்ளாகியிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 18

தாமரைக் கோபுர நிர்மாண நடவடிக்கைகளுக்காக அ.ஐ.டொலர் 88.655 மில்லியன் கடன் பணம் 2012 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் அ.ஐ.டொலர் 38.28 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த கடன் பணத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,664 மில்லியன் கடன் பெறல் கிரயமாகச் செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த நியமத்தின் படி மூலதனமாக்கப்பட்ட தகைமை பெற்ற கடன் பெறல் கிரயத்தின் அளவும் அதில் மூலதனமாக்கும் விகிதமும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய வருடத்திற்குரிய எனினும் மீளாய்வாண்டில் விலைப்பட்டியலிடப்பட்ட ரூபா 14,886,858 தொகையான அலைவரிசை அனுமதிப்பத்திர வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கிடப்பட்டமையால் மீளாய்வாண்டின் அலைவரிசை அனுமதிப்பத்திர வருமானம் அந்த பெறுமதியால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணிப்பீட்டு வழுவின் காரணமாக மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ரூபா 782,882 தொகை குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் 07 வாகனங்கள் விற்கப்பட்டிருந்ததுடன், அந்த வாகன விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபத்தினை கணிப்பிடுவதிலான வழுவின் காரணமாக ரூபா 335,428 கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வாகனமொன்றின் கிரயத்திற்குப் பதிலாக, அதன் சந்தை விலையான ரூபா 3,500,000 பெறுமதி கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன், அந்த வாகனத்தின் கிரயம் ஆணைக்குழுவிற்கு இனங்காணப்பட முடியாதிருந்தது. இதனால் அந்த வாகனத்தின் அகற்றல் இலாபம் அல்லது நட்டத்தினை இனங்காண முடியாதிருந்தது.

(ஈ) 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செலுத்தப்பட்ட சிறப்பு நலன் வரி (Super Gain Tax) மீளாய்வாண்டின் உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றின் ஆரம்ப நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டப்பட்ட மீதிக்கு சீராக்கப்பட வேண்டுமெனினும், ஆணைக்குழுவினால் ரூபா 464,030,556 தொகையான வரித் தொகை நடப்பாண்டில் வரிக்கு முன்னரான இலாபத்திலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் வரிக்குப் பின்னரான இலாபம் 464,030,556 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே சிறப்பு நலன் வரி தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆண்டிற்கான வருமான வரிப் பொறுப்பு கணிப்பீட்டின் போது வதிவுடையோர் வெளிநாட்டு நாணயக் கணக்கின் (RFC) வட்டி வருமானமான ரூபா 1,622,984 தொகைக்குப் பதிலாக அந்தக்கணக்கின் மீதியான ரூபா 80,133,171 தொகையான பணம் வரி விடுப்பு வருமானமாக காட்டப்பட்டமையால் வரி அறவிடக்கூடிய வருமானம் ரூபா 78,510,187 தொகை குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் வருமான வரி செலவினம் ரூபா 21,982,852 தொகையினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) தாமரைக் கோபுர செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்கு மதியுரைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான செலவினம் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 7,268,291 தொகையான செலவினம் அட்டுறு செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிராததுடன், 2016 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் பெறவுள்ள உத்தியோகத்தரொருவருக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடைக் கொடுப்பனவான ரூபா 444,812 தொகை நடைமுறை பொறுப்பொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(எ) இராணுவ நலன்புரி நிதியத்திற்கு முன்னைய ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 50 மில்லியன் தொகையில் மீளாய்வாண்டில் ஆணைக்குழுவிற்கு மீள கிடைத்த ரூபா 27,722,963 பொருளியல் மற்றும் சமூகப்பொறுப்பு செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் பொருளியல் மற்றும் சமூகப்பொறுப்பு செலவினம் அந்த தொகையினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் மூவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,305,544,313 தொகையான செயற்பாட்டு நடத்துனர் அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்படாதிருந்ததுடன், ஒரு செயற்படுத்துனரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய செயற்பாட்டு நடத்துனர் அனுமதிப்பத்திர கட்டணங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெறவேண்டிய கணக்குகளினுள் பெறுமதி சேர் வரியாக ரூபா 141,398,308 காண்பிக்கப்பட்டிருந்ததெனினும், அந்த மீதியினை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் வியாபாரக் கடன்பட்டோராக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலவிய தொகையில் ரூபா 371,620,005 தொகை 02 ஆண்டுகளுக்கு மேலான கடன் மீதியாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த மீதியில் 20 ஆண்டுகளுக்கு மேலான காலம் முதல் நிலவிவரும் கடன் மீதிகளும் அடங்கியிருந்தது.

(ஆ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய அலைவரிசைகளுக்காக 1981 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 119,920,691 தொகையான கட்டணமொன்று அறவிடப்படவேண்டியதாக இருந்ததுடன், 1998 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையிலும் விலைப்பட்டியலிடப்படாத அலைவரிசைகளும் காணப்பட்டன. மீளாய்வாண்டில் 10 அலைவரிசைகளுக்காக விலைப்பட்டியலிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற ஊழியர் கடன் மீதி ரூபா 2,663,325 ஆகும்.

(ஈ) அலைவரிசைகளை பயன்படுத்தும் நிறுவனம் அல்லது நபர்களை பதிவுசெய்வதற்கான பொது உசாத்துணைகளின் பிரகாரம் கம்பனியொன்றின் அகவிதியையும் புறவிதியையும் உறுதிப்படுத்திய பிரதியொன்றினைப் பெற்றுக்கொண்டிராமையால் அந்தக் கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,889,143 தொகையான கட்டணத்தினை அறவிட முடியாது போயிருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை கொக்குவில் அன்ரனா மற்றும் நிலைமாற்றல் கோபுரங்களை பயன்படுத்தும் செயற்பாட்டாளர்களிடமிருந்து ரூபா 83,477,885 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கடன்பட்டோர் மீதிப் பட்டியலின் பிரகாரம் ரூபா 1,730,775 தொகையான மறைப்பெறுமதியுடன் கூடிய கடன்பட்டோரின் எண்ணிக்கை 462 ஆக இருந்ததுடன், இந்த மறைப் பெறுமதியுடைய மீதியை தீர்ப்பனவு செய்வதற்கோ பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்காது நீண்டகாலமாக தொடர்ச்சியாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(எ) ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய மீதியில் ரூபா 1 மில்லியனை விட கூடிய ரூபா 2,024,252,991 கூட்டுத்தொகையான 16 கடன்பட்டோருக்கான மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததெனினும், ரூபா 336,260,623 கூட்டுத்தொகையான 11 கடன்பட்டோரின் மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் IV ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் நவம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய கையடக்கத்தொலைபேசி இயக்குபவர்களின் வரித் தொகையான ரூபா 250,000,000 தொகையினை இயக்குபவரொருவர் ஆணைக்குழுவிற்கு செலுத்தியிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2000 யூன் 27 ஆம் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டினுள் ஆணைக்குழுவால் ரூபா 21,900,000,000 தொகை வங்கியில் நிலையான வைப்புகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் V மற்றும் VII பிரிவுகள் | உரிய இயக்குநர்களிடமிருந்து அறவிடப்பட்டு ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய செய்மதி நிலைய வரி (Satellite Location Tax) மற்றும் விளையாட்டுக்காக ஒதுக்கப்பட்ட அலைவரிசை வரியினை ( Dedicated Sports Channel Tax) அறவிடுவதற்கான பொறுப்பு ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்ததெனினும், அந்த தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

9

| | | |
|---|---|---|
| (ஈ) | 2011 சனவரி 27 ஆந் திகதிய பீஈ 56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் | நிறுவனத்தில் 06 மாதத்திற்கான தொழிற்படு மூலதன தேவையினை விஞ்சியுள்ள நிதியங்கள் ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் அதன் பிரகாரம் நடவக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2015 யூன் 17 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் தலைவருக்கு படிகளாக நிர்ணயிக்கப்பட்ட படியில் 50 சதவீதம் செலுத்த வேண்டுமெனினும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் யூலை மாதத்திலிருந்து ரூபா 100,000 வீதம் முழுப் படியும் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி உப பாகங்களுக்காக தனியான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 1990 பெப்ரவரி 19 ஆந் திகதிய கொள்கைத் திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சுச் செயலாளரின் கடிதம் | அரச கூட்டுத்தாபனங்கள், அரச நிறுவனங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் பொதுக்கம்பனிகளின் அனைத்து நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பிலும் சேவைகள் சட்டமா அதிபரால் நிறைவேற்றப்பட வேண்டுமென அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டிருந்ததெனினும், அதற்கு முரணாக ஆணைக்குழு சட்டரீதியான சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நபர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 4,105,707 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) | 2007 யூன் 12 ஆம் திகதிய 15/2007 ஆம் இலக்க பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் | (i) வாகனக் கடன் செலுத்துதல் வர்த்தக வங்கிகளின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்த |

10

| | | |
|---|---|---|
| | அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 7.4.1 ஆம் உப பிரிவு | போதும் 2013 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய TRC/04/12 ஆம் இலக்க ஆணைக்குழுவின் உள்ளக சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது 11 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 18,195,250 கூட்டுத்தொகையான வாகனக் கடன் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.<br>(ii) வாகனக் கடன் வழங்கப்படுகையில் அறவிடப்பட வேண்டிய வட்டி தொடர்பாக பொதுத் திறைசேரியிலிருந்து ஆராயாது மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 4.2 சதவீத வருடாந்த வட்டி மாத்திரம் ஆணைக்குழுவால் அறவிடப்பட்டிருந்தது. |
| (ஐ) | 2005 சனவரி 27 ஆம் திகதிய PED/27 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆந் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14.2 ஆம் பிரிவு | ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்காக தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தினூடாக திரைசேரி செயலாளரின் உடன்பாட்டினைப் பெற்றுக்கொள்ளாமல் ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஓ) | 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய பீடீ/சீபிபீ/1/1/2012 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | ஊழியர் ஒருவருக்காகச் செலுத்தக்கூடிய ஒட்டுமொத்த இடர் கடனின் அளவு ரூபா 250,000 ஆகக்கூடிய எல்லையாக இருந்த போதிலும் TRC/04/2012 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் படி அந்த எல்லையினை விஞ்சி 10 சந்தர்ப்பங்களில் ரூபா 997,437 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரி அங்கீகாரமின்றி ஆணைக்குழுவின் தீர்மானத்தினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு வருகைப் படி, மிகையூதியப் படி, தொலைத்தொடர்புப் படி மற்றும் வீட்டு வாடகைப் படியாக ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 35,926,229 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரி உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டினுள் ரூபா 9,039,777 கூட்டுத்தொகை ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 47,593,376,236 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 46,266,149,704 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,327,226,532 தொகையான அதிகரிப்பொன்றினைக் காணக்கூடியதாக இருந்தது. அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 2,482,599,329 இனால் குறைவடைந்திருந்ததெனினும் தொலைத்தொடர்புகள் வரி வருமானம் மற்றும் கையடக்கத் தொலைபேசி இயக்குநர்களின் வரி வருமானம் ரூபா 3,054,219,871 இனால் அதிகரித்தமை மற்றும் ஒழுங்குபடுத்தல் செலவினம் ரூபா 917,050,977 இனால் குறைவடைந்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பங்களிப்பு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பங்களிப்பிலான அதிகரிப்பு ரூபா 1,388,735,990 தொகையினைக் காட்டியதெனினும், 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,250,000,000 தொகையான கையடக்கத் தொலைபேசி இயக்குநர் வரியின் தாக்கம் நீக்கப்பட்டதன் பின்னர், மீளாய்வாண்டின் பங்களிப்பிலான அதிகரிப்பு ரூபா 138,735,990 ஆகும். அவ்வாறே முன்னைய ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு உரித்தற்ற ரூபா 716,224,838 தொகையான செலவினமொன்று மீளாய்வாண்டில் இடம்பெறாமையால் ஏற்பட்ட தாக்கங்களை நீக்கிய பின்னர் மீளாய்வாண்டின் பங்களிப்பு ரூபா 577,488,848 இனால் குறைவடைகின்றமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

### 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே கருத்திற்கொள்ள கூடிய முரண்கள் காணப்பட்டதுடன், அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட நிலையான வைப்பு முதலீடு ரூபா 74,106,362,761 இலிருந்து ரூபா 33,250,000,000 வரை குறைவடைந்தமை மற்றும் நிலையான வைப்பு வட்டி விகிதம் வீழ்ச்சியடைந்தமையின் காரணத்தால் வைப்புக்களின் அடிப்படையிலான வட்டி வருமானம் 74 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கையடக்கத் தொலைபேசி இயக்குநர்களிடம் புதியதொரு வரியினை அறவிட்டமையால் மீளாய்வாண்டினுள் ரூபா 1,250,000,000 வருமானம் பெறப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுகளில் ஆணைக்குழுவின் நோக்கங்களுக்கு முரணான செலவினங்களை ஏற்று அந்த செலவினங்கள் ஆணைக்குழுவின் பொருளாதார மற்றும் சமூகப்பொறுப்பு செலவினங்களாக காண்பிக்கப்பட்டிருந்ததெனினும், அவ்வாறான செலவினங்கள் மீளாய்வாண்டினள் 90 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

3.4 **ஆணைக்குழுவிற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**

வெளி நிறுவனங்கள், வெளி நபர்கள் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்களினால் ஆணைக்குழுவிற்கு எதிராக நீதிமன்றங்களில் 15 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 02 வெளி நிறுவனங்களினால் அலைவரிசை செயற்திட்டத்தை அமுல்படுத்தாமை மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையை மீறியமையின் அடிப்படையில் ஆணைக்குழுவிடம் ரூபா 47,346 மில்லியன் கூட்டுத்தொகை நட்டஈடாகக் கோரப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் பிரதான நோக்கமானது கண்காணிப்பு நடைமுறையை பலப்படுத்தல், மக்களின் நலனைப் பாதுகாத்தல் மற்றும் அதிகரித்துவரும் போட்டி வாய்ந்த சந்தை சவால்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் தொலைத்தொடர்புகள் துறையில் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்தலாகும். இந்த நோக்கங்களை எய்துவதற்கு தேவையான பணிகளை உறுதிப்படுத்தி காட்டும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நிறுவனத்தின் இலக்கிடப்பட்ட பணிகளை திட்டமிடல் மற்றும் அந்த பணிகளை நிறைவேற்றுவதிலான செயன்முன்னேற்றத்தினை பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

(ஆ) இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தொலைத்தொடர்பு அலைவரிசை வலைப்பின்னல் உரியமுறையில் செயற்படுத்துவதை உறுதிப்படுத்துதல் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒரு நோக்கமாக இருந்த போதிலும் அலைவரிசை பயன்படுத்தும் போது பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. ஆணைக்குழுவின் தகவல்களின் பிரகாரம், தற்போது காணப்படும் காணப்படும் சமிக்ஞைகள் அவதானிப்பு கட்டமைப்பு 17 வருடங்களை விட பழமைவாய்ந்ததால், பழைய முறைமைக்குப் பதிலாக புதிய முறைமையொன்றை நிறுவும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டினுள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனியொன்றினால் பயன்படுத்தப்பட்டவாறிருந்த 2430 - 2483.5 MHz பொது அலைவரிசை வீச்சு பயன்படுத்தப்படாதிருந்தமை 2014 ஆகஸ்ட் 13 ஆம் திகதிய கடிதத்தில் அந்த கம்பனி அறிவித்திருந்ததெனினும், ஆணைக்குழுவினால் அந்த கம்பனிக்கு இந்த அலைவரிசையின் பாவனையை இரத்துச்செய்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆணைக்குழுவினால் நிலையான மற்றும் நடமாடும் மேவுகை நிலையங்கள் (Fixed and mobile Monitoring Stations) தாபிக்கப்பட்டிருந்ததெனினும், அலைவரிசைகளை பாவிக்கும் தரப்பினரால் அலைவரிசை கட்டணங்கள் செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் அந்த தரப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட அலைவரிசைகளை பயன்படுத்துவதா இல்லையா என்பது தொடர்பில் கண்காணித்தல் முறையாக இடம்பெற்றிருக்கவில்லை. அலைவரிசை பரீட்சிப்பு

15

நடவடிக்கைகளுக்காக இரு உத்தியோகத்தர்கள் மாத்திரம் உள்ளமையால் நாடு முழுவதும் பரீட்சிப்பினை மேற்கொள்ள எதுவித இயலுமையும் இல்லையென்பது பணிப்பாளர் நாயகத்தினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்தின் 22 (எ) பிரிவின் கீழான ஒழுங்குபடுத்தலின் பிரகாரம் மற்றும் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய 1686/4 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், நிறுவனமொன்று மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை செஸ் வரிக்கட்டணம் செலுத்தியிருக்கவில்லை. எவ்வாறெனினும், தவறவிட்ட வரியினை அறவிடுவதற்கான சட்டரீதியான ஏற்பாடு அதிகாரச்சட்டத்தில் இல்லாதிருந்தமையால் தவறவிட்ட வரியினை அறவிடுவதற்கு முடியாது போயிருந்தது.

செஸ் வரி செலுத்தாமை அல்லது தாமதித்து செலுத்துகின்ற செயற்படுத்துனர்களுக்காக தண்டப்பணமொன்றை அறவிடுவதற்காக சட்டரீதியான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்திற்கு பகுதிகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பணிப்பாளர் நாயகத்தால் 2011 ஆம் ஆண்டிலிருந்து அவ்வப்போது எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தெனினும், இதுவரையில் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அலைவரிசை கட்டணங்களுக்காக விலைப்பட்டியல் வழங்கி 02 வாரங்களுக்குள் செயற்படுத்துனர்களால் உரிய பணம் செலுத்தப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டினுள் வழங்கப்பட்ட ரூபா 1,048,313,680 கூட்டுத்தொகையான 12 விலைப்பட்டியல்களுக்காக 07 நாட்களிலிருந்து 04 மாதங்கள் வரையான கால தாமதத்துடன் பணம் செலுத்தப்பட்டிருந்தது. அலைவரிசை வருமானத்தை அறவிடுவதற்காக முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிராமையின் காரணத்தால் கொடுப்பனவு தாமதப்படுத்தப்படும் மற்றும் தவறவிடப்படும் கட்டணங்களை அறவிடமுடியாதிருந்தது.

(இ) 2006 பெப்ரவரி மாதம் முதல் 2013 பெப்ரவரி மாதம் வரை வாழ்க்கைச் செலவுப்படி கொடுப்பனவின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட செலுத்தப்படாத ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக ரூபா 14,909,235 செலுத்தும் போது ஊழியர்களின் பங்காக செலுத்த வேண்டிய ரூபா 5,324,727 தொகையான பணம் ஆணைக்குழுவிற்கு செலுத்த நேர்ந்திருந்தது.

(ஈ) 2011 இன் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு வரி அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் வரி செலுத்த வேண்டிய 03 நிறுவனங்களினால் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இவற்றுள் 02 நிறுவனங்கள் தொடர்பில் அதிகாரச்சட்டத்தின் 6(3),(4),(5),(6) ஆம் பிரிவுகளின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) செயற்படுத்துனர்களின் மாதாந்த அறிக்கைகளின் பிரகாரம் தொலைத்தொடர்பு வரி மற்றும் செஸ் வரி என்பன மாதாந்தம் அறவிடப்படுவதுடன், நிதியாண்டு முடிவடைந்ததன் பின்னர் பட்டயக் கணக்காளரால் இந்த இரண்டு வரிகளுக்காக முன்வைக்கப்படுகின்ற இணக்கக்கூற்றின் மூலம் ஆண்டிற்குரிய வரியின் அளவினை உறுதிப்படுத்தும் முறையொன்று ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2014 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்காக முறையே 06 நிறுவனங்களாலும் 14 நிறுவனங்களாலும் 2016 யூன் 06 ஆந் திகதி வரையிலும் அந்த இணக்கக்கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் லொண்டன் பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டிடமொன்றுக்கு மாதாந்தம் ரூபா 300,000 படி வாடகை செலுத்தும் அடிப்படையில் கூறுவிலை கோரப்படாமலும் நிதிப்பிரமாணம் 835(2)(இ) ஆம் பிரிவு மற்றும் 2010 மே 04 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாகவும் 2014 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்திலிருந்து ஓராண்டு காலத்திற்காக வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. கட்டிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் பயன்பாடற்றுக் காணப்பட்டதுடன்,

வாடகைக்கு எடுத்து 07 மாதங்களின் பின்னர் இந்தக் கட்டிடம் மீண்டும் கையளிக்கப்பட்டிருந்தது. பிடி காசாக ரூபா 1,800,000 மற்றும் 2014 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்திலிருந்து 2015 இன் ஏப்ரல் மாதம் வரை மாதமொன்றிற்கு ரூபா 225,000 வீதம் ரூபா 1,350,000 வீதம் ரூபா 3,150,000 கூட்டுத்தொகை கட்டிட உரிமையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்தக்காலப்பகுதியினுள் நீர்/மின்சார பட்டியல்கள், பாதுகாப்பு செலவினம், பழுதுபார்த்தல் செலவினம் மற்றும் ஏனைய நானாவித செலவினங்களுக்காக ரூபா 3,701,942 தொகையும் கணனி மற்றும் காற்று சீராக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 8,426,486 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. குத்தகைக் காலத்தினுள் வாடகையாக செலுத்தப்பட்ட ரூபா 1,350,000 தொகை சிக்கனமற்ற செலவினமானதுடன் பிடி காசாக செலுத்தப்பட்ட ரூபா 1.8 மில்லியன் தொகையினை 2016 யூன் 27 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்கு உரியதென கருத்திற்கொள்ள முடியாத திரைப்படமொன்றினையும் தொலைக்காட்சி நாடகமொன்றினையும் தயாரிப்பதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் முறையே ரூபா 64,383,813 மற்றும் ரூபா 7,956,000 செலுத்துவதற்கு இணங்கியிருந்ததுடன், திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நாடகத்தின் தயாரிப்பிற்கென முறையே ரூபா 32,191,906 தொகையும் ரூபா 7,160,400 தொகையும் சமூகப்பொறுப்பு செலவினமாகக் கருதி தயாரிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஆம் ஆண்டின் பதவியணி உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்கான பரஸ்பர சந்திப்பு மற்றும் சுற்றுலாக்களுக்காக தங்குமிடமளித்தல், உணவு மற்றும் குடிபானம் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக ரூபா 4,045,841 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.5 ஒப்பந்த நடைமுறை

### 4.5.1 தாமரைக் கோபுர நிர்மாணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்மாண செயன்முன்னேற்றம்:

மேற்படி நிர்மாணத்திற்குரிய ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், நிர்மாண நடவடிக்கைகள் 2012 நவம்பர் 12 ஆந் ஆரம்பிக்கப்பட்டு 2015 மே 12 ஆந் திகதி வரையிலும், அதாவது 912 தினங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அந்த திகதி வரையிலும் கொங்கிறீட் கூடு மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2015 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பந்தக்காலம் 2017 ஒக்தோபர் மாதம் வரை நீடிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததெனினும், அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன் செயற்திட்ட அமுலாக்கல் குழு 2015 சனவரி 02 ஆந் திகதியின் பின்னர் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கூட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்தூக்கி மற்றும் மின்நகர்படிகளை பொருத்துதல்:

(i) ஒப்பந்த உடன்படிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட சிக்கலான பாதையின் (Critical Path) பிரகாரம் 2014 யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 08 மாதங்களினுள் அதாவது 2015 மார்ச் மாதமளவில் இயந்திர மின்சாரம் மற்றும் விசேட உபகரணங்களைப் பொருத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும், எந்தவொரு உபகரணத்தையும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மின்தூக்கி மற்றும் மின்நகர் படிகளை பொருத்துவதற்காக செயற்திட்டத்தின் மதியுரை அலகினால் (PCU) தொழில்நுட்ப மற்றும் நிதிசார் கணிப்பீட்டு அறிக்கை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக 2014 ஒக்தோபர் 13 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததெனினும், அங்கீகாரமானது 2016 மார்ச் 29 ஆந் திகதியே வழங்கப்பட்டிருந்தது. அதன்போது ஐக்கிய அமெரிக்க டொலர் 1,757,898 தொகையான மேலதிக செலவினமும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(iii) மின்தூக்கிகளை பொருத்தும் கொள்வனவு தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளமையால் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கணக்காய்விற்கு அறிவித்திருந்ததெனினும், உரிய குழுவின் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமல் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் மாத்திரம் கணக்காய்விற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்ட சாத்தியவள ஆய்வு:

2012 செம்தம்பர் 17 ஆந் திகதி சீன அரசின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி (The Export – Import Bank of China) மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் லண்டன் வங்கிகளுக்கிடையேயான வட்டி விகிதத்திற்கு (LIBOR) 4 சதவீத நிலையான வட்டி மாற்று வீதமொன்றினை சேர்த்து கடன் வட்டி விகிதம் உருவாக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், சாத்தியவள ஆய்வு அறிக்கையில் கடன் பெறுகைக் கிரய கணிப்பீட்டின் போது நிலையான வட்டி மாற்று வீதம் 3.5 சதவீதமாக கருதப்பட்டிருந்தமையால், செயற்திட்டத்தின் கடன் பெறுகைக் கிரயம் ரூபா 265 மில்லியனால் குறைத்து காட்டப்படுகின்றமை, செயற்திட்டத்தின் காப்புறுதிக்கிரயம் ரூபா 682 மில்லியன் குறைத்து காட்டப்பட்டிருந்தமை மற்றும் செயற்திட்டத்தின் பாதிடப்பட்ட வருமானத்தின் இற்றைப்பெறுமதியை ( Present Value) கணிப்பிடுவதற்கான மூலதன கிரய விகிதமான (கழிவு விகிதம்) 4.32 சதவீதத்திற்குப் பதிலாக 4 சதவீதமான கழிவு விகிதத்தினைப் பயன்படுத்தல் போன்ற பொருண்மையான விலகல்களின் காரணமாக மதிப்பிடப்பட்டிருந்த செயற்திட்டத்தின் அடைவுக் காலம் வேறுபடக்கூடுமென அவதானிக்கப்பட்டது.

4.5.2 அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்காவின் தொலைத்தொடர்பு ஊடக நிலையத்தின் நிர்மாணம்

நிர்மாண ஒப்பந்தப் பெறுமதி ரூபா 2,663 மில்லியனான தொலைத்தொடர்பு ஊடக நிலையத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2014 ஆகஸ்ட் 10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2016 யூலை மாதமளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இந்த செயற்திட்டத்திற்கென செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 508 மில்லியன் ஆனமையால், அது ஒப்பந்தப்பெறுமதியில் 19 சதவீதமாகும். இந்த செயற்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவில் காணப்படாமையால் விடயப்பரப்பினை மட்டுப்படுத்த நேர்ந்திருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்ததெனினும் 2016 யூன் 23 ஆந் திகதியளவில் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 291 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 218 ஆகும். இதன்போது வெற்றிடங்களின் எண்ணிக்கை 89 மற்றும் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 16 ஆகும்.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாமல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குப் புறம்பாக 06 பதவிகளுக்காக 16 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(இ) அமைச்சரவையின் அங்கீகாரமின்றி 05 மதியுரையாளர்கள் நியமிக்கப்பட்டு ரூபா 719,000 கூட்டுத்தொகையான மாதாந்த சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன், இரண்டு மதியுரையாளர்களுக்கு கடமைப் பட்டியல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆணைக்குழுவில் நிலவும் ஊழியப் பற்றாக்குறை கீழ்வரும் விடயங்களுக்கு தாக்கமேற்படுத்தியுள்ளமை பணிப்பாளர் நாயகத்தால் குறிப்பிடப்பட்டிருந்தது.

(i) அலைவரிசை முகாமைத்துவம் தொடர்பில் செயற்படுகின்ற பயிலுனர் உத்தியோகத்தர்களுக்காக நிலவும் பற்றாக்குறை காரணமாக அலைவரிசைக் கட்டணங்களை அறவிடும் பிரமாணங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியாமை,

21

(ii) அலைவரிசைப் பரிசோதனைகளுக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் நாடு முழுவதும் அலைவரிசை பரிசோதனை செய்வதற்கான இயலுமை இல்லாதிருந்தமை, மற்றும்

(iii) வானொலி தொழில்நுட்ப பரிசீலனை நடவடிக்கைகளுக்காக நிபுணத்துவ அறிவினைக் கொண்ட உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையால் 17 வருடங்கள் பழமையான அலைவரிசைப் பரிசோதனை கட்டமைப்பொன்றிற்கு பதிலாக புதிய கட்டமைப்பொன்றினைப் பெற்றுக்கொள்ளும் கொள்வனவு நடவடிக்கை மேற்கொள்ள முடியாமை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2016 மே 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்காக தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் 03 உதவி கணக்காய்வு உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததெனினும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஒரு பெண் உதவிக் கணக்காய்வு உத்தியோகத்தர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் போதியளவான துறைகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிராததுடன், ஆணைக்குழுவின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட தாமரைக் கோபுரத்தின் நிர்மாணச் செயற்திட்டம் மற்றும் ஹம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் தொலைத்தொடர்புகள் ஊடக நிலையங்களை நிர்மாணித்தல் தொடர்பில் கணக்காய்வு பரிசோதனைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

ஆணைக்குழுவால் 2015 மார்ச் 10 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட பெறுமதிக்கும் உள்ளபடியான பெறுமதிக்குமிடையே 10 முதல் 46 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் பாதீட்டில் உள்ளடக்கப்படாத 10 செலவின விடயங்களுக்காக ரூபா 9,309,870,507 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் படி பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகிறது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காமை. |
| (ஆ) கடன் கட்டுப்பாடு | நீண்ட காலமாக நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் காணப்படுகின்றமையும் கடனை அறவிடுவதில் நலிவான நிலை காணப்படுகின்றமையும். |
| (இ) வருமானக் கட்டுப்பாடு | வருமானச் சேகரிப்பிற்காக போதியளவான சட்ட ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிராமை. |
| (ஈ) முதலீடு | திறைசேரியின் அங்கீகாரமின்றி நிலையான வைப்புக்களிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்தல். |
| (உ) படிகளைச் செலுத்துதல் | திறைசேரியின் அங்கீகாரமின்றி ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் படிகள், மிகையூதிய படிகள், தொடர்பாடல் படிகள் மற்றும் வீட்டு வாடகைப் படிகளை செலுத்துதல். |

| | |
|---|---|
| (ஊ) ஒப்பந்த நிர்வாகம் | தாமரைக் கோபுர நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைதல். அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்காவின் தொலைத்தொடர்புகள் ஊடக நிலையத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தைக் கைவிடல். |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.